www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஏப்ரல் - 2006
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



## மூஞ்சப் பாரு!

கொள்கையப் பாக்காதே!

## கொள்ளைக் கூட்டணிகளின் கொள்கை விளக்கங்கள்

படிப்பகம்

www.padippakam.com

# நாகரீகக் கோமாளி: எளிதல்ல அரசியல் சினிமா!

நாட்டுப்புறப் பாடல் பேழைகளை வெளியிடும் ராம்ஜி இசை நிறுவனம் சாதாரண மக்களின் இசையார்வத்தைப் பூர்த்தி செய்வதில் பலரால் பாராட்டையும் அங்கீகாரத்தையும் பெற்றுள்ள ஒரு பிரபலமான நிறுவனம் ஆகும். இதன் நிறுவனர் ராம்ஜி எஸ்.பாலன் மற்றும் அவரது நண்பர்கள் தயாரித்து இயக்கி வெளியிட்டிருக்கும் திரைப்படம் ***நாகரீகக் கோமாளி.***

மதுரையில் கோமாளி எனும் கேபிள் டி.வியை ஒரு இளைஞன் சில நண்பர்களுடன் நடத்தி வருகிறான். அந்த இளைஞர்கள் பிரபல தொலைக்காட்சி சானல்களின் அக்கப்போர் நிகழ்ச்சிகளான பெப்சி உங்கள் சாய்ஸ், சினிமா பார்த்து விட்டு வரும் ரசிகர்களின் விமர்சனம், டயல் எ சாங், கேண்டிட் கேமரா, காமடி டைம் இன்ன பிறவற்றை அப்படியே பிரதியெடுத்து தங்கள் உள்ளூர் சேனலை நடத்தி வருகிறார்கள். நாட்டு நடப்பு ஏதுமறியாத, சமூக அக்கறை ஏதுமற்ற அவர்களது ஜாலியான வாழ்க்கையில் ஒரு பெண் கோபத்துடன் குறுக்கிடுகிறாள். மக்களைக் கேலிக்கூத்தான பிறவிகளாகக் கருதும் அவர்களது வேடிக்கையான மேட்டிமைத்தனத்தைக் குத்திக் காட்டும் அந்தப் பெண்ணைப் பின்தொடர்ந்து அவள் யாரென்று தெரிந்து கொள்கிறான் அந்த கேபிள் டி.வி. இளைஞன்.

அந்தப் பெண் பிழைப்பதற்காகத் தன் தந்தையுடன் தஞ்சையிலிருந்து மதுரைக்கு வந்தவள். அவள் தந்தை உலகமயமாக்கத்தால் சூறையாடப்பட்ட விவசாயிகளில் ஒருவர். ஊரில் கடன் வாங்கி விவசாயம் செய்ய முடியாமல் நசித்துப் போனவர். வாங்கிய கடனை அடைக்கமுடியாமல் பட்டினியுடன் வாடும் அந்தக் குடும்பம் எலிக்கறியைத் தின்று வாழ முயல்கிறது. இறுதியில் வேறு வழியில்லாமல் தற்கொலை செய்து கொள்ள முயல்கிறது. அதில் தந்தை, மகளைத் தவிர மற்றவர்கள் மரித்துப் போகிறார்கள். மரணத்தைத் தழுவ முடியாமல் மீண்டு வந்த அப்பாவும், மகளும் மதுரைக்கு வருகிறார்கள்.

தன் சொந்த வாழ்க்கையைத் துயரமாக்கிய விசயங்களை அரசியல் ரீதியாக உலகவங்கி, அமெரிக்கா, தனியார்மயம், தாராளமயம் முதலியனவற்றின் கேடுகளைத் தன்னைச் சுற்றி உள்ளவர்களிடம், தன் தெருவில், தன் கல்லூரியில் அந்தப் பெண் பேசுகிறாள், பாடுகிறாள், பிரச்சாரம் செய்கிறாள், பிரசுரம் கொடுக்கிறாள். மேலும் கந்துவட்டிக் கொடுமை செய்யும் சிலரை, அவர்களுக்குத் தெரியாமல் ஏதோ ஒரு ஊசி போட்டு கோமா நிலையில் விழ வைக்கிறாள். கடைசியில் போலீசு அவளைக் கைது செய்ய, நீதிமன்றத்தில் ஆவேசமான அரசியல் உரை நிகழ்த்துகிறாள். கடைசிக் காட்சியில் பிணையில் வெளியே வருகிறாள். இடையில் அந்தக் கேபிள் டி வி. இளைஞனையும் மக்களை நல்வழிப்படுத்தும் நிகழ்ச்சிகளை எடுக்குமாறு வற்புறுத்துகிறாள். அந்தப் பெண் மீது காதல் வயப்படும் அவன் இறுதியில் அவள் விரும்பியவாறு மாறுகிறான். உபயோகமான நிகழ்ச்சிகளை எடுக்க ஆரம்பிக்கிறான். இதனால் பதட்டமடையும் அரசாங்கம் அவனது டி.வி-யை மூடுமாறு மாவட்ட ஆட்சியர் மூலமாக உத்தரவு போடுகிறது. இறுதியில் அந்தப் பெண்ணும், அந்த இளைஞனும் தமது கருத்துக்களைப் பரப்ப ***நாகரீகக் கோமாளி*** எனும் பத்திரிகையை ஆரம்பித்து நடத்துகிறார்கள்.

இயக்குநர் விரும்பி உருவாக்கியிருக்கும் இந்தக் கதை திரைக்கதையினூடாக அழுத்தமாக, கோர்வையாக, விறுவிறுப்பாக உருவாக்கப்படவில்லை. தனித்தனிக் காட்சிகளில் எப்படி பெரிய தொலைக்காட்சிகளின் புகழ் பெற்ற நிகழ்ச்சிகள் செட்டப் செய்து எடுக்கப்படுகின்றன என்பதைக் கண்டு சிரிக்கிறோம். தமிழ்ச் சினிமாவில் முதன்முதலாக அமெரிக்கா, உலகமயம், உலகவங்கியின் ஆதிக்கம் குறித்த உரையாடல்களைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறோம். பெரும் முதலீட்டில் எடுக்கப்படும் ஒரு திரைப்படத்தில் தன் கதையினூடாக உலகமயமாக்கத்தின் அரசியல் கேடுகளை மையமாகச் சொல்ல முனைந்திருக்கும் இயக்குநரின் சமூக உணர்வும், நேர்மையும் உண்மையில் மிகவும் பாராட்டிற்குரியது; எளிதில் காணக்கிடைக்காதது. அதேசமயம் இந்த நோக்கம் கதையை அமைத்த விதத்திலும் சரி, சொல்லப்பட்ட விதத்திலும் சரி நிறைவேறவில்லை என்பதை மட்டும் இங்கே சுட்டிக்காட்டுகிறோம்.




கந்து வட்டிக் கொடுமையில் அல்லலுறும் மக்களிடம், நமது நாடும் இப்படித்தான் உலகவங்கியிடம் கடன் வாங்கிச் சிரமப்படுகிறது என்று ஒரு உவமையாகச் சொல்லலாம். என்றாலும், கந்து வட்டிக் கொடூரத்தைத் தமது சொந்த அனுபவத்திலும் உணர்விலும் புரிந்து கொள்ளும் மக்கள் உலகவங்கியின் அடக்குமுறையையும் அவ்வாறே புரிந்து கொள்ள வாய்ப்பில்லை. ஏனெனில் உலகவங்கியின் ஆதிக்கம் பன்முகம் கொண்டது என்பதோடு அது பல தளங்களிலும் விரிந்து செல்கிறது. படத்தில் உலகமய அரசியலின் கேடுகள் வெறும் வார்த்தைகளால் மட்டுமே பிரச்சாரம் செய்யப்படுகிறது. வாழ்க்கையிலிருந்து அவை உணர்த்தப்படவில்லை. அதனால் பார்வையாளர்கள் படத்தில் பல நல்ல சமூக விசயங்கள் இருப்பதாக மேலோட்டமாக அங்கீகரித்துக் கொண்டாலும் அவை என்னவென்று உணராமலேயே திரையரங்கை விட்டு அகலுகிறார்கள். அப்படியென்றால் தாராளமயமாக்கத்தின் அவலத்தை ஒரு திரைப்படத்தின் மூலம் சொல்லவே முடியாதா?

முடியும். அமெரிக்காவும், உலக வங்கியும், பன்னாட்டு நிதி நிறுவனமும், எப்படி மக்கள் வாழ்க்கையை கண்ணுக்குத் தெரியாமல் வெறி கொண்டு அரித்துக் கொண்டிருக்கின்றன என்பதை மக்கள் உணரச் செய்ய வேண்டுமானால் அதற்கு தத்துவ நோக்கும், வாழ்க்கை அனுபவமும்,

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்


படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

- போர்: **23**
- குரல்: **8-11**
- ஜன-ஏப்ரல் 2006

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா US$ 9

*சந்தா படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்*

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி: 044-23718706.
மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@rediffmail.com

அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை.

*அட்டை வடிவமைப்பு:*
ஸ்பார்ட்டகஸ்

## புஷ் வருகை:

# நாற்காலியை அலங்கரிக்கும் நாய்கள்!

**சி**ல முக்கியமான அரசியல் நிகழ்வுகள் மட்டும்தான் அவற்றின் சாரத்தை சுருங்கக் கூறும் சான்றுகளைத் தடயமாக விட்டுச் செல்கின்றன. புஷ்ஷின் இந்திய வருகை அந்த ரகத்தைச் சார்ந்தது. ''புஷ் தங்கியிருந்த நட்சத்திர விடுதியின் அதே தளத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த நாய்களை சார்ஜன்ட் மேஜர், லெப்டினன்ட் என்ற அவற்றின் பதவியின் பெயரால்தான் அழைக்க வேண்டுமெயன்றி நாய்கள் என்று தவறியும் அழைத்துவிடக் கூடாது'' என்று அந்த விடுதிப் பணியாளர்கள் அறிவுறுத்தப்பட்டிருந்ததும், அதனையொட்டி அந்த நாய்களுக்கு வழங்கப்பட்ட ராஜ மரியாதையும், வாசகர்கள் அறிந்த விசயம். புஷ் மலர் வளையம் வைக்கவிருந்ததை முன்னிட்டு காந்தி சமாதியையும் அந்த நாய்கள் மோப்பம் பிடிக்கவே, தேசத்தந்தையையே அவமதித்து விட்டதாக எதிர்க்கட்சிகள் கண்டனம் எழுப்பினர். ''அவைகளை ராணுவ அதிகாரிகளாகக் கருதாமல் நாய்களாகப் பார்க்கும் பார்வைக் கோளாறுதான் இந்தக் கூச்சலுக்குக் காரணம்'' என்று விளக்கமளித்தார் அமைச்சர் சுபோத்காந்த் சகாய்.

அமெரிக்க நாய்களுக்கு வழங்கப்பட்ட இந்த மரியாதை வங்கதேச, சோமாலிய நாட்டு நாய்களுக்கு வழங்கப்படுமா? மரபை மீறி அமெரிக்க அதிபரை வரவேற்க விமான நிலையத்திற்குச் சென்றதைப் போல மற்ற அதிபர்களை வரவேற்பதற்கும் மன்மோகன் சிங் செல்வாரா? விமான நிலையத்தில் இந்தியப் பாதுகாப்புத் துறை ஆலோசகர் அறிமுகப்படுத்தப்பட்டவுடனே, ''எனக்கு அந்த ஒப்பந்தம் வேண்டும்'' என்று அவர் காதில் கிசுகிசுத்தாராம் புஷ். வீதியுலா செல்லும் மன்னர்கள் ''எனக்கு அந்த பெண் வேண்டும்'' என்று அமைச்சனின் காதில் கிசுகிசுப்பதைப் போல! இவை வெறும் சம்பவங்கள் அல்ல; வெட்கம் மானமில்லாத அமெரிக்க அடிமைத்தனத்திற்கு இந்திய ஆளும் வர்க்கங்கள் எந்த அளவிற்குத் தயாராக இருக்கின்றன என்பதற்கு இவை சான்றுகள்.

விரும்பியவையனைத்தும் புஷ்ஷுக்குக் கிடைத்துவிட்டன. இதுநாள் வரை தேசவெறியைத் தூண்டுவதற்கு பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்த 'அணுகுண்டு' புஸ்வாணமாகிவிட்டது. அணுசக்தி ஒப்பந்தம் குறித்த மன்மோகன் சிங்கின் பித்தலாட்டங்கள் பாராளுமன்றத்தில் அரங்கேறிக் கொண்டிருக்கும்போதே, அமெரிக்காவில் குட்டு உடைந்து விட்டது. ''2015-ஆம் ஆண்டுக்குள் இந்திய அணுசக்தித் துறையின் 90% நமது கண்காணிப்பின் கீழ் வந்து விடும்'' என்று அமெரிக்க காங்கிரசுக்கு உறுதி அளித்திருக்கிறார் வெளியுறவுத் துறைச் செயலர் பர்ன்ஸ். 90,000 கோடி ரூபாய்க்கான அணுமின் நிலைய ஏற்றுமதியைக் குறிவைத்து ஜி.இ., வெஸ்டிங்க்டன் ஹவுஸ் போன்ற அமெரிக்க பன்னாட்டு நிறுவன அதிகாரிகள் இந்திய அரசுடன் பேசி வருகிறார்கள். தனியார் அணுமின் நிலையம் அமைக்க ரத்தன் டாடா ஆசை வெளியிட்டுள்ளார். 45,000 கோடிக்கு ஆயுத இறக்குமதி, மான்சான்டோ, அம்பானி போன்ற 'விவசாயிகள்' துவங்கவிருக்கும் நிரந்தரப் பசுமைப் புரட்சி, வால்மார்ட்டின் சில்லறை வணிகம் என்று எல்லாத் துறைகளையும் சூறையாடிச் சென்றிருக்கிறது இந்த அமெரிக்க சுனாமி. ஷியா முசுலீம்கள் அதிகம் வாழும் ஐதராபாத்தில் தனது கான்சல் அலுவலகத்தை அமைப்பதன் மூலம், சி.ஐ.ஏ. உளவாளிகளை தூதரக அதிகாரிகளாக்கவும், இரானுக்கு எதிரான தனது சீர்குலைவு நடவடிக்கைகளுக்கு அதனைத் தளமாகப் பயன்படுத்தவும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இந்த அடிமைத்தனத்திற்கு இந்திய மக்கள் உடன்படமாட்டார்கள் என்பதை உரக்கக் கூறின புஷ்ஷுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள். டில்லியில் தொடங்கி இந்தியச் சிறு நகரங்கள் வரை எந்த அமெரிக்க அதிபருக்கெதிராகவும் நாடெங்கும் இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதில்லை. ஆனால் அடிமை மோகத்தில் ஆழ்ந்திருந்த ஆளும் வர்க்கங்களும் அவர்களது ஊடகங்களும் மக்கள் போராட்டங்களின் மீது வெறுப்பை உமிழ்ந்தன. ''30 கோடி நடுத்தர வர்க்கத்தைக் கொண்ட சந்தை'' என்று இந்தியாவைப் பற்றி நாக்கில் எச்சில் ஒழுகப் பலமுறை கூறினார் புஷ். மீதமுள்ள 90 கோடி மக்களைக் குப்பைகளாகவும், அவர்களது குரலுக்கு பதில் சொல்லவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தும் 'ஜனநாயக முறையை' ஒழித்துக் கட்டப்பட வேண்டிய தொந்திரவாகவுமே இந்திய ஆளும் வர்க்கங்களும் கருதுகின்றன.

மக்களின் ஜனநாயக உரிமைகளும் நாட்டின் இறையாண்மையும் வேறு வேறான விசயங்கள் அல்ல என்பதை மறுகாலனியாதிக்கம் மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்துகிறது. 'அமெரிக்க நாயே வெளியேறு' என்று புஷ்ஷுக்கு எதிராக நாடெங்கும் எழுந்த முழக்கம், 'அடிமை நாய்களே வெளியேறுங்கள்' என்று விரிவடைய வேண்டும். நாய்களாக நடத்தப்பட வேண்டிய மனிதர்களை இனம் காட்டவும் வேண்டும். ●

படிப்பகம்

www.padippakam.com

# மூஞ்சப் பாரு!

## கொள்கையப் பார்க்காதே!

## கொள்ளைக் கூட்டணிகளின் கொள்கை விளக்கங்கள்

"இது கொள்கைக் கூட்டணி யல்ல, அரசியல் கூட்டணி" என்றார் போயஸ் தோட்டத்தை விட்டுவெளி யில் வந்த வை.கோபால்சாமி. கொள்கை என்றால் என்ன? அரசியல் என்றால் என்ன?

இதற்கு 1999-இலேயே திருமா வளவன் பதில் சொல்லியிருக்கிறார். "தேர்தல் புறக்கணிப்பு எங்கள் கோட் பாடு - பங்கேற்பு என்பது நிலைப் பாடு" என்றார்.

திருமாவை வை.கோவுக்கு மொழி பெயர்த்தால், கொள்கை என்பது கோட் பாடு, அரசியல் என்பது நிலைப்பாடு என்று பொருள் வருகிறது.

இன்று போயஸ் தோட்டத்தை விட்டு வெளியே வந்தவுடன், "நிலைப் பாடு என்பது வேறு, தேர்தல் உடன் பாடு என்பது வேறு" என்று புது விளக் கம் அளித்திருக்கிறார். திருமா. அதா வது அரசியல் வேறு கூட்டணி வேறு என்று இவர் விளக்கமளிக்கிறார்.

திருமா போயசு தோட்டத்திற்குப் போனது பற்றி ராமதாசு 'வருத்தம்' மட்டுமே வெளியிட்டார். மற்றபடி தங்களிருவரையும் கொள்கை ரீதி யாகப் பிணைத்திருக்கும் தமிழ்க் கூட்ட ணிக்கும் இந்தப் பதவிக் கூட்டணிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தெளிவுபடுத்தி விட்டார்.

"தனது கட்சிக்கு நல்லது என்று அவர் கருதியிருக்கலாம்" என்று வை.கோ.வின் கூட்டணித் தாவலை வருணித்தார் வ.கம்யூ தலைவர் தா.பாண்டியன். தானும் போயசு தோட் டத்தின் பக்கம் நாளை தாவ நேரிடும் என்ற எதிர்காலம் குறித்த கவலை அவரது சொற்களில் பளிச்சிட்டது.

"முதலை வாயில் சிக்கிவிட்டார்" என வருத்தப்பட்டார் மார்க்சிஸ்டு தலைவர். நாளை மதச்சார்பற்ற கூட் டணி அமைக்க நேர்ந்து அதில் 4 சீட்டு குறைந்தால் வை.கோ.வை ஜோக்கர் கார்டாகப் பயன்படுத்திக் கொள்ளக் கிடைக்கும் வாய்ப்பை நழுவவிட மார்க்சிஸ்டுகள் விரும்பவில்லை.

"போன தேர்தல்ல பாரதிய ஜன தாவை எதிர்த்துப் பேசினேன். இந்தத் தேர்தல்ல ஆதரிச்சுப் பேசறேன். எனக்கே அலுத்துப் போச்சுய்யா. ஆனா தலைவா, அடுத்த வாட்டி இவ ளோட (ஜெயலலிதாவோடு) கூட்டணி வெச்சுடாதீங்க. நான் தீக்குளிச்சிடு வேன்." என்று 1999 நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின்போது பேசினார் தீப்பொறி ஆறுமுகம். இன்றோ அவரே புரட்சித் தலைவியின் பொற்பாதங்க ளில் கிடக்கிறார்.

இன்றைய தி.மு.க.வின் கூட்டாளி கள்தான் 2001-இல் அன்புச் சகோதரி யின் அராஜக ஆட்சியை அரும்பாடு பட்டுக் கொண்டு வந்தனர். அதே போல, 5 ஆண்டுப் பதவிக்காலம் முடிந்து 'வணக்கம்' போட்டு லைட்டும் போட்ட பிறகுதான் பாரதிய ஜனதா வின் மதவெறி முகம் தி.மு.க.வுக்குத் தெரியவந்தது.

'நெருநல் உளனொருவன் இன்றில் லையென்னும் பெருமையுடைத்திவ் வுலகு' என்பதை 'பெருமையுடைத்து இத்தேர்தல்' என்று திருத்தி வாசிக்க லாம். நேற்றெங்கிருந்தாய், நாளை எங் கிருப்பாய் என்ற கேள்விகளுக்குப் பொருளேயில்லாத அத்வைதப் பெரு வெளியில் கலந்து கொண்டிருக்கிறது தேர்தல் அரசியல்.

அதனால்தான் இத்தகைய அஞ்ஞா னங்களுக்கெல்லாம் ஜெயலலிதா எப் போதுமே ஆட்படுவதில்லை. "நடந் ததை மறப்போம் - கதவு திறந்திருக்கி றது" என்ற பிரகடனத்தின் மூலம் ஒரு பரந்த கூட்டணிக்கு அடிப்படையாக அமையும் கொள்கையை அவர் வெளி யிட்டிருக்கிறார். கூட்டுத் தொகையில் பெரும்பான்மையைத் தருகின்ற எந்தக் கொள்கையும் அவரைப் பொறுத்த வரை நல்ல கொள்கையே.

மேலும் தேர்தலுக்கு முந்தைய கூட் டணியைத் தீர்மானிக்கும் கொள்கை யும், பிந்தைய கூட்டணியைத் தீர்மா னிக்கும் கொள்கையும் வேறு வேறா னவை என்பதும், அந்தக் கொள்கை களை வைப்பதற்குத் தனித்தனி சூட் கேசுகள் ஒதுக்கப்பட வேண்டும் என்ற உண்மையும் அவருக்குத் தெரியும். ஆகவேதான் கொள்கை விவகாரங்கள் குறித்த சில்லறைச் சச்சரவுகளில் அவர் எப்போதுமே பங்கேற்பதில்லை.

"கொள்கை கொள்கை என்று பேசிக் கொண்டிருந்தால் கட்சியை வளர்க்க முடியாது. முதலில் கட்சியை உறுதிப் படுத்த வேண்டும்" என்பத னால்தான் இப்படியொரு முடிவை எடுத்ததாக வை.கோ. விளக்கம் சொல் லியிருக்கிறார். கட்சியை உறுதிப்படுத் துவது என்றால் என்ன?" மாவட்டச் செயலாளர்களுக்கு தலா ஒரு எம்.எல்.ஏ. சீட்டாவது கிடைக்க ஏற் பாடு செய்து, அடுத்த 5 ஆண்டுகளில் அவர்களும் அவர்களுடைய கைத்தடி களும் வீடு, கார், நிலம், பஸ், சினிமா தியேட்டர் என்று செட்டில் ஆவதை உறுதிப்படுத்துவது; இந்த உறுதியான அடித்தளத்தின் மீது கட்சியை நிறுத்தி அதன் மீது கொள்கையை வளர்த்துக் கொள்வது" என்பதுதான் வை.கோ. கூறும் விளக்கத்தின் உண்மையான பொருள்.

இந்த விளக்கம் எல்லாக் கட்சிக ளுக்கும் பொருந்தும் என்பது மட்டு மல்ல, எப்படி அரசியல் பண்ணுவது' என்பது குறித்து சர்வ கட்சித் தொண்டர் களும் கொண்டிருக்கும் கருத்தும் இது தான். "இத்தனை நாள் அரசியலில் இருந்து என்ன பயன்? நாங்களும் நாலு காசு பார்க்க வேண்டாமா?" என்ற கேள்வியை தத்தம் கட்சிப் பொதுக் குழுக்களில் அவர்கள் வெளிப்படை யாகவே எழுப்பத்தான் செய்கிறார்கள். அடிக்கும் கொள்ளை முறையாகப் பகிர்ந்தளிக்கப்படாத போது 'உட்கட்சி ஜனநாயகத்துக்காக'க் குரல் கொடுக்கி றார்கள். கட்சியில் தன்னை 'வளர' விடு வதில்லை என்று பதவியிலிருப்போ ரைக் குற்றம் சாட்டுகிறார்கள்.

என்றாலும், தேர்தலின் நோக்கம் குறித்த இந்த உண்மைகளை அவர்கள் மக்களிடம் வெளிப்படையாகக் கூறுவ தில்லை. மக்களுக்கு அரைகுறையா கவோ, முழுமையாகவோ இந்த உண் மைகள் தெரியும் என்பதை அவர்கள் அறிவார்கள். ஆளை ரெண்டு துண் டாக அறுத்துப் பிறகு ஒட்ட வைக்கி றான் வித்தைக்காரன். அது தந்திரம் என்று பார்வையாளர்கள் அறிந்து


படிப்பகம்

www.padippakam.com

தானிருக்கிறார்கள். அதற்காக அந்த ரகசியத்தை வித்தைக்காரன் வெளியிட்டு விடுவதில்லையே! அந்த மயிர்க் கூச்செறியும் காட்சியில் ரசிகன் கண்களை மூடிக்கொண்டு நாற்காலியை இறுகப் பற்றிக் கொள்ளும்வரைதானே வித்தைக்குக் கூட்டம் சேரும்!

தேர்தல் என்ற இந்த வித்தைக்குக் கூட்டம் சேருவதெப்படி? இந்தக் கேள்விக்குத்தான் நமக்கு விடை வேண்டும்.

●●●

இந்தத் தேர்தல் அரசியல் குறித்து தேநீர்க் கடைகளில் நடைபெறும் விவாதங்களைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். ''வைகோ வேறென்ன சார் பண்ண முடியும், அவரும் கட்சி வளர்க்க வேண்டாமா?'' ''கலைஞர் இல்லன்னா நீ பொடாவிலேர்ந்து வெளியே வந்திருப்பியா, கொஞ்சமாவது நன்றி வாணாம்?'' ''கலைஞர் பெரிய ராஜதந்திரிங்கிறாங்க, அந்தம்மா பாரு சைலண்டா காய் நவுத்தி வேலய முடிச்சிடுச்சி'' ''சும்மா சொல்லக்கூடாது, விஜயகாந்த் போல்டான ஆளுய்யா, ரஜினிதான் இதோ வாரேன், அதோ வாரேன்னு கெடுத்துகிட்டாரு'' ''அவன் பேசாம அம்மாவோட கூட்டணி வச்சா 20,30 சீட்டு ஜெயிச்சிட்டு அப்புறமா அடுத்த தேர்தலுக்குள்ள கட்சிய வளர்த்துக்கலாம். தனியா நின்னா டெபாசிட் போய் ஒரேயடியா மங்களம் பாடிட வேண்டியதுதான்.''

அரசியல் ஆர்வம் கொண்டவர்கள் பத்திரிகை படிப்பவர்கள் என்று சொல்லப்படும் பிரிவினர் அரசியலை விவாதிக்கும் முறை இதுதான். இவர்கள் தேர்தல் முடிவு பற்றி ஆரூடம் சொல்கிறார்கள். 'பொதுமக்களின்' மனநிலை பற்றி உளவியல் பகுப்பாய்வு செய்கிறார்கள். எப்படிக் கட்சி நடத்தவேண்டும் என்று ஐடியா கொடுக்கிறார்கள். கூட்டணி பேரங்களில் யார் கதாநாயகன், யார் வில்லன் என்பது பற்றி காரசாரமாக வாதாடுகிறார்கள்.

எப்படி எடுத்திருந்தால் படம் வெற்றி பெற்றிருக்கும் என்று சினிமாக் கொட்டகை வாசலில் நின்றபடியே இயக்குநராக மாறும் ரசிகனைப் போலவே, எப்படி அரசியல் பண்ண வேண்டும் என்று இவர்கள் அரசியல்வாதிகளுக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள்.

ஒரு சின்ன மெகா சீரியலைப் போல ஓடுகிறது தேர்தல். தொலைக்காட்சி சீரியலில் யார் கதாநாயகன், யார் வில்லன், மற்ற கதாபாத்திரங்கள் யார் யார் என்பதை கதாசிரியர் தீர்மானித்து விடுவதால் ரசிகனின் 'கருத்துரிமை' அங்கே கட்டுப்படுத்தப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட கதாபாத்திரம் நாளைக்கு என்ன செய்யப் போகிறது என்பதை ஊகிக்கும் வரம்பிற்குள் ரசிகனின் 'படைப்புத்திறன்' முடக்கப்பட்டு விடுகிறது.

தேர்தல் எனும் சீரியலோ நாற்புறமும் சுற்றி வளைத்து மக்களைத் தனக்குள் கவர்ந்திழுக்கிறது. காலை - மாலைப் பத்திரிகைகள், வார இதழ்கள், வாரமிருமுறை இதழ்கள், தொலைக்காட்சிகள், பொதுக்கூட்டங்கள் போன்றவையனைத்தும் ஒரே கதையை தத்தம் நோக்கில் விதம் விதமாகச் சொல்கின்றன. ஒரு இதழில் வைகோ கதாநாயகன், இன்னொரு இதழில் வில்லன், வேறொரு இதழிலோ கோமாளி. திடீர் திருப்பங்கள், திரைமறைவுப் பேரங்கள், பேட்டிகள் - பேட்டிகளுக்கான பொழிப்புரைகள் என்று விரிந்து சூழும் இந்த சீரியலில் ரசிகன் அவனுக்கே தெரியாமல் கதாபாத்திரமாக மாற்றப்பட்டு விடுகிறான்.

> **இந்த சினை மக்கள் ஒத்துக்குவானா? என்று சினிமாக்காரர்கள் நடத்தும் ஸ்டோரி டிஸ்கசனுக்கும், ''இந்தக் கூட்டணி கிளிக் ஆகுமா?'' என்று ஓட்டுக்கட்சிகள் படுகின்ற கவலைக்கும் அடிப்படையில் எந்த வேறுபாடும் இல்லை.**

கட்சி கட்டிக் கொண்டு வாதாடுகிறான், தனது ஆதர்ச பாத்திரங்களின் சார்பில் சிந்திக்கிறான், கோபம் கொள்கிறான், மகிழ்ச்சியடைகிறான், தன்னுடைய ஊகங்கள் பலிக்க வேண்டுமே யென்று தவிப்பும் கொள்கிறான். கலைஞர், ஜெ., வை.கோ., திருமா., ராமதாசு ஆகியோரது பிரச்சினைகளைத் தனது சொந்தப் பிரச்சினையாகவும், அவர்களது நியாயங்களைத் தனது சொந்த நியாயமாகவும் உணர்ந்து வாதாடுகிறார்கள் அரசியல் ரசிகர்கள்.

ஆனால், எதார்த்த வாழ்க்கையின் கொடுங்கரங்கள் அவர்களை அவ்வப்போது உசுப்பி விடுகின்றன. ''ரேசன் கடைக்குப் போக வேண்டும், வேலைக்கு நேரமாகி விட்டது. பைனான்சுக்காரனுக்குப் பதில் சொல்ல வேண்டும், கரண்டு பில் கட்ட கடன் வாங்க வேண்டும்'' என்ற உண்மைகள் அவர்களைத் தீண்டியவுடனே விழித்துக் கொள்கிறார்கள். ''எவன் கதையப் பேசி நமக்கு என்னா ஆவப்போகுதுங்க, நாம உழைச்சாதான் நமக்குச் சோறு, என்னா சொல்றீங்க'' என்ற வசனத்துடன் அன்றைய சீரியலை முடித்துக் கொள்கிறார்கள். விட்ட இடத்திலிருந்து மீண்டும் மறுநாள் தொடர்கிறது சீரியல்.

இவ்வாறு விவாதம் நடத்துபவர்கள் கட்சிக்காரர்களோ அல்லது கட்சி ஆதரவாளர்களோ மட்டுமல்ல; எந்தக் கட்சியையும் சாராதவர்களென்றும் சரி தவறுகளைச் சீர்தூக்கிப் பார்த்து நல்ல கட்சிக்கும் நல்ல வேட்பாளருக்கும் வாக்களிப்பவர்களென்றும் கூறப்படும் பொதுமக்கள். தொழிலாளர்கள், விவசாயிகள், சிறுவணிகர்கள், கைவினைஞர்கள், அரசு ஊழியர்கள், நடுத்தர வர்க்கத்தினர் என அனைவரும் இதில் உண்டு.

எந்தத் தேநீர்க் கடையிலாவது எப்போதாவது இவர்கள் தங்களது வாழ்க்கையைச் சூறையாடும் அரசின் கொள்கைகளைப் பற்றியோ, அவற்றில் பல்வேறு கட்சிகளின் நிலைபாடு பற்றியோ இத்தனை ஈடுபாட்டுடனும் உணர்ச்சி பூர்வமாகவும் விவாதிப்பதைக் கண்டிருக்கிறீர்களா?

தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் நலனுக்காக நுழைவுத் தேர்வை ரத்து செய்ய வேண்டுமென்கிறார் ராமதாசு. இதைக் காட்டிலும் சுயநிதிக் கல்லூரிகளையே ரத்து செய்து அரசுக் கல்லூரிகளாக்குவது அம்மாணவர்களுக்கு நல்லதில்லையா, இந்த எளிய உண்மை அய்யாவுக்கு விளங்காமல் போனதெப்படி?

கேபிள் டி.வி.யை அரசுடைமையாக்கும் சட்டம் வந்தவுடனே கவர்னரைப் பார்க்கச் சென்ற கலைஞர் விமான நிலையங்களைத் தனியார்மயமாக்கும் முடிவை மத்திய அரசு எடுத்த போது யாரைச் சென்று சந்தித்தார்?

13 தொகுதிகளைப் பெறுவதற்காக கருணாநிதியிடம் மாபெரும் போராட்டம் நடத்திய மார்க்சிஸ்டுகள், ''2 தொகுதிகளை வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள், ஆனால் தாமிர

www.padippakam.com



**உறவும் பிரிவும் கொள்கையிலா கொள்ளையிலா?**

வருணியை கோகோ கோலாவுக்கு கொடுத்து விடாதீர்கள்'' என்று மன்றாடவாவது செய்தார்களா?

பத்தைப் பதின்மூன்றாக்கும் கவுரவப் பிரச்சினைக்காக அறிவாலயத்திற்குப் பாதயாத்திரை போனார் தா.பாண்டியன். பணிநிரந்தரமும், தொழிற்சங்க உரிமையும் இல்லாமல் பன்னாட்டு கம்பெனிகளில் கொத்தடிமைகளாகப் பணிபுரியும் பாட்டாளி வர்க்கம் தன்னுடைய கவுரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள எந்தக் கோயிலுக்குத் தீர்த்த யாத்திரை போவது?

9 தொகுதிகளை திருமாவுக்கு ஒதுக்கியது இருக்கட்டும். பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி சாதிவெறியர்களை உள்ளே தள்ளுவதாகவும், தலித்துகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நிரப்பப்படாத அரசுப் பணியிடங்களை நிரப்புவதாகவும் சில கொசுறு வாக்குறுதிகளையாவது தலித் மக்களுக்கு அம்மா போட்டுக் கொடுத்திருக்கிறாரா?

இவையெல்லாம் மக்களின் அறிவுக்கெட்டாத பிரச்சினைகளோ, அவர்களால் எழுப்பமுடியாத கேள்விகளோ அல்ல. எனினும் இந்தக் கேள்விகளுக்கும் தேர்தலுக்கும் தொடர்பிருப்பதாக அவர்கள் சிந்திப்பதில்லை. அத்தகைய அபாயகரமான 'தீவிரவாத' சிந்தனைக்குச் செவிமடுத்து விடாமல் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை முதலாளித்துவ ஊடகங்களும், கட்சிகளும் ஏற்றிருக்கின்றன.

●●●

**ஜ**னநாயக சோசலிசம், லோகியா சோசலிசம், திராவிட நாடு என்ற கொள்கை வேடங்களுடன் தொடங்கி, அவையனைத்தும் கலைந்து 'அரசு சன்மானங்களைப் பொறுக்கித் தின்பதற்கான கூச்சநாச்சமற்ற போட்டிதான் தேர்தல்' என்ற நிலையை எய்தியிருக்கும் தருணத்தில், இந்தியத் தேர்தல் ஜனநாயகம் மறுகாலனியாக்கத்தைச் சந்தித்திருக்கிறது.

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்றழைக்கப்படும் மறுகாலனியாக்கத்தை அமல்படுத்துவதில் போட்டியிடும் இரண்டு கூட்டணிகளிடையே எவ்விதக் கொள்கை வேறுபாடும் இல்லை. விவசாயத்தையும் உள்நாட்டுத் தொழில்களையும், தொழிலாளர் உரிமைகளையும் 'மென்னியை நெறித்துக் கொன்று விடலாம்' என்கிறார் புரட்சித்தலைவி. 'மருந்து வைத்துக் கொல்லலாம்' என்கிறார் கலைஞர். 'பட்டினி போட்டுக் கொல்வதுதான் மனிதாபிமான முறை' என்கிறார்கள் போலி கம்யூனிஸ்டுகள். இந்தக் 'கொள்கை வேறுபாட்டை' மக்களுக்குப் புரிய வைக்க அவர்கள் முயற்சித்தால் அவர்களுக்கு நேரக்கூடிய கதி என்ன?

''சில்லறை வணிகத்தில் பன்னாட்டு நிறுவனங்களை அனுமதிக்கக் கூடாது, வாட் வரி விதிப்பு கூடாது, தண்ணீர் வியாபாரம் கூடாது, கோக்-பெப்சியைத் தடை செய்ய வேண்டும்'' என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து, இக்கோரிக்கைகளை நிறைவேற்றும் கட்சிக்குத்தான் வணிகர்கள் வாக்களிப்பார்கள் என்று தமிழ்நாடு வணிகர் சங்கம் அறிவித்தது. எந்தக் கட்சியும் இக்கோரிக்கைகளுக்குச் செவிமடுக்காததால் ''எல்லா கட்சிகளிலிருந்தும் வணிகர்கள் வெளியேறவேண்டும்'' என இப்போது அறைகூவல் விடுத்துள்ளது.

விளைபொருளுக்கு விலை நிர்ணயம் கோரி விவசாயிகளும், சுயநிதிக் கல்லூரிகளை அரசே ஏற்கச் சொல்லி மாணவர்களும், பன்னாட்டு நிறுவனங்களில் தொழிற்சங்க உரிமை கோரி தொழிலாளர்களும், தனியார்மயத்தை நிறுத்தவேண்டுமென்று கோரி பொதுத்துறை ஊழியர்களும், ஆளெடுப்புத் தடைச் சட்டத்தை அகற்றவேண்டுமென வேலையில்லா இளைஞர்களும் கோரிக்கை வைத்து, இந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் கட்சிக்குத்தான் வாக்களிப்போம் என்றும் அறிவித்திருந்தால், வணிகர் சங்கத்திற்கு நேர்ந்த கதிதான் எல்லோருக்கும் நேர்ந்திருக்கும்.

பெரும்பான்மை மக்களுக்கு உணவு, வேலை, கல்வி, மருத்துவம், குடிநீர் ஆகிய அனைத்து உரிமைகளையும் மறுத்து, அவர்களை வறுமைக்கும் பட்டினிச் சாவுக்கும் தற்கொலைக்கும் தள்ளுகின்ற இந்தத் தனியார்மயத் தாராளமயக் கொள்கைகளைப் பெரும்பான்மை மக்களின் ஒப்புதலைப் பெற்று (ஜனநாயக பூர்வமான முறையில்) அமல்படுத்துவது சாத்தியமற்றது என்பது ஆளும் வர்க்கத்துக்குத் தெரியும். எனவேதான் கள்ளத்தனமான வழிமுறைகளின் மூலம் மட்டுமே இவை திணிக்கப்படுகின்றன.

1994-இல் நாட்டிற்கும் நாடாளுமன்றத்திற்கும் கூடத் தெரியாமல் நரசிம்மராவ் அரசு *காட்* ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது முதல், இந்திய - அமெரிக்க இராணுவ ஒப்பந்தத்தில் யாருக்கும் தெரியாமல் மன்மோகன் சிங் கையெழுத்திட்டது வரை இந்தக் கள்ளத்தனம் பல்வேறு வடிவங்களில் தொடர்கிறது.

●●●

**எ**னினும் கருத்துரிமையும், அதனடிப்படையில் நடத்தப்படும் சுதந்திரமான விவாதமும் இருந்தால்தானே மக்கள் இதனை ஜனநாயகம் என்று நம்புவார்கள்! ஆகவே, தான் அனுமதிக்கும் சட்டகத்திற்குள் விவாதம் நடத்த வாக்காளர்களுக்குப் 'பூரண' சுதந்திரத்தையும் வழங்கியிருக்கின்றன ஆளும் வர்க்கங்கள்.

நுகர்வோனின் 'தெரிவு செய்யும் உரிமை'யை சாத்தியப்படுத்துவதற்காகப் பலவிதமான சோப்புகளும் பவுடர்களும் சந்தையில் அடுக்கப்பட்டிருப்பதைப் போலவே, வாக்காளனின் தெரிவு செய்யும் உரிமையை அங்கீகரிக்குமுகமாக தேர்தல் சந்தையில் பல வண்ணக் கட்சிகளைப் பார்வைக்கும் வைத்திருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

''கொள்கை ரீதியில் தங்களிடையே எவ்வித வேறுபாடும் இல்லாதபோது, தம்மை வித்தியாசமானவர்களாக மக்களிடம் சித்தரித்துக் கொள்வது எப்படி? மக்கள் தம் சொந்தக் கோரிக்கைகள் பற்றி சிந்திப்பதை மறந்து, தம் தலைவர்களின் கோரிக்கைகளையே தமது சொந்தக் கோரிக்கைகளாகக் கருதி விவாதிக்குமாறு செய்வது எப்படி?'' இவை ஓட்டுக் கட்சிகளின் முன் உள்ள கேள்விகள்.

கொள்கை வேறுபாடுகள் பற்றி மக்கள் கஷ்டப்பட்டுச் சிந்திக்கத் தேவையில்லாத சூழ்நிலையை அவர்கள் ஏற்கெனவே உருவாக்கி விட்டார்கள். நெடுஞ்சாலைச் சுவர்களிலும் சுவரொட்டிகளிலும், பானர்களிலும் தரிசனம் தரும் ''அய்யா, அம்மா, திருமா, கலைஞர், வை.கோ. தளபதி'' போன்ற 'கொள்கை'களில் ஒன்றை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

சுவரொட்டியில் உள்ள செய்தி கலியாணமா, கருமாதியா என்பதைப் பற்றி யாரும் கவலைப்படத் தேவையில்லை. அது அம்மா கட்சியின் வட்டச் செயலர் பெண்ணுக்கு நடக்கும் பூப்பு நீராட்டு விழாவாகக் கூட இருக்கலாம். அய்யா மரம் நடுவதாக இருக்கலாம். வைகோ ரத்ததானம் கொடுப்பதாகவும் இருக்கலாம். அவர்கள் என்ன செய்கிறார்கள், என்ன சொல்கிறார்கள் என்பதைப் பற்றி யாருக்கென்ன கவலை? 'அம்மா', 'அய்யா' என்பதே முக்கியம்.

குளோசப் காட்சியில் கொள்கைப் பின்புலத்தைக் காண முடியுமா? பெஞ்சு டிக்கெட்டில் உட்கார்ந்து அண்ணாந்து படம் பார்ப்பவனுக்கு எல்லா காட்சிகளும் குளோசப் காட்சிகளே. ரோட்டில் நடந்தால் இந்தத் தலைவர்களின் பெயர்களைக் கடந்து செல்வதற்குள் நமக்குக் கால் வலிக்கிறது. அவர்களது விசுவரூபத்தை அண்ணாந்து பார்க்க முயன்றாலோ கழுத்து வலிக்கிறது.

அர்ச்சுனனின் கேள்விக்குத் தனது விசுவரூபத்தால் விடை சொன்ன கண்ண பரமாத்மாவைப் போல, 'நானே கொள்கை, நானே மக்கள்' என்கிறார்கள் தலைவர்கள். ஆகவே தலைவர்களின் சோகமே மக்களின் சோகம்.

''தள்ளாத வயதிலும் வேலூர் சிறை வாசலில் கால் வலிக்கக் காத்திருந்து உன்னைக் காண வந்த தலைவனின் முதுகில் குத்தி விட்டாயே துரோகி!'' என்று சென்டிமென்டு குண்டை வைகோவின் மீது வீசுகிறது தி.மு.க. சீட்டுக் கணக்கைச் சொல்லி இந்த சென்டிமென்டு குண்டைத் தகர்க்க முடியாது என்பதால் ''வேண்டாத விருந்தாளியாக அறிவாலயத்தின் முன் காத்துக் கிடந்தேன்'' என்று கண்ணீர் விடுகிறார் வை.கோ.

குண்டர் சட்டம், பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, திண்ணியம் என்ற அனைத்துத் தடைகளையும் தாண்டி அம்மாவைச் சரண் புகுந்த திருமாவுக்கும் சென்டிமென்ட் கை கொடுக்கிறது. ''தனியாகத் தொகுதி கேட்டால் கலைஞர் பா.ம.க.வின் எச்சில் இலையில் சோறு தின்னச் சொல்கிறார்'' என்ற திருமாவின் சோக உருவகம், தலித் மக்களின் தீண்டாமைச் சோகத்தை பதிலி செய்கிறது. திண்ணியம் சோகத்தைக் கூட ஒன்றுமில்லாததாக்கி விடுகிறது.

**நெடுஞ்சாலைச் சுவர்களிலும் சுவரொட்டிகளிலும், பானர்களிலும் தரிசனம் தரும் ''அய்யா, அம்மா, திருமா, கலைஞர், வை.கோ. தளபதி'' போன்ற 'கொள்கை'களில் ஒன்றை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.**

இவற்றில் எது கிளிசரின் கண்ணீர் எது உண்மைக் கண்ணீர் என்று பகுத்து அறியும் பொறுப்பும், இவர்களுடைய கண்ணீருக்குப் பதில் சொல்ல வேண்டிய தார்மீகக் கடமையும் இதோ, வாக்காளர்கள் மீது சுமத்தப்பட்டு விட்டது. காண்டிராக்டையும் கட்டைப் பஞ்சாயத்தையும் கைப்பற்றுவதற்காக நடக்கும் ஒரு மோதலில் கண்ணீரையும் சென்டிமென்டையும் புகுத்தி இப்படி ஒரு திரைக்கதை தயாரிக்க முடியுமென்பதை 'சென்டிமென்ட்' சக்ரவர்த்தியான இயக்குநர் ஃபாசில் கூட நினைத்துப் பார்க்க முடியாது.

அகிலமனைத்தையும் தன்னுள் அடக்கும் 'சிவாய நம' என்பதும் கூட ஐந்தெழுத்து மந்திரம். ஆனால் பாமர மக்கள் கொள்கை விளக்கம் பெற 5 எழுத்துக்கள் அதிகம் என்பதால் அதையும்கூடச் சுருக்கி விட்டார்கள் தலைவர்கள்.

வன்னியர் சமூகத்தின் மேன்மை, தமிழ்ப் பெண்களின் கற்புடைமை, காடுகள் மரம் செடி கொடிகளின் பசுமை அனைத்தும் 'அய்யா' என்ற மூன்றெழுத்தில் அடக்கம்; தலித் சமூகத்தின் விடுதலை, கவுரவம், அதிகாரம் அனைத்தும் 'திருமா' என்ற மூன்றெழுத்துள் அடக்கம்; புலிகளின் துப்பாக்கிச் சத்தத்தை விஞ்சுகின்ற 'வைகோ' எனும் இரண்டெழுத்துப் பேரிரைச்சலில் ஈழத்தமிழர்களின் எதிர்காலமே அடக்கம்; தமிழ் என்ற மூன்றெழுத்து 'கலைஞர்' என்ற நான்கெழுத்தில் அடக்கம்; 'தளபதி'க்குள் தி.மு.க. அடக்கம்; தமிழகமே 'அம்மா'வில் அடக்கம்!

நேர்மைக்கு ஹமாம், அழகுன்னா லக்ஸ், கூலுன்னா கொக்கோ கோலா- அவ்வளவுதான். நேர்மை என்றால் என்ன, அது ஹமாமில் எத்தனை சதவீதம் கலந்திருக்கிறது, அது அழுக்கை அகற்றுமா என்றெல்லாம் ஆராயாமல் குறிப்பிட்ட பிராண்டுக்கு விசுவாசம் காட்டும் நுகர்வோரைப் போலவே வாக்காளர்களும் 'சிந்திக்க' வேண்டும். கொள்கை என்றால் என்ன, அது தலைவரின் சொல்லிலும் செயலிலும் எத்தனைச் சதவீதம் கலந்திருக்கிறது என்ற ஆராய்ச்சிகளில் ஈடுபடக் கூடாது. ஏனென்றால், தலைவர்தான் கொள்கை, தலைவரே மக்கள்!

மாறனுக்கும் அன்புமணிக்கும் மந்திரிப் பதவி கிடைத்தால் 'தமிழகத்துக்கு 7 மந்திரிகள்' என்றே நாம் புரிந்து கொள்ளவேண்டும். திருமாவுக்கு 9 இடம் கிடைத்தால் தலித் சமூகத்துக்கே இடம் கிடைத்ததாகக் கொண்டாட வேண்டும். கிடைக்காவிட்டால் தலித் சமூகத்திற்கு நேர்ந்துவிட்ட இந்த அவமானத்தை எண்ணிக் குமுற வேண்டும். இந்த நிலையில் மக்களை இருத்தி வைப்பது குறித்து ஓட்டுக்கட்சித் தலைவர்கள் இடையறாது சிந்திக்கிறார்கள்.

தி.மு.க. கூட்டணியிலிருந்து டக்கென்று தாவ முடியாமல் வைகோவின் துண்டைப் பிடித்திழுத்த கேள்வி எது? 'இது நீதியான முடிவா?' என்ற கொள்கைக் கேள்வியல்ல, 'இந்த முடிவை தனது வாக்கு வங்கி ஒத்துக் கொள்ளுமா?' என்ற நடைமுறைக் கேள்வி. 'அரசியல்ல இதெல்லாம் சகஜமப்பா' என்று விடுதித் தலைவர் காளிமுத்து தோட்டத்துக் கதவைத் திறந்து உள்ளே தள்ளிவிட்ட மறுகணமே அவருக்கு தெளிவு பிறந்துவிட்டது. முதன்முதலில் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைக்

www.padippakam.com

கும்போதும் 'கொள்கையைக் கைவிடு கிறோமே என்று தி.மு.க.வினர் யாரும் சஞ்சலப்படவில்லை, 'இதை மக்கள் ஒத்துக் கொள்ள வேண்டுமே' என்று தான் கவலைப்பட்டனர்.

●●●

"இந்த சீனை மக்கள் ஒத்துக்கு வானா?" என்று சினிமாக்காரர்கள் நடத்தும் ஸ்டோரி டிஸ்கசனுக்கும், "இந்தக் கூட்டணி கிளிக் ஆகுமா?" என்று ஓட்டுக்கட்சிகள் படுகின்ற கவலைக்கும் அடிப்படையில் எந்த வேறுபாடும் இல்லை. வாக்காளர்களை இரசிகர்களின் நிலைக்குத் தாழ்த்திவிட்ட இந்த இரசவாதம், ஓட்டுச் சீட்டு அரசியலில் ஒரே நாளில் நிகழ்ந்து விடவில்லை. வாக்குறுதிகள், தேர்தல் அறிக்கைகள் போன்ற எவையும் நம்பத் தக்கவையல்ல என்று மக்கள் அனுபவபூர்வமாக உணர்ந்து விட்ட நிலையில், எதை வைத்து அவர்களை வாக்குச்சாவடிக்கு இழுப்பது என்ற கேள்விக்கு ஆளும் வர்க்கங்கள் கண்டிருக்கும் விடை இது.

அன்றாட வாழ்க்கையில் தாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கும், இந்தத் தேர்தலுக்கும் நேரடியாகத் தொடர்பிருப்பதையும், தாங்கள் தேர்ந்தெடுத்து அனுப்பிய பிரதிநிதிகள்தான் தம் குடியைக் கெடுத்த துரோகிகள் என்பதையும் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு தேர்தல் என்பதை ஒரு சினிமாவாகவும் சீரியலாகவும் திருவிழாவாகவும் மாற்றிவிட்டன ஆளும் வர்க்கங்களும் அவர்களின் பிடியில் உள்ள ஊடகங்களும்.

அரசியல், பொருளாதாரம் என்பன பற்றியெல்லாம் தெரிந்து கொள்வதற்கு இதுநாள்வரை அக்கறை காட்டாத மக்கட் பிரிவினரையெல்லாம் அரசில் களத்தில் இறங்குமாறு கட்டாயப்படுத்துகின்றது மறுகாலனியத் தாக்குதல். ஒரு குவளைத் தண்ணீர், ஒரு கவளம் ரேசன் அரிசிச் சோறு, அடுப்பெரிக்க மண்ணெண்ணெய், குடிசையில் எரியும் ஒரு குண்டு பல்பு - என எதைத் தொட்டாலும் 'நான் நான்' என்று முன்னால் வந்து நிற்கிறது உலக வங்கி.

இந்தத் தாக்குதல் எவ்வளவு பருண்மையாகவும் பட்டவர்த்தனமாகவும் இருக்கிறதோ, அந்த அளவிற்கு அதிலிருந்து சூட்சுமமாக விலகிச் செல்கிறது தேர்தல் அரசியல். 'நல்லாட்சி' 'அராஜக ஆட்சி' 'முன்னேற்றம்' 'தீயசக்தி' என்ற பொருள் விளங்காச் சொற்களும், 'நன்றி' 'தியாகம்' 'துரோகம்' 'கருணை' போன்ற உணர்ச்சிப் பசப்பல்களும், இவற்றுக்குப் பொருத்தமான முகபாவங்களுடன் எல்லா முச்சந்திகளிலும் இளித்துக் கொண்டிருக்கும் தலைவர்களின் மூஞ்சிகளுமே வாக்காளர்களின் மூளைகளில் நிரப்பப்பட்டிருக்கின்றன.

இத்தகைய உணர்ச்சிப் பசப்பல்களுக்கும் அரசியல் அரட்டைகளுக்கும் வாய்ப்பில்லாமல் வாழ்க்கையால் தண்டிக்கப்பட்டு, நிதர்சன உலகில் மட்டுமே வாழுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள் பெரும்பான்மையான ஏழை மக்கள். பூடகமான சொற்களால் ஏமாற்றப்படுமளவுக்கு அவர்கள் கல்வியறிவு பெறவில்லையாதலால் அவர்களுக்கு சைக்கிள், குடம், தவலை, வெள்ள நிவாரணம் எனப் பருண்மையான பொருட்கள்!

**இந்தத் தேர்தலால் மக்களுக்கு என்ன பயன் என்ற அடிப்படைக் கேள்வியை எழுப்பாமல் அரட்டையையே அரசியலாய்க் கருதும் படித்த வாக்காளர்களின் 'அறிவு', உடனடிப் பயன்களைத் தாண்டி வேறெதையும் பார்க்கத் தெரியாத பாமர மக்களின் அறியாமை - என்ற இரு தண்டவாளங்களின் மீது ஓடிக் கொண்டிருக்கிறது, இந்தப் போலி ஜனநாயகத் தேர்தல்.**

இந்தத் தேர்தலால் மக்களுக்கு என்ன பயன் என்ற அடிப்படைக் கேள்வியை எழுப்பாமல் அரட்டையையே அரசியலாய்க் கருதும் படித்த வாக்காளர்களின் 'அறிவு', உடனடிப் பயன்களைத் தாண்டி வேறெதையும் பார்க்கத் தெரியாத பாமர மக்களின் அறியாமை - என்ற இரு தண்டவாளங்களின் மீது ஓடிக் கொண்டிருக்கிறது, இந்தப் போலி ஜனநாயகத் தேர்தல்.

●●●

இம்முழு மோசடியைத்தான் 'ஜனநாயகத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை' என்று வருணிக்கிறது ஆளும் வர்க்கம். ஒரு வாதத்திற்கு அதை ஒப்புக் கொள்வதாக இருந்தாலும், ஜனநாயகத்தின் மீதான அதே நம்பிக்கை ஆளும் வர்க்கத்துக்கும் இருந்தால் மட்டுமே இந்தத் தேர்தல் ஜனநாயகம் நீடிக்க முடியும். மக்களுடைய இந்த நம்பிக்கையைப் பராமரிக்கும் நோக்கத்திற்காகவாவது தனது மறுகாலனியக் கொள்கைகள் சிலவற்றை விட்டுக் கொடுக்கவோ கொஞ்சம் தள்ளி வைக்கவோ கூட ஆளும் வர்க்கம் தயாராக இல்லை.

தேர்தல் அரசியலின் நிர்ப்பந்தம் காரணமாக ரேசன் கடை மூடல், பொதுத்துறை ஏலம், தொழிலாளர் சட்டங்களை ரத்து செய்தல் போன்ற தனியார்மய, தாராளமய நடவடிக்கைகளை நினைத்த மாத்திரத்தில் ஆளும் வர்க்கத்தால் நடத்த முடிவதில்லை. "பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகள் அமல்படுத்தப்படும் வேகத்தை எண்ணி வெட்கப்படுகிறேன்" என்று சமீபத்தில் டாவோஸில் நடந்த உலக முதலாளிகள் கூட்டத்தில் வருத்தம் தெரிவித்திருக்கிறார் ப.சிதம்பரம்.

தாங்கள் ஆட்பட்டிருந்த தேர்தல் ஜனநாயக மாயை குறித்தும் மக்கள் வெட்கத்துடன் திரும்பிப் பார்க்கத்தான் போகிறார்கள். இருக்கின்ற வாழ்க்கையைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும், மிகச் சாதாரணமான அன்றாடக் கோரிக்கைகளுக்காகவும் மக்கள் நடத்தும் போராட்டங்களைக் கூட, மறுகாலனியாக்க எதிர்ப்புப் போராட்டங்களாக மாற்ற வேண்டிய கட்டாயத்தை ஆளும் வர்க்கம் தோற்றுவித்து வருகிறது.

ஆகவே, எந்தக் கூட்டணியைத் தேர்ந்தெடுப்பது என்ற குழப்பம் மக்களுக்கு இனி இருக்காது. நெல்லை - கங்கை கொண்டானில் நூறு சதவீத மக்களும் கோகோ கோலா ஆலையை வெளியேற்றவேண்டும் என்று போராடுகின்றனர். அங்கே சர்வகட்சிக் கவுன்சிலர்களும் கோக்கின் பின்னால் ஒரே கூட்டணியாக இணைந்து நிற்பதை மக்கள் காண்கிறார்கள்.

அய்யா அம்மா தளபதி வகையறாக்களும் ஒரே அணியில்தான் நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வெவ்வேறு அணியென்று மக்கள் கொண்டிருக்கும் மாயையை வரவிருக்கும் மறுகாலனியாக்க எதிர்ப்புப் போராட்டங்கள் துடைத்தெறிந்து விடும்; போலி ஜனநாயகத் தேர்தல் எனும் இந்த சீரியலை முன் அறிவிப்புகள் ஏதுமின்றி முடிவுக்குக் கொண்டு வந்துவிடும்.

● சூரியன்

www.padippakam.com

# காந்தியின் அரிஜன் ஏடு அம்பலப்படுத்தும் காங்கிரசின் கோகோ கோலா!

**1950** - பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் திற்கெதிராகப் போராட்டம் நடத்தி அடிமைத் தளையறுத்து, இந்தியக் குடிமக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்குவதற்கான அரசியல் சட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டதாகப் பெருமையுடன் நினைவு கூறப்படும் ஆண்டு. இதே ஆண்டில்தான் அமெரிக்க அடிமைத்தனத்தின் திரவ வடிவமான கோகோ கோலாவும் இந்தியாவில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப் பட்டது.

1977-இல் வெளியேற்றப்பட்டு 1993-இல் நரசிம்மராவ் அரசியல் புத்தம்புது காப்பியாக மீண்டும் அறிமுகம் செய்யப்பட்ட கோக், பெப்சி பானங்கள் இன்று இந்தியச் சந்தை முழுவதையும் அநேகமாகக் கைப்பற்றி விட்டன.

2004-ஆம் ஆண்டின் கணக்கெடுப் பின்படி இக்குளிர்பானங்களின் ஆண்டு விற்பனை 400 கோடி லிட்டர்கள். அதாவது, 2000 கோடி பாட்டில்கள்.

எனினும் உலகத்தரத்தை ஒப்பிடும் போது இது மிகவும் குறைவாம். ஆண்டொன்றுக்கு ஒரு அமெரிக்க குடிமகன் சராசரியாக 800 கோலா பாட்டில்களைக் காலி செய்வதாகவும் இந்தியர்கள் இவ்விசயத்தில் மிகவும் தங்கியிருப்பதாகவும் வருந்துகிறார்கள் கோக் அதிகாரிகள்.

இந்த இலட்சியத்தை எட்டும் பொருட்டுத்தான் தாமிரவருணியை கோக்கிற்கு தாரை வார்த்திருப்பதுடன், நெல்லை மாவட்டம் முழுவதிலும் கோக் எதிர்ப்புப் பிரச்சாரத்திற்குத் தடையும் விதித்திருக்கிறது போலீசு. இந்தியாவைக் கோலா குடியரசாக்கும் இந்த இலட்சியத்தில் அதிமுக., காங். உள்ளிட்ட ஓட்டுக்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரண்டு நிற்கின்றன. இந்நிலை திடீரெனத் தோன்றவில்லை. இந்தப் பரிணாம வளர்ச்சிக்கு நீண்ட வரலாறு உள்ளது.

1950-இல் கோகோ கோலா இந்தியாவில் காலடி எடுத்து வைத்தவுடனேயே காந்தியால் தொடங்கப்பட்ட *அரிஜன்* பத்திரிகையில் அதற்கெதிரான கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அவற்றின் சுருக்கத்தைக் கீழே தருகிறோம்.

*அரிஜன்* நவம்பர் 4, 1950 இதழில் கே.ஜி. மஷ்ருவாலா என்பவர் "கோகோ கோலா - எச்சரிக்கை" என்ற தலைப்பில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:

"அமெரிக்காவிலிருந்து அறிமுகப் படுத்தப்பட்டுள்ள கோகோ கோலா என்ற குளிர்பானத்தின் முழுப்பக்க விளம்பரத்தை சமீபத்தில் பார்த்தேன். இதனைப் பயன்படுத்த வேண்டாமென மக்களை எச்சரிக்க விரும்புகிறேன்" என்ற முன்னுரையுடன்

> **காந்தி செத்த ஒரே வருடத்தில், இந்திய அரசியல் சட்டம் இயற்றப்பட்ட அதே வருடத்தில், காந்தியால் துவங்கப்பட்ட அரிஜன் பத்திரிகையில் வந்த இந்தக் கட்டுரையை காங்கிரசு அரசு கண்டு கொள்ளவேயில்லை. கோக்கிற்கு எதிராக அரிஜன் பத்திரிகை எழுப்பியுள்ள கேள்விகள் ஒவ்வொன்றும் இன்று பூதாகாரமாக வடிவெடுத்து விட்டன.**

தொடங்கி கோக்கில் கலந்திருக்கும் நச்சுப் பொருட்களை அவர் பட்டியலிடுகிறார்.

"வீட்டு உபயோகத்திற்கு சர்க்கரை கிடைப்பதில்லை; கேட்டால் பற்றாக்குறை என்கிறார்கள். ஆனால் அதே சர்க்கரையை மூலப்பொருளாகப் பயன்படுத்தி, மக்களின் சுவையுணர்வையும் சீரண உறுப்புகளையும் நாசமாக்கும் பானமாக அதை மாற்றி அதற்கு மக்களிடமிருந்து கூடுதல் காசையும் பிடுங்குகிறது கோகோ கோலா. அவர்களுக்கு மட்டும் வேண்டிய அளவுக்கு சர்க்கரை கிடைப்பது எப்படி?" என்று அரசுக்குக் கேள்வியும் எழுப்புகிறார்.

டிசம்பர் 9-ஆம் தேதியிட்ட இதழில் ரூப்நாராயண் என்பவர் கோகோ கோலாவைத் தடை செய்ய வேண்டுமெனக் கோருகிறார்.

1951 மார்ச் 17 மற்றும் 24 தேதியிட்ட இதழ்களில் ஆக்டோபஸ் என்ற புனைபெயரில் ஒரு கட்டுரையாளர் எழுதியுள்ள தொடர்கட்டுரை கோகோ கோலாவை உடனே வெளியேற்ற வேண்டுமென்பதைத் தீவிரமாக வலியுறுத்துகிறது. அதன் சில பகுதிகளைக் கீழே தருகிறோம்:

**"இந்தியாவை ஆக்கிரமிக்கிறது கோகோ கோலா!**

கோகோ கோலா என்ற அமெரிக்க பானம் இந்தியாவில் மெல்ல மெல்ல அறிமுகப்படுத்தப்படுகிறது. இரண்டு மாதங்களுக்கு முன் டெல்லியில் ஒரு ஆலை துவங்கப்பட்டது. அடுத்து பம்பாய், கல்கத்தா, மெட்ராஸ் போன்ற நகரங்களிலும் ஆலை தொடங்கப் போகிறார்களாம். பெரு நகரங்களிலிருந்து அதன் அருகாமைப் பகுதிகளுக்கு இவர்கள் ஊடுருவ முயற்சிப்பார்கள்.

கனடா, இத்தாலி, ஆஸ்திரியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இந்த பானம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்நாடுகளின் அனுபவம் நமக்கு ஒரு பாடமாக அமையவேண்டும்.

பிரான்சில் பொது சுகாதாரத்திற்கான உயர்மட்டக் குழு மற்றும் தேசிய மருத்துவ அகாதமி ஆகிய நிறுவனங்கள் தெரிவித்த கருத்தின் பேரிலும் பிற ஆதாரங்களின் அடிப்படையிலும் கோகோ கோலாவைத் தடை செய்வதற்கான மசோதா பிரெஞ்சு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு ஜூலை 22, 1950 அன்று விசாரணைக்குழுவுக்கும் அனுப்பப்பட்டது. அக்குழுவின்

www.padippakam.com

ஒருமனதான பேரில் இந்தப் பானம் பிரான்சில் தடை செய்யப்பட்டு விட்டது.

நுகர்வோரின் ஆரோக்கியத்திற்கு கோகோ கோலா விளைவிக்கும் கேடு பற்றி (அரசு) சிறிதும் கவலைப்படாமலிருப்பது ஆச்சரியமளிக்கிறது. அந்தப் பானத்தில் இருப்பது என்ன? தண்ணீர், சர்க்கரை, காரமல், பாஸ்பாரிக் அமிலம், வனிலா, கா∴பின், கோகோ இலை மற்றும் கொட்டையின் சாறு. 6 அவுன்சுகள் கொண்ட ஒரு பாட்டிலில் 54 மில்லி கிராம் கா∴பின் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கா∴பின் கலக்கப்பட்ட பானங்கள் இதய அழுத்தத்தையும் நரம்பு மண்டலப் பாதிப்பையும் ஏற்படுத்துவது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. நியூயார்க் கல்லூரியின் டீன் டாக்டர் ரஸ்பி கூறுவதாவது - ''கா∴பின் ஒரு நஞ்சு என்பதில் ஐயமேயில்லை. இதனைப் பானமாக அருந்துபவர்கள் போதைப் பழக்கம் போல இதற்கு அடிமையாகிறார்கள். இதயத்தின் இயக்கம் மற்றும் மூளைக்கான ரத்த ஓட்டம் ஆகியவற்றில் இது நிரந்தரமான பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.'' மேலும், ''குழந்தைகளுக்கு இது நஞ்சு என்றும் மூளையில் பதட்டத்தை அதிகரிப்பதன் மூலம் அதன் இயல்பான இயக்கத்தையே பாதித்து விடுகிறது'' என்றும் கூறுகிறார் டாக்டர் லெசின்ஸ்கி.

கோகோ கோலாவைத் தடை செய்வது தொடர்பாக பிரெஞ்சு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் சில பகுதிகளையும் இங்கே மேற்கோள் காட்ட விரும்புகிறேன். ''உலகில் பல இலட்சம் மக்கள் குடித்துக் கொண்டிருக்கும் ஒரு பானத்தை எப்படித் தடை செய்ய முடியுமென்று கேட்கிறீர்கள். இதுவெல்லாம் ஒரு வாதமா? கோடிக்கணக்கான சீன மக்கள் பல நூற்றாண்டுகளாக கஞ்சா அடிக்கும் பழக்கத்திலிருந்திருக்கிறார்கள். அதன் காரணமாக நம் நாட்டிலும் இதனைக் கட்டுப்பாடின்றி அனுமதித்து விட்டீர்களா என்ன?''

உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிப்பதைப் போலவே கோகோ கோலா இந்தியப் பொருளாதாரத்திற்கும் தீங்கு விளைவிக்கிறது. பம்பாயில் உள்நாட்டு சோடா கலர் தொழிற்சாலைகளில் சுமார் 2000 பேர் வேலை செய்கிறார்கள். டெல்லியிலோ முறையாக லைசன்ஸ் பெற்ற 150 சோடா கம்பெனிகள் உள்ளன. அவை நாளொன்றுக்கு 2000 டஜன் பாட்டில்களை உற்பத்தி செய்கின்றன.

டெல்லியிலுள்ள கோகோ கோலா கம்பெனியின் உற்பத்தித் திறனோ 8 மணி நேரத்திற்கு 6000 டஜன் பாட்டில்கள். துவக்கத்தில் இதன் விற்பனை மந்தமாக இருந்தபோதிலும் இப்போது நாளொன்றுக்கு 500 டஜன் பாட்டில்கள் விற்பனையாகிறது. இந்த வெற்றியைத் தொடர்ந்து கிழக்கு பஞ்சாபில் புதிய ஆலை தொடங்கப்படவிருக்கிறது. பம்பாயிலோ கட்டுமானப் பணிகள் முடிந்து உற்பத்தி தொடங்கவிருக்கிறது. டெல்லியில் உள்நாட்டு பானங்களின் விற்பனை ஏற்கெனவே 50% வீழ்ச்சியடைந்து விட்டது. அவை முற்றிலுமாக அழியும் நிலை நெருங்கிக் கொண்டிருக்கிறது.

உலகப் போரைத் தொடர்ந்த பொருளாதார நெருக்கடியின் காரணமாக உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆனால் கோகோ கோலா கம்பெனியோ 45 எந்திரங்களை இறக்குமதி செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது. உள்நாட்டுக் கம்பெனிகள் பாட்டில்களை இறக்குமதி செய்ய அனுமதி மறுக்கப்படுகிறது. ஆனால் கோகோ கோலா பாட்டில் இறக்குமதி செய்கிறது. அத்தியாவசியமான பொருட்களை இறக்குமதி செய்வதற்கே அந்நியச் செலாவணி இல்லை. ஆனால் அத்தியாவசியத் தேவை என்று எந்த வகையிலும் கருத முடியாத ஒரு பொருளுக்கு அந்நியச் செலாவணி தாராளமாக அனுமதிக்கப்படுகிறதே, இது எந்த அடிப்படையில் என்பதுதான் புரியவில்லை.

டெல்லியிலுள்ள 150 உள்நாட்டுக் கம்பெனிகளுக்கும் சேர்த்து மாதமொன்றுக்கு மொத்தம் 160 மூட்டை சர்க்கரையைத்தான் அரசு வழங்குகிறது. ஆனால் கோகோ கோலாவுக்கு மட்டும் மாதம் 170 மூட்டை சர்க்கரை வழங்கப்படுகிறது. எந்திரம், பாட்டில், சர்க்கரை என ஒவ்வொன்றுக்கும் லைசென்ஸ் வாங்க உள்நாட்டு உற்பத்தியாளர்கள் அரசிடம் படாத பாடு படுகிறார்கள். கோகோ கோலாவுக்கோ எல்லாம் கேட்ட மறுகணமே கையில் வந்து விழுகிறது. உள்நாட்டுத் தொழில்களுக்கு எதிராகவும் வெளிநாட்டுக் கம்பெனிகளுக்கு ஆதரவாகவும் அரசாங்கம் காட்டி வரும் இந்தப் பாரபட்சம் தான் சகிக்கவொண்ணாத அநீதியாகத் தெரிகிறது.''

•••

**கா**ந்தி செத்த ஒரே வருடத்தில், இந்திய அரசியல் சட்டம் இயற்றப்பட்ட அதே வருடத்தில், காந்தியால் துவங்கப்பட்ட *அரிஜன்* பத்திரிகையில் வந்த இந்தக் கட்டுரையை காங்கிரசு அரசு கண்டுகொள்ளவேயில்லை. கதர், சுதேசி, சுயசார்பு போன்ற சவடால்களெல்லாம் உச்சத்தில் இருந்த பண்டித நேருவின் காலத்திலேயே இதுதான் நிலைமை என்றால், ப.சிதம்பரத்தின் காலத்தைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை.

கோக்கிற்கு எதிராக *அரிஜன்* பத்திரிகை எழுப்பியுள்ள கேள்விகள் ஒவ்வொன்றும் இன்று



www.padippakam.com

பூதாகாரமாக வடிவெடுத்து விட்டன. கோகோ கோலா டெல்லியில் மட்டும் 150 உள்நாட்டுக் கம்பெனிகளை அழித்து விடுமென்றும், சுமார் 2000 தொழிலாளர்களின் வேலையைப் பறித்து விடுமென்றும் அன்று எச்சரிக்கை செய்திருக்கிறது *அரிஜன்.* இன்றோ, பார்லே போன்ற பெரிய நிறுவனங்கள் முதல் காளிமார்க், வின்சென்ட், மாப்பிள்ளை விநாயகர் முதலான ஆயிரக்கணக்கான சிறு நிறுவனங்களை சுவடே இல்லாமல் அழித்திருக்கின்றன இந்த அமெரிக்க நிறுவனங்கள். இதனால் வேலை இழந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை எத்தனை இலட்சம் என்பதற்கு எந்தக் கணக்கும் இல்லை.

பணபலம், விளம்பர பலத்தினால் மட்டுமல்ல; சிறு கம்பெனிகளின் பாட்டில்களை வாங்கி உடைப்பது, தங்களது பானத்தைத் தவிர வேறெதையும் விற்கக் கூடாதென சிறு வணிகர்களை நிர்ப்பந்திப்பது போன்ற கிரிமினல் நடவடிக்கைகள் மூலமும்தான் இந்தியச் சந்தையைக் கைப்பற்றியிருக்கின்றன இந்த நிறுவனங்கள்.

கோகோ கோலாவில் கலந்திருக்கும் நச்சுப் பொருட்கள் பற்றி 1950-இல் *அரிஜன்* இதழ் எழுப்பிய கேள்விகளுக்கு இன்று வரை அரசிடமிருந்து பதில் இல்லை. 2003-இல் கோக் - பெப்சியில் கலந்துள்ள நஞ்சுகள் மற்றும் வேதிப் பொருட்களை சோதனைச் சாலையில் ஆராய்ந்து ஆதாரபூர்வமாக வெளியிட்டது அறிவியல் மற்றும் சுற்றுச் சூழலுக்கான ஆய்வு மையம். கோக் ஆலையின் கழிவுகளில் *காட்மியம்* எனும் நச்சுப் பொருள் கலந்திருப்பதையறிந்து, ''குளிர்பான உற்பத்தியில் இந்த நச்சுப் பொருளுக்கு என்ன வேலை?'' என்று 2004-இல் கேள்வி எழுப்பியது கேரள அரசின் மாசு கட்டுப்பாட்டுத் துறை. ''கோக்கில் கலந்திருக்கும் வேதிப்பொருட்கள் மற்றும் பூச்சி மருந்துகள் பற்றிய விவரங்களை பாட்டிலின் மீது அச்சிடவேண்டும்'' என்று 2005-இல் உத்தரவிட்டது ராஜஸ்தான் உயர்நீதி மன்றம். இவை எதையும் கோக் மதிக்கவில்லை.

ராஜஸ்தான் உயர்நீதி மன்ற உத்தரவை அமல்படுத்தவில்லையென கோக்கின் மீது உச்சநீதி மன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. கோக்கின் சார்பில் ஆஜரான பா.ஜ.க. தலைவர் அருண் ஜேட்லி ''இப்பிரச்சினை தொடர்பாக அரசு சட்டமியற்றவுள்ளதால் இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தள்ளுபடி

**கோக் நிறுவனம் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியாவில்தான் அதிகபட்சமாக முதலீடு செய்திருக்கிறது. இன்று இந்தியாவில் கோக் ஆலைகளின் எண்ணிக்கை 58. பெப்சி ஆலைகளின் எண்ணிக்கை 39. இந்நிறுவனங்கள் ஆண்டுதோறும் இந்தியாவிலிருந்து உறிஞ்சும் நிலத்தடி நீரின் அளவு சுமார் 5310 கோடி லிட்டர்.**

செய்ய வேண்டும்'' எனக் கோரினார். காங்கிரசு அரசின் சார்பில் ஆஜரான அரசு வழக்கறிஞரும் இதனை வழிமொழிந்தார். கோக்கிற்கு எதிரான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

கோக்கில் பாஸ்பாரிக் அமிலம் போன்ற மிகவும் அபாயகரமான வேதிப்பொருட்கள் கலந்திருப்பதால் அதனைத் தடை செய்ய வேண்டுமென சமீபத்தில் *'பொதுநல வழக்குகளுக்கான மையம்'* என்ற அமைப்பு உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. இது குறித்து விசாரிக்க ஒரு குழுவை அமைக்குமாறு பிப்.28, 2006 அன்று உத்தரவிட்டிருக்கிறது உச்சநீதி மன்றம். கோக்கில் பாஸ்பாரிக் அமிலம் இருக்கிறதென்று 1951-இல் *அரிஜன்* பத்திரிகை எழுப்பிய குற்றச்சாட்டு பற்றி விசாரிக்க 2006-இல் விசாரணைக் குழுவாம்!

''நாட்டில் கடுமையான சர்க்கரைப் பஞ்சம் நிலவும்போது, கோக்கிற்கு மட்டும் வேண்டிய அளவுக்கு சர்க்கரையை வாரிக் கொடுக்கிறதே அரசு, இது என்ன நீதி?'' என்று 1951-இல் கேள்வி எழுப்பியிருக்கிறது *அரிஜன்* இதழ். இன்றோ, நாடெங்கும் தண்ணீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடும் போதும் ஆறுகளையும் நிலத்தடி நீரையும் கோக்கிற்கு வாரிக் கொடுக்கிறது அரசு.

கோக் நிறுவனம் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியாவில்தான் அதிகபட்சமாக முதலீடு செய்திருக்கிறது. இன்று இந்தியாவில் கோக் ஆலைகளின் எண்ணிக்கை 58. பெப்சி ஆலைகளின் எண்ணிக்கை 39. இந்நிறுவனங்கள் ஆண்டுதோறும் இந்தியாவிலிருந்து உறிஞ்சும் நிலத்தடி நீரின் அளவு சுமார் 5310 கோடி லிட்டர்.

குடிநீரையும் விவசாயத்தையும் இழந்த மக்கள் அதனை எதிர்த்துக் குரலெழுப்பவும் கூடாதென மென்னியைப் பிடிக்கிறது அரசு. ''அந்நியக் கம்பெனிகளுக்கு ஆதரவாக அரசாங்கம் காட்டி வரும் பாரபட்சம் சகிக்கவொண்ணாத அநீதியாக இருக்கிறது'' என்று தனது கட்டுரையை முடித்திருக்கிறார் *அரிஜன்* கட்டுரையாளர். அந்த அநீதிதான் இனி இந்த நாட்டின் நீதி என்று அறிவித்திருக்கிறது அரசாங்கம்.

*அரிஜன்* கட்டுரை எழுப்பும் கேள்விகளையும் அதற்கு இன்றைய காங்கிரசு அரசும் பிற ஓட்டுக் கட்சிகளும் அளித்து வரும் பதிலையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள், இந்த நாடே ஒரு கோலா குடியரசாகிவிட்ட உண்மையை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

● முருகேசன்


''புதிய கலாச்சாரம்'' உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள் படிவம் IV (விதி 8-இன் படி)

1. வெளியிடும் இடம் : எண். 3, 4-வது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை - 31

2. வெளியிடும் காலம் : மாதம் ஒருமுறை

3. அச்சிடுபவர் பெயர் : இரா. சண்முகராசு
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : எழில் பிரிண்டர்ஸ், 110, இரண்டாம் தளம், 63, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.

4. வெளியிடுபவர் பெயர் : வி. வல்லபேசன்
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : எண். 3, 4-வது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை - 31.

5. ஆசிரியர் பெயர் : வி. வல்லபேசன்
இந்தியக் குடிமகனா? : ஆம்
முகவரி : எண். 3, 4-வது தெரு, செகந்நாதபுரம், சேத்துப்பட்டு, சென்னை - 31.

வி. வல்லபேசனாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

31.3.2006 (ஒ-ம்) வி. வல்லபேசன், வெளியிடுபவர்.

www.padippakam.com

# ஓனிக்ஸ்: தனியார்மயத்தின் கோரமுகம்

எடுக்கப்படாமல் நிரம்பி வழியும் குப்பைத் தொட்டிகள், துருப்பிடித்துப் போன தகர வண்டிகள், தூரத்தில் வரும் போதே பீதிக்குள்ளாக்கும் தகரடப்பா லாரிகள், 'சரக் சரக்' என்று விட்டு விட்டுக் குப்பையை வாரும் பிரம்பாலான மிலாறு, வாரும்போதே பாதியைக் கீழே கொட்டும் ஓட்டை இருப்புச் சட்டிகள், தேய்ந்து போன மண்வெட்டிகள். வெளிறிக் கசங்கிய காக்கி உடையில் இந்தக் கருவிகளுடன் போராடிக் கொண்டிருக்கும் துப்புரவுப் பணியாளர்கள் - இதுதான் மாநகராட்சித் துப்புரவுப் பணிக்களத்தின் தோற்றம்.

எதிரொளிக்கும் ஃபுளோரசென்ட் பட்டைகள் கொண்ட சீருடை, தொப்பி, ஆரஞ்சு நிறக் கையுறை, ஆள் உயர இரும்பு பிரஷ், மண் அள்ளும் ஷவல், சாம்பல் நிறத்தில் நடமாடும் பிளாஸ்டிக் குப்பைத் தொட்டி, உதிரிக் குப்பைகளை ஒய்யாரமாக ஏற்றிச் செல்லும் சிறிய ரக வாகனங்கள், வீதிகளின் மூலையில் கரும்பச்சை நிறத்துடன் இருப்புக் கொண்டிருக்கும் பெரிய குப்பைத்தொட்டி, அதை அப்படியே அலக்காகத் தூக்கித் தனது முதுகில் சாய்த்துக் கொள்ளும் தானியங்கி லாரிகள், சிப்பாய்களைப் போல அவற்றின் ஓரங்களில் தொங்கிக் கொண்டு செல்லும் துடிப்பான தொழிலாளிகள், சாலையில் படிந்திருக்கும் மண்ணை நக்கித் துடைக்கும் நவீன எந்திரங்கள் எழுப்பும் விநோத ஓசை, வாக்கி டாக்கியுடன் சுற்றித் திரிந்து இவற்றை மேற்பார்வையிடும் சூபர்வைசர்களின் மிடுக்கு... இது ***ஓனிக்ஸ்.***

"அடடா... இது சென்னை நகரமா, அல்லது ஹாலிவுட் படங்களில் மட்டுமே நாம் பார்த்திருக்கும் ஐரோப்பிய நகரமா" என்று பார்ப்பவர்களையெல்லாம் வியக்க வைக்கிறது; "எவ்வளவு நீட்டா இருக்கு பாருங்க, என்ன இருந்தாலும் பிரைவேட்னா பிரைவேட்தான் சார்." என்று தனியார்மயக் கொள்கைக்கு 'ஜே' போடவும் வைக்கிறது சென்னையில் இயங்கும் ஓனிக்ஸ் எனும் பன்னாட்டுத் துப்புரவுத் தொழில் நிறுவனம்.

சிங்காரச் சென்னை, எழில்மிகு சென்னை 2000 என்றெல்லாம் கனவு கண்ட முன்னாள் மேயர் மு.க.ஸ்டாலின், சென்னையை சிங்கப்பூராக்க வேண்டுமானால் அங்கே குப்பை அள்ளும் கம்பெனியை வைத்து சென்னையிலும் குப்பை அள்ள வேண்டும் என்று முடிவெடுத்தார். லண்டன் மாநகரத்திலும் சிங்கப்பூரிலும் குப்பை அள்ளும் ஓனிக்ஸ் நிறுவனம் சென்னையில் வந்து இறங்கியது. துப்புரவுப் பணியிலும் தனியார்மயம் தொடங்கியது. சென்னை மாநகராட்சியில் மந்தைவெளி, ஐஸ் ஹவுஸ், கோடம்பாக்கம் ஆகிய 3 மண்டலங்களில் குப்பை அகற்றும் பணியை ஏழேகால் ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு எடுத்துள்ளது ஓனிக்ஸ் நிறுவனம்.

"காசுக்கு வழியில்லாதவன்தான் குப்பை பொறுக்குவான், இவ்வளவு பெரிய வெளிநாட்டுக் கம்பெனி நம்ம நாட்டுல வந்து குப்பை பொறுக்குறான்னா அவனுக்கு என்ன காலக்கொடுமையோ" என்று நினைத்து விட வேண்டாம். கொடுமை பன்னாட்டுக் கம்பெனிக்கல்ல, அதன் பணியாளர்களுக்குத்தான்.

"ஓனிக்ஸ் தொழிலாளர் வேலை நிறுத்தம்! மலையாய்க் குவிந்தன குப்பைகள்! நோய் பரவும் அபாயம்!" என்று அலறின சென்னை நாளிதழ்கள். ஆனால் மலையாய்க் குவிந்திருக்கும் தொழிலாளர்களின் துயரம்தான் அவர்களை வேலைநிறுத்தத்திற்குத் தள்ளியிருக்கிறது என்ற உண்மையை மட்டும் அவை அணுவளவும் வெளியிடவில்லை. 'வழக்கமான சம்பள உயர்வு, போனஸ் பிரச்சினைதான்' என்று பொய்யாகச் சித்தரித்து ஓனிக்ஸின் மேனாமினுக்கித் தோற்றத்திற்கு உள்ளே புழுத்து நெளிந்து கொண்டிருந்த அடக்குமுறைகள் அம்பலமாகாமல் இருட்டடிப்பு செய்தன.

ஓனிக்ஸ் தொழிலாளர்களை நேரில் சந்தித்த போதுதான் அழகு, சுத்தம் என்ற சொற்களுக்குப் பின்னால் ஒளிந்திருப்பது ஒரு அப்பட்டமான பயங்கரவாதம் என்பது தெரியவந்தது.

"எங்களை மனிதர்களாக நடத்து, சுயமரியாதையுள்ள மனிதர்களாக நடத்து" என்ற ஒரு வரியில் ஓனிக்ஸ் தொழிலாளர்களின் அனைத்துக் கோரிக்கைகளும் அடங்கிவிடுகின்றன. "தொழிலாளர்களை ரீ டிரெய்னிங் என்ற பெயரில் கொடுமைப்படுத்தாதே; விசாரணை என்ற பெயரில் வேலை நீக்கம் செய்யாதே; தொழிலாளர்களைக் கேவலமாகப் பேசும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடு; ஆட்குறைப்புசெய்வதை நிறுத்து; சம்பளப் பாக்கிகளைக் கொடு" - என்பவைதான் தொழிலாளர்களின் கோரிக்கைகள். இந்தக் கோரிக்கைகளின் உள்ளே குமுறிக் கொண்டிருக்கும் ஓனிக்ஸ் தொழிலாளர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், அவர்களுடைய பணிநிலைமைகளை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

போகிற போக்கில் அலட்சியமாக நாம் வீசும் குப்பை, மூக்கைப் பிடித்துக் கொண்டு தெருவில் விட்டெறியும் செத்த எலி, கடைக்காரர்கள் கொட்டும் அழுகிய காய்கறிகள், ஓட்டல்கள் வெளியேற்றும் கெட்டுப்போன சோறு, கருச்சிதைவில் வெளியேறிய குழந்தை உள்ளிட்ட மருத்துவமனையின் ஆபத்தான கழிவுகள், லாரியில் அடிபட்டுச் செத்த நாய்கள்... இவையனைத்தும் நாட்கணக்கில் அகற்றப்படாமல் கிடக்கும் காட்சியைக் கண்ணை மூடிக் கொண்டு கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். துப்புரவுப் பணியாளர்கள் இயங்கினால்தான் சென்னை என்பது மாநகரம், இல்லையேல் மறுநாளே இது நரகம். ஆனால் அவர்கள் இயக்கப்படுவது எப்படி?

ஓனிக்ஸ் குத்தகைக்கு எடுத்துள்ள சென்னை நகரின் 3 மண்டலங்களுடைய துப்புரவுப் பணிக்காக ஏற்கெனவே மாநகராட்சி ஒதுக்கியிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 6000. அதே பணியை மூன்றில் ஒரு பங்கு ஊழியர்களை வைத்து முடித்து வருகிறது ஓனிக்ஸ் நிறுவனம். தனியாரின் திறமை இங்கிருந்து தொடங்குகிறது.

130 பெண்கள் உட்பட ஓனிக்ஸ் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை 2300. ஒவ்வொரு மண்டலத்திலும் 10 டிவிசன்கள், ஒரு டிவிசனுக்கு 60 தொழிலாளர்கள், ஒரு சூபர்வைசர்,

www.padippakam.com

லாரி டிரைவர். 8 மணி நேரத்தில் ஒரு தொழிலாளி சுத்தம் செய்ய வேண்டிய சாலையின் நீளம் 1400 மீட்டர். சுமார் ஒன்றரை கிலோ மீட்டர். ஒரு துளி தூசும் இல்லாதபடி மறுபடி மறுபடி பெருக்க வேண்டும். வெறும் 300 சதுர அடி வீட்டைக் கூட்டி முடிப்பதற்குள் முதுகு பிடித்துக் கொண்ட கதையை இலக்கியமாகப் பேசும் நபர்கள் 1400 மீட்டர் கடைவீதியைக் கற்பனையிலாவது ஒருமுறை கூட்டிப் பார்க்க வேண்டும்.

இரும்புத் துடைப்பானால் குப்பையைத் தள்ளிக் கொண்டும், பொடி மண்ணை பிரஷ்ஷால் தேய்த்துத் தேய்த்துத் துடைத்துக் கொண்டும் குனிந்த தலையுடன் ஓயாமல் இயங்கிக் கொண்டே இருக்கும் ஓனிக்ஸ் தொழிலாளியின் கைகள் ஓய்ந்து ஒரு கணம் நிற்பதையோ, அவர்கள் உட்கார்ந்திருப்பதையோ சென்னைவாசிகள் யாராவது எங்கேயாவது பார்த்திருக்க முடியுமா? மாநகராட்சித் துப்புரவுப் பணியாளர்கள் 5,6 பேராக டீக்கடைகளில் அமர்ந்து தேநீர் குடிப்பதையும், புகையிலை போடுவதையும் பார்த்திருப்பீர்கள். 4 ஓனிக்ஸ் தொழிலாளிகள் சேர்ந்து டீ குடித்தபடி நிற்பதை யாராவது பார்த்ததுண்டா?

இதுவரை கவனித்திராதவர்கள் இனி கவனித்துப் பாருங்கள். வியர்வையைத் துடைப்பதற்காகக் கூட அவர்கள் ஒரு கணம் ஓய முடியாது. வயர்லெஸ்ஸுடன் வண்டியில் சுற்றிக் கொண்டே இருக்கும் சூபர்வைசரின் கண்ணில் பட்டால் எந்த விளக்கத்தையும் அவன் காதில் வாங்க மாட்டான். உடனே மெமோ. சூபர்வைசரின் அனுமதியில்லாமல் சிறுநீர் கழிக்கக் கூட ஒதுங்கக் கூடாது. எக்காரணம் கொண்டும் மக்களிடம் பேசக்கூடாது. முகவரியை வைத்துக் கொண்டு வழிகேட்கும் மக்களிடம் கூடப் பேசக் கூடாது. நட்புணர்ச்சியுடன் கடைக்காரர்கள் ரெண்டு வாழைப்பழமோ டீயோ கொடுத்தால் கூட வாங்கிச் சாப்பிடக் கூடாது. குடித்தால், சாப்பிட்டால் மறுகணமே வேலைநீக்கம்.

இரண்டு பத்து நிமிடங்கள் தேநீர் இடைவேளை, சாப்பாட்டுக்கு அரை மணி நேரம் - போக, 8 மணி நேர வேலை. கல்லாய்ச் சமைந்திருக்கும் சந்து முனீஸ்வரன்களுக்குக் கூட கழிவை வெளியேற்ற வழியுண்டு; ஒன்றரை கி.மீ. துப்புரவுப் பணி செய்யும் பெண் தொழிலாளிக்கு 10 நிமிட இடைவேளைக்குள் சிறுநீர் கழிக்க இடம் தேடுவதே பெரும் போராட்டம்.



**துப்புரவுப் பணியாளர்கள் இயங்கினால்தான் சென்னை என்பது மாநகரம். இல்லையேல் மறுநாளே இது நரகம்.**

எந்தச் சோற்றுக்காக இத்தனைப் பாடுபடுகிறார்களோ அதை நிம்மதியாகத் தின்ன முடியாது. அன்றைக்கு ஒதுக்கப்பட்ட சாலையில் ஏதாவது ஒரு கடையில் சோற்று டப்பாவைக் கொடுத்து வைத்து, இடைவேளை நேரத்தில் அந்தக் கடைக்கு ஓடிவந்து அள்ளி விழுங்கி விட்டு 30 நிமிடத்தில் விட்ட இடத்திலிருந்து வேலையைத் தொடர வேண்டும். துர்நாற்றம் போகக் கை கால் முகத்தைக் கழுவிவிட்டு சாப்பிடவோ, சாப்பிட்ட பின் சற்று அமரவோ கூட அவர்களுக்கு நேரம் கிடையாது.

அன்றாடம் 8 மணி நேரம் சாலையோரக் குப்பையையும் மண்ணையும் அழுந்தத் தேய்த்துச் சுத்தம் செய்யும் உள்ளங்கை புண்ணாகும். ஒரு தானியங்கி எந்திரத்தைப் போல நிமிடத்திற்கு 25,30 முறை முன்னும் பின்னும் இயங்கும் தோள்பட்டை மூட்டுக்கள் என்னாகும்? ஒரே ஆண்டில் சவ்வுகள் கிழிந்து தேய்ந்து போன எந்திரம்போல 'கடக் கடக்' என்று ஓசை எழுப்புகின்றன தொழிலாளர்களின் தோள்பட்டைகள். ஆண்டுக்கு இரண்டு மாதம் வேகப் பந்து வீசும் கிரிக்கெட் வீரர்களுக்கும் இதே பிரச்சினை வருகிறது. அவர்களுக்கு லண்டனில் அறுவை சிகிச்சை, 20 லட்சம் செலவு!

இப்படித் 'தேய்ந்து' போகும் தொழிலாளர்களைக் கழித்துக் கட்ட கொடூரமான தந்திரத்தைக் கடைப்பிடிக்கிறது ஓனிக்ஸ் நிர்வாகம். வேகம் குறைந்த தொழிலாளர்களை அடையாளம் கண்டு 'நின்னால் குத்தம் உட்கார்ந்தால் குத்தம்' என்று அவர்களுக்கு அடுக்கடுக்காக மெமோ கொடுத்து அலுவலகத்துக்கு அலைய வைப்பது; அப்போதும் வேலையை விட்டு ஓடவில்லையென்றால் 'ரீ டிரெய்னிங்' என்ற பெயரில் இறுகிப் போன மண் மேடுகளைத் தன்னந்தனியாக சவல் போட்டு பெயர்த்தெடுக்கும் கொடிய தண்டனையை வழங்குவது - இந்தக் கொடுமைகள் தாளாமல் பரிதாபத்துக்குரிய அந்தத் தொழிலாளர்கள் தானே வேலையை விட்டு ஓடுகிறார்கள்.

ஆனால் தேய்ந்து போன லாரிகளை ஓனிக்ஸ் இவ்வாறு கழித்துக்

www.padippakam.com

கட்டுவதில்லை. ''ஆரம்பத்துலதான லாரியெல்லாம் பந்தாவா இருந்திச்சு. இப்ப எந்த வண்டியிலுமே ஷாக் அப் சர்வர் வேலை செய்யறதில்லை. குப்பைய ஓவர் லோடு ஏத்தி வண்டி ஓட்ட முடியாம இடுப்பு வலி தாங்கல சார். குப்பை கொட்றப்ப எரிஞ்சு புகைமூட்டமாக இருக்கும். எதிர்ல வர்ற ஆளும் தெரியாது. வண்டியும் தெரியாது. குப்ப பொறுக்குறவங்க மேல வண்டி ஏறிடும். நைட்ல எங்காளுகளே வண்டி ஏறி செத்ததுண்டு டிரைவர்னு வேலைக்கு சேர்ந்தேன். தினம் 3 டிரிப் அடிக்கணும். முடிச்சிட்டா நீயும் போய் குப்பை வாருன்னு கட்டாயப்படுத்துறாங்க. முடியலீங்க. வேலைய விட்டுரலாம்னு இருக்கேன்.'' இது ஒரு டிரைவரின் குமுறல்.

ஓனிக்ஸிலிருந்து ராஜினாமா செய்து விட்டு ஓடிய தொழிலாளர்கள் சுமார் 4000 பேர். சில ஆண்டுகளிலேயே இத்தனைப் பெரிய வெளியேற்றம். வேறெந்தத் தொழிலிலும் காண முடியாதது. இளம் குருத்துக்களை வேலைக்கு எடுத்து, அவர்களுடைய எலும்பையும் தசையையும் கரும்புச் சாறு பிழியும் எந்திரம் போல முறுக்கிப் பிழிந்து 4000 பேரைத் துப்பியிருக்கிறது ஓனிக்ஸ்.

ஒரு தொழிலாளியின் சம்பளம் 2300 ரூபாய். ஆண்டுக்கு 24 நாட்கள் விடுப்பு. மூட்டு வலி, சுவாசக் கோளாறு, வயிற்று வலி, குடலிலும் சீறுநீரகத்திலும் மண் தங்குதல்- இவை எல்லாத் தொழிலாளர்களுக்கும் வரும் நோய்கள். எனவே கூடுதல் விடுப்பு எடுப்பது தவிர்க்க முடியாதது. கூடுதலாக விடுப்பு எடுத்தாலோ, முன் அனுமதியின்றி எடுத்தாலோ, ஒருநாள் விடுப்புக்கு 4 நாள் சம்பளம் (ரூ. 340) வெட்டு.

சூபர்வைசர்களின் சம்பளம் 15,000 ரூபாய். ஒவ்வொருவரும் 60 தொழிலாளிகள் மற்றும் சுமார் 40 கி.மீ நீளச் சாலைக்குப் பொறுப்பு. இந்தப் பணிச்சுமையால் வேட்டை நாய்களாகவே அவர்களை மாற்றியிருக்கிறது நிர்வாகம். குப்பையின் எடையும் தண்டிக்கப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கையும் கூடக் கூட அவர்களுக்கு நட்சத்திர ஓட்டலில் விருந்து, பரிசுகள்.

டன் ஒன்றுக்கு 650 ரூபாய் என்ற கட்டணத்தில் நாளொன்றுக்கு 1200 டன் குப்பை அள்ள வேண்டுமென்பது மாநகராட்சிக்கும் ஓனிக்ஸுக்கும் இடையிலான ஒப்பந்தம். இந்தக் கணக்கின்படி ஓனிக்ஸின் மாத வருவாய் ரூ. 2 கோடி 35 லட்சம். 2300 தொழிலாளர்களுக்கு (மொத்த ஊதியம் சராசரி ரூ. 3000 என்ற கணக்கில்) வழங்கப்படும் ஊதியம் 69 லட்சம் மட்டுமே. பிற செலவினங்கள் போனாலும் தோராயமாக மாத லாபம் ஒரு கோடி ரூபாய். குப்பையின் எடையைக் கூட்டுவதற்காக கட்டிடம் இடித்த கற்களை அள்ளி, குப்பைக் கணக்கில் சேர்த்துக் காசு பார்க்கிறது ஓனிக்ஸ். அவ்வப்போது பிடிபடும் இந்த மோசடியை லஞ்சத்தால் சரிக்கட்டியும் விடுகிறது.

இந்த ஒரு கோடி ரூபாய் லாபத்தைப் பெறுவதற்காக ஓனிக்ஸ் இறக்கியிருக்கும் தொழில் நுட்பமென்ன? போட்ட முதலீடு என்ன? நம்மூர்க் குப்பைதான் முதலீடு. கசக்கிப் பிழியப்படும் நம் தொழிலாளர்களின் உழைப்புதான் தொழில்நுட்பம்.

**ஓனிக்ஸிலிருந்து ராஜினாமா செய்து விட்டு ஓடிய தொழிலாளர்கள் சுமார் 4000 பேர். அவர்களுடைய எலும்பையும் தசையையும் கரும்புச்சாறு பிழியும் எந்திரம் போல முறுக்கிப் பிழிந்து 4000 பேரைத் துப்பியிருக்கிறது ஓனிக்ஸ்.**

கம்ப்யூட்டர் திரையையும் லாபக் கணக்கையும் தவிர வேறெதுவும் தெரியாத ஒரேயொரு வெள்ளைக்கார நிர்வாகியை மட்டும்தான் சென்னையில் இறக்கியிருக்கிறது ஓனிக்ஸ். வந்திறங்கிய ஒருசில ஆண்டுகளிலேயே 4000 இளைஞர்களை உயிருள்ள குப்பைகளாக்கி வீசியிருப்பதுதான் ஓனிக்ஸின் 'திறமை'. ஈவிரக்கமற்ற சுரண்டல்தான் ஓனிக்ஸ் வழங்கும் சுத்தத்தின் இரகசியம்.

தென் ஆப்பிரிக்காவின் தலைநகர் ஜோஹனஸ்பர்க்கில் குடிநீரைத் தனியார்மயமாக்கி, ''ப்ரீ பெய்டு அட்டை வாங்க முடிந்தவர்களுக்கு மட்டும்தான் குடிநீர்'' என்ற கொடிய திட்டத்தை அமல்படுத்திய ***வயோலியா*** என்ற பிரெஞ்சு பன்னாட்டு நிறுவனத்தின் கிளைதான் ***ஓனிக்ஸ்.*** காசில்லாதவனுக்குக் குடிநீரில்லை என்ற இந்தக் கொடிய திட்டத்தின் விளைவாக லட்சக் கணக்கான கறுப்பின ஏழைமக்கள் கழிவுநீரையும் குட்டை நீரையும் குடித்து காலராவுக்கு இரையாகினர்.

அதே வயோலியா நிறுவனம்தான் சென்னை மாநகரக் குடிநீர் வழங்கல் வாரியத்தின் ஆலோசகராகவும் அரசால் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, குப்பையில் லாபம் பார்க்கும் ஓனிக்ஸ், குடிநீரில் லாபம் பார்ப்பதெப்படி என்பதை நமது மாநகராட்சிக்குச் சொல்லிக் கொடுத்து வருகிறது. அந்த நிறுவனத்தின் கிளைதான் கழிவுகளிலிருந்து நம்மைப் 'பாதுகாக்க' வந்திறங்கியிருக்கிறது. ஓனிக்ஸின் ஒப்பந்தம் நீடிக்கப்படும்; மெல்ல மெல்ல சென்னை முழுவதுற்கும் அது விரிவுபடுத்தப்படும்.

ஏனென்றால், தனியார்மயம்தான் அரசின் கொள்கை. பணி உத்திரவாதம், குறைந்த பட்ச ஊதியம், தொழிற்சங்க உரிமைகள் போன்ற 'தொந்திரவுகள்' நீக்கப்படாமல் இருப்பதால்தான் பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் நுழையத் தயங்குகின்றன என்றும் தொழிலாளர் நலச் சட்டங்களை உடனே ஒழித்தால்தான் ஓனிக்ஸ் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் நமது மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியுமென்றும் கூறுகிறார் மன்மோகன் சிங்.

அரசு இனி வழங்கவிருப்பதெல்லாம் இத்தகைய வேலை வாய்ப்புகள்தான். ஓனிக்ஸ் தொழிலாளர்களில் பலர் எம்.ஏ., பி.ஏ. பட்டதாரிகள். பல சாதிகளையும் சேர்ந்தவர்கள். நினைவுபடுத்திக் கொள்ளுங்கள் - அவர்களுடைய மாதச் சம்பளம் 2300 ரூபாய். குடியிருக்கும் இடத்திலிருந்து குப்பை அள்ளும் இடத்திற்கு வந்து போக பேருந்துக் கட்டணம் தினமும் 10 ரூபாய். தேநீர்ச் செலவு குறைந்தது 10 ரூபாய். ஒரு நிமிடம் தாமதமாக வந்தாலும் ஒருநாள் சம்பளம் வெட்டு - அந்த வகையில் மாதம் 340 ரூபாய். மிஞ்சுவது மாதம் 1340 ரூபாய். மருத்துவச் செலவு அதில்தான், சீருடையைத் துவைக்கும் செலவு அதில்தான். சோறும் வீட்டு வாடகையும் அதில்தான். இதுதான் தனியார்மயம் வழங்கும் 'வேலை வாய்ப்பு'.

இனி இது ஓனிக்ஸ் தொழிலாளர் பிரச்சினை மட்டுமல்ல, உங்கள் பிரச்சினை. இத்தகைய வேலைவாய்ப்புக்கு நீங்கள் தயாரா?

● க.மு.


படிப்பகம்

www.padippakam.com



# நெய்தல் குறிப்புகள்

நாளங்காடி, பொழுதங்காடி
யவனர் வந்து கால்தடம் பதித்து...
நீட்டி முழக்கும் நெய்தற்குறிப்பில்
சேர்த்துக் கொள்ளுங்கள் இதையும் -

கோட்டுச்சேரி சுனாமி குடியிருப்பில்
வெறிநாய் வந்து கால்தடம் பதித்து
கைக்குழந்தையைக் கடித்துக் குதறிய காட்சியையும்!

உறங்கிக் கிடக்கும் குழந்தை அழகில்
ஈ மொய்த்தாலே தாய்மனம் பதைக்கும்
தெள்ளுப்பூச்சி கடித்தாலே தேகம் சிவக்கும்
பிள்ளைமுகம் நாய் கடித்தால்
யார் மனம் பொறுக்கும்?

ஊருக்கு வெளியே குடியிருப்பு
சாவுக்கு வெளியே காத்திருப்பு.

கருவறை நீந்தி நீர்மடி குதித்து
தலைமுறை கலந்த பரதவர் உறவை
கொலை செய்தோம் என்ற குற்ற உணர்வில்
பார்ப்பவர் முகத்தில் பழகத் தயங்கி
கூசிப் பின்வாங்குது கடல்.

''உலகவங்கியில் முதலீடு செய்த
தமிழகத்துப் பிணங்களுக்குத் நானே முதல்வர்
இவை என்னுடைய பிணங்கள்''
தமிழகம் தரிசாக்கிப் படையல் கொள்ளும்
பாலைத் தெய்வத்தின் ஊளை கண்டு
பல இடங்களில் உள்வாங்கிக் கொண்டது கடல்.

''தேசியப் பேரழிவாகத் தெரிவு செய்த பிணங்களை
மாநிலத்து நிதியாக மாற்றீடு செய்து
நீ பேர் வாங்கிப் போகவா இலவு காத்தோம்?
இது அந்நிய மூலதனத்தின் ஆயுள் காப்பீடு
இந்தியப் பிணங்களைத் துண்டாடாதே
எங்கள் பிணங்களில் கை போடாதே!'' என
பிணங்களைச் சுரண்டும் கூட்டணி பார்த்து
ஓடி ஒளியுது சமுத்திர நண்டு.

அந்நிய நிர்வாணம் நம் தண்ணீரைப் பழிக்க
மணல்வெளி போர்த்திய மீன் வலைகளை
கழட்டி எறியச் சொல்லும் பறங்கியர் குரல்கள்
சூரியக் குளியலைக் கடை பரப்ப
கொளுத்தப்படும் குப்பங்கள்.

வலைவீசக் கடல் இல்லை, உலை வைக்க நிலமில்லை.
உழைப்பவர் கண்களில் புதிய உப்பளங்கள்.
தேர்தல் முத்துக்களைத் தெருவில் நிரல் பரப்பி
வாகைப் பூவோடு வருகிறார்கள்
யவனர்கள், பறங்கியர்
கூடவே புரட்சித் தலைவி, புரட்சிப் புயல்,
தமிழினத் தலைவர், காவலர், ஏவலர்......


செத்த ஓட்டுப் போக மத்த ஓட்டை வேட்டையாட
பிணங்களின் மீது வீசிய காசு
உன்னது என்னதென்று பேரிரைச்சலோடு
மனிதக் கூச்சம் சிறிதுமின்றி

ஊரைச் சுற்றி வளைக்குது வெறிநாய்கள்.

● துரை. சண்முகம்


படிப்பகம்

www.padippakam.com



# "மிக நெடிது மிகத் தொலைவு ஆப்பிரிக்கக் கருப்பு முகம்"

# ஒரு நிழற்படம் - சில கேள்விகள்

இதோ, இங்கே நீங்கள் பார்க்கும் நிழற்படத்தில் ஓர் ஆப்பிரிக்கப் பெண் - ஒரு சின்னஞ்சிறு கை அவள் வாயை வருடிப் பொத்தியபடி இருக்கிறது. அந்தக் கை சொல்லாமல் சொல்கிறது "பால் கொடு அம்மா." அவன் அவளது மகன். "என்னைக் கவனி" என்று கை அசைவில் ஊமைச் சொல்லை உதிர்க்கும் இந்தக் குழந்தையைக் கவனியுங்கள். தாய்தான் அதன் உலகம்.

அந்தப் பெண்ணைக் கேளுங்கள் - அவள் அறிவாள். ஆனால் அவள் பதில் சொல்வாளா, தெரியவில்லை. கண்கள்கூட அவளது உணர்ச்சிக் குவியல் உறைந்து போய்விட்டதையே சொல்கின்றன. கருப்புச் சிறுவனின் கரம் கூட - அவனது கூட்டுக்குள்ளே ஓடிக் கொண்டிருக்க வேண்டிய புரதம் தாமிரப் பழுப்பு நிற மெழுகாய் வெளியே உருகிவிட்டது.

அந்த ஆப்பிரிக்கப் பெண்ணின் நிழற்படம் எடுத்தவர் கனடா நாட்டுக் கலைஞர் ஃபின்பார் ஓ' ரெய்லி. இவர் ராய்ட்டர் உலகச் செய்தி நிறுவனத்தில் வேலை பார்க்கிறார். இப்படத்துக்காக 'உலகச் செய்தியாளர்' தரப்பில் முதல் பரிசு கொடுத்தார்கள். இந்த நிழற்படம் ஓர் உறைந்த படிமம். நேற்றைய, இன்றைய, நாளைய ஆப்பிரிக்காவின் தோராயமான செய்தி. ஒரே தொடரில் அதைச் சொல்வதானால் - சுரண்டலின் விளைவான பசி.

இந்த நிழற்படத்தைப் பரிசுக்குத் தேர்ந்தெடுத்த தலைமை நடுவர் சொன்னார்: "இந்தப் படத்தின் படிமம் எல்லா அம்சங்களையும் ஒன்றாகக் கொண்டிருக்கிறது. அழகு, பயங்கரம், அவலம், எளிமை, கம்பீரம் அத்தனையும் அதில் இருக்கிறது. உங்கள் மனத்தை அசைக்கவும் வல்லது." கவனமாக இச்சொற்கள் ஒவ்வொன்றையும் ஆய்வு செய்யுங்கள்.

உங்கள் மனதில் நியாயமாகவே சில கேள்விகள் எழும். பயங்கரத்தை எப்படி அழகாகப் பார்க்க முடியும்? அவலச் சித்தரிப்பு எப்படி கம்பீரமாக, சுவைநயமாக இருக்க முடியும்? மனிதனை பண்டங்களாக - அடிமைகளாக ஆக்கி, பயன்படுத்தியதும் தூக்கி எறிந்து அழித்துவிடும் முதலாளித்துவ உலகம் அப்படித்தான் நினைக்கும். அங்கே நீரோ பிடில் வாசிப்பான். அவர்களின் வாதப்படி உள்ளடக்கத்திலிருந்து பிரித்துவிட்டால், இசைநயத்தில் பிடில் அழகு. அப்படியானால், எது அழகு? மனிதத்துக்கு எதிரான உள்ளடக்கத்தை மறைக்கும் வடிவம் அழகாகுமா?

கலையின் உள்ளடக்கம் என்ன வேண்டுமானாலும் இருக்கட்டும். அதன் வடிவத்தைப் பாருங்கள் என்று வடிவம் முக்கியமென்று கற்றுத்தரும் முதலாளித்துவம் உள்ளடக்க முக்கியத்துவத்தை - அதன் சமூக சாராம்சத்தை ஒப்புக் கொள்ளக்கூடக் கூசுகிறது. அதாவது, ஆப்பிரிக்க அவலத்தையே 'அழகாக' எடுத்ததால்தான் ஓ' ரெய்லிக்குப் பரிசு கொடுத்திருக்கிறார்கள், பரிசு கொடுத்த நிபுணர்கள்.

மனத்தைத் தைக்கின்ற வலிதரும் அந்நிழற்படம் வெறும் அழகான காகிதமா? அல்ல, அப்படம் நானூறாண்டு ஆப்பிரிக்க வரலாற்றின் கொந்தளிப்பைத் தனக்குள்ளே வைத்துக் குமுறிக் கொண்டிருக்கும் ஓர் எரிமலை. ஆப்பிரிக்க வரலாற்றை ஆழமாக அறிந்தவர்களுக்கு இது புரியும்.

ஆப்பிரிக்கக் கருப்பர் 12 லட்சம் பேர் இன்று அகதிகள் முகாமில் வாடுகிறார்கள். கஞ்சிக்காக, மருத்துவத்துக்



படிப்பகம்

www.padippakam.com

காக அமைந்த அப்படிப்பட்ட நிகெர் என்ற ஆப்பிரிக்க நாட்டு முகாம் ஒன்றில்தான் ஓ' ரெய்லி அப்பெண்ணின் படத்தை எடுத்திருக்கிறார்.

அந்த நிகெர் நாட்டு வரலாற்றைப் புரட்டினால் இந்திய வரலாற்றைப் பார்ப்பது போலவே இருக்கிறது. ஒரே ஒரு வித்தியாசம் — இந்தியாவில் சாதிக் கொடுங்கோன்மை, ஆப்பிரிக்காவில் இன - யுத்தநிலப்பிரபுத்துவ கொடுங்கோன்மை.

ஆப்பிரிக்காவை அடிமைப்படுத்திய ஏகாதிபத்தியங்கள் - அதில் முக்கியமாக பிரான்ஸ், பாரம்பரிய நிகெரின் விவசாயத்தை அழித்து ஏற்றுமதிப் பணப் பயிருக்கு மாற்றியது; இயற்கைச் சூழலை அழித்தது; உணவுப் பயிர் உற்பத்தியைத் திட்டமிட்டு நசுக்கியது; இரண்டாம் உலகப் போருக்குப் பின் அமெரிக்க உலக வங்கிக் கடன்திட்டங்கள் ஆப்பிரிக்காவுக்குப் படையெடுத்தன. 1960-ன் பிற்பகுதியிலிருந்து 1998 ரசியச் சமூக ஏகாதிபத்தியத்தின் நிலைகுலைவு வரை 40 ஆண்டுகள் அமெரிக்க - ரசியமோதல் ஆப்பிரிக்க மண்ணிலும் நடந்தது. இரண்டு தரப்பிலிருந்தும் கலகக் கும்பல்களுக்குப் பணமும், ஆயுதமும் வாரிவழங்கப்பட்டன. சண்டைகள் பெருகின. நிகெர் உட்பட எத்தியோப்பியா, சோமாலியா, மொசாம்பிக் நாடுகளில் சகோதரப் படுகொலைகளில் ரத்தம் ஆறாய் ஓடியது.

ஆப்பிரிக்க மக்களின் இந்த வலிகள் யார் மனத்தைத் தொட்டனவோ அவர்கள் அம்மண்ணில் ஆப்பிரிக்கப் பசியின் நிறமென்ன என்று அறிந்து கொண்டு ரண வலியைக் கொடுத்த பிரெஞ்சு, ஆங்கிலேய, இத்தாலிய, அமெரிக்க ஏகாதிபத்தியங்களை கென்சரோ விவா போன்ற தியாகிகள் தலைமையில் எதிர்த்தார்கள்; இன்னமும் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், எதிரிகள் மக்களிடையே அடிவேர்வரை சென்று எதிர்ப்புக்களை நீர்த்துப் போகச்செய்து அடக்கி எதிர் வேலை செய்யக்கூடிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை, அடிமட்ட அரசாங்கங்களாக, விதைத்து வளர்க்கிறார்கள்.

அண்மையில், அவற்றின் ஊழியர்கள் ஆப்பிரிக்காவின் வறுமை பற்றி உலக மக்களின் கவன ஈர்ப்புக்காக ''வறுமையை வரலாறாக்குவோம்!'' என்ற முழக்கத்தோடு, பல ஐரோப்பிய இசை நிகழ்ச்சிகளை அமைத்தார்கள்; ஆப்பிரிக்க வரலாற்றையே வறுமையாக்கிப் புலம்பச் செய்துவிட்டார்கள்.

கருணை கூடச் சுரண்டும் என்றால் நீங்கள் ஒப்புக் கொள்ள மாட்டீர்கள். மேலே ஆப்பிரிக்கச் சூழலில் நடந்த பன்னாட்டுக் கம்பெனிகளது கருணையின் அரசியல்பற்றிச் சேர்த்துப் பார்த்தால் ஒப்புக் கொள்வீர்கள். அதற்கொரு கலை இலக்கணம் வகுத்தால் எப்படி இருக்கும்? அதுதான் ''அவலம் அழகாகுமெ''ன்ற நடுவரின் சொற்கள்.

அந்த நிழற்படத்தில் எது முக்கியம்? மனித அவலம், துன்பம்தான் படத்தின் உள்ளடக்கம், கருப்பொருள். அது முக்கியம் என்று அவர் சொல்லவில்லை, சொல்லமாட்டார். நாகரீக மனிதர்களின் மனதை உறுத்தாமல், மேட்டுக்குடி நன்கொடையைத் திரட்டுவதற்காக ஆப்பிரிக்க வறுமையைச் சொல்ல வேண்டுமானால் சுற்றி வளைத்து மென்மையான சரக்காக்கி 'அழகோ'டு சம்பந்தப்படுத்தி அறிமுகப்படுத்த வேண்டும். அதனால்தான் அதை 'அழகு' என்றார் அவர்.

இப்போது மறுபடி நிழற்படப் பெண்ணைப் பாருங்கள். அவள் பார்வை உங்களை ஆயிரம் கேள்விகளால் துளைக்கவில்லையா? ''எனது வரலாறு மட்டுமல்ல, உங்கள் தமிழகத்திலேயே தாதுவருஷத்துப் பஞ்சத்தில் சுமார் 40 லட்சம் மக்கள் மடிந்ததையும், பிறகு வந்த பல ஆயிரம் பஞ்சங்களில் பல லட்சம் மக்கள் மடிந்ததையும் மறந்துவிட்டீர்களே!'' என்று கேட்கவில்லையா?

அந்த ஆப்பிரிக்கப் பெண் ஏதோ சொல்ல வருவது போல இருக்கிறது; அவள் மகன் சிறு கரத்தால் தொட்டு, ''சொல் அம்மா, உன் வரலாற்றை உரக்கச் சொல்'' என்பது போலல்லவா இருக்கிறது!

ஒரு வரியில் அதை மொழிபெயர்த்துப் பாடினான், கறுப்புக் கவி லாங்ஸ்டன் ஹியூஸ்: ''மிக நெடிது மிகத் தொலைவு ஆப்பிரிக்கக் கறுப்பு முகம்.''

அதனாலேயே அது வலியது, நம் எல்லோருக்கும் நெருக்கமானதும் கூட.

● புதூர் இராசவேல்

*(நிழற்படமும் செய்தி ஆதாரமும்: 'இந்து' நாளேடு, 11.2.2006)*

## இந்து வாலா!

ஆப்பிரிக்காவில் உள்ள இருபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் ஒவ்வொரு நாட்டுக்கும் நெடிய வரலாறும் பலவிதமான வலிகளும் வேதனைகளும் உண்டு. அவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து அருகில் உள்ள கட்டுரையில் குறிக்கப்படும் ஆப்பிரிக்கப் பெண்ணோடு பொருத்திப் பார்க்க சமூகப் பார்வையும் சமூகச் சுரணையும் வேண்டும்.

இந்நிழற்படத்தையும் செய்திக் குறிப்பையும் வெளியிட்ட 'இந்து'ப் பத்திரிக்கையின் சமூகச் சுரணையைப் பாருங்கள். இதனை 'உலகச் செய்தி'ப் பக்கத்தில் வெளியிட்டுவிட்டு அதே பக்கத்தில் இன்னொரு செய்தியையும் வெளியிட்டிருந்தது. அது, மும்பை நாய்களுக்குச் சோறு கொண்டுபோகும் வியாபாரம் சக்கைப் போடு போடுவதைப் பற்றி.

மும்பையில் அலுவலக வேலைக்குச் செல்லும் நடுத்தர மக்களுக்குக் கூடையில் சோறு எடுத்துச் செல்பவரை 'டப்பாவாலாக்கள்' என்று அழைப்பார்கள். இனி, அவர்கள் பங்களா நாய்களுக்கும் வகைவகையான தரம் உயர்ந்த சோறு எடுப்பார்கள். இப்போதே இந்தியாவின் முக்கிய நகரங்களில் மொத்தம் ஒன்னேகால் கோடி வளர்ப்பு நாய்கள் இருக்கின்றன, இனிவரும் மூன்றாண்டுகளில் எண்ணிக்கை இருமடங்காகிவிடும் என்று 'இந்து' சொல்கிறது. உலகமயமாக்கத்தால் செல்வம் பெருகியிருப்பதும், மக்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்திருப்பதும் காரணமாம்.

உலகின் ஒரு பெரும் கண்டமான ஆப்பிரிக்காவில் மக்கள் பசியால் துடிக்கிறார்கள்; இந்தியாவிலும் ஒரிசா, ராஜஸ்தான், ஆந்திர விவசாயிகள் சோறில்லாமல் பச்சிலை தின்கிறார்கள், பட்டினியால் மடிகிறார்கள், வாழ வழியில்லாமல் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இந்நேரத்தில் இப்படி இரு செய்திகளை ஒரே பக்கத்தில் வடிவமைப்பு (lay-out) செய்திருக்கிறது 'இந்து' ஏடு. இது வக்கிரத்தின் உச்சம். வருணாசிரமச் சாதி இதயம் எந்த அளவு வக்கிரமானதோ அதே அளவு இப்படி உலகமயத்தால் பெருகிய பணக்கொழுப்பு வழிவதும் வக்கிரமே.

அறச்சீற்றத்தை 'இந்து' இதயத்திலிருந்து எதிர்பார்க்க முடியுமா, முடியாதுதான்.


படிப்பகம்

www.padippakam.com

# ரங்க் தே பசந்தி:

# பீர் பாட்டிலில் பீறிடும் புரட்சி!

அரசியல் என்றால் என்னவென்று நேர்மறையில் விளக்குவதை விட எதிலெல்லாம் அரசியல் ஒளிந்து கொண்டு என்னவாக இருக்கிறது என்று விளக்குவது சிரமமானது. அதுவே ஒரு சினிமா எனும் போது காட்சிக் கலையின் உணர்ச்சி வெள்ளத்தில் பார்வையாளர்கள் கட்டுண்டே இருக்க முடியும் என்பதால் கூரிய விமரிசனப் பார்வையை ஏற்படுத்தும் முயற்சி இன்னும் கடினமாக மாறிவிடுகிறது.

சினிமா ஒரு பொழுதுபோக்கு என்ற நிலை மாறி பொழுதைப் போக்குவது என்றால் என்பதன் பொருளே அது சினிமாதான் என்று மாறியிருக்கும்போது ஒரு திரைப்படத்தைக் கருத்தியல் தளத்தில் நின்று பார்ப்பது, சிந்திப்பது, விவாதிப்பதினூடாகத்தான் காட்சிக் கலையின் உணர்ச்சிக் கவர்ச்சியிலிருந்து நம் சொந்த விழிப்புணர்வு வழியாக விடுதலை பெற முடியும். இல்லையென்றால் அந்த அபினின் போதையில் நம்மிடம் கருக்கொண்டிருக்கும் முற்போக்கான அரசியல் பாதை நம்மையறியாமலே குழப்பமடையக் கூடும். அப்படித்தான் சாதாரண மக்களிடம் பல்வேறு ஆளும் வர்க்க அரசியல் கருத்துக்கள் குடியேறுகின்றன. இந்தக் குடியேற்றத்துக்கு இந்தி பேசும் மாநிலங்களில் தற்போது வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் *ரங் தே பஸந்தி* இந்தித் திரைப்படம் ஓர் எடுத்துக்காட்டு.

தற்போதைய சினிமா ஃபார்முலாவின் படி விறுவிறுப்பான திரைக்கதையைக் கொண்ட இந்தப் படத்தைப் பார்க்க இயலாத வாசகர்களுக்காக கதையைச் சுருக்கமாகத் தருகிறோம்.

லண்டனில் இருக்கும் ஓர் ஆங்கிலேயப் பெண் இந்தியாவில் காலனிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய புரட்சிகர வீரர்களான சந்திரசேகர ஆசாத், பகத்சிங், ராம்பிரசாத் பிஸ்மில், அஷ்பகுல்லா கான் முதலானவர்களின் வரலாற்றில் ஆர்வம் கொள்கிறாள். அவர்களைப் பற்றி அவள் எடுக்க விரும்பும் ஆவணப்படம் மிகுந்த செலவு பிடிக்கும் என்பதால் அவள் வேலை பார்க்கும் என்.ஆர்.ஐ. இந்தியர்களை இயக்குநர்களாகக் கொண்ட நிறுவனம் மறுத்து விடுகிறது. இதனால் தன் சொந்த முயற்சியில் படமெடுப்பதற்கு இந்தியா கிளம்புகிறாள்.

புதுதில்லியில் இறங்குபவளை வரவேற்கும் ஒரு இந்தியத் தோழியின் உதவியோடு தன் ஆவணப்படத்தில் நடிக்க வைப்பதற்கு பல கல்லூரி மாணவர்களைச் சந்திக்கிறாள். ஆசாத், பகத்சிங் உரையாடல்களைப் பேசத் திணறும் அந்த நவநாகரீக இளைஞர்களைக் கண்டு சலிப்புக் கொள்கிறாள். சலித்தவளை ஜாலியாக மாற்றுவதற்கு அந்த இந்தியத் தோழி தன்னுடைய நண்பர் வட்டத்தை அறிமுகம் செய்கிறாள்.

ஆமிர்கானின் அந்த நண்பர் வட்டம் வண்ணமயமானது. இந்து, முசுலீம், சீக்கியர், ஓவியர், அதிவேகமாக பைக் ஓட்டுபவர்கள், பீரைக் குடித்தவாறே பனைமர உயரத்தில் இருந்து தண்ணீரில் குதிப்பவர்கள், இப்படிப் பல அடையாளங்களோடு ஆட்டமும், பாட்டமுமாய் நாளைக் கழிப்பவர்கள். தோழியின் காதலனான மாதவன் இந்திய விமானப்படையில் பைலட்டாகப் பணியாற்றுபவர். அவரும் இந்தக் கும்மாளத்தில் அவ்வப்போது பங்கு பெறுபவர்.

**சுதந்திரப் போராட்ட வீரர்களின் உரைகளைப் பேசி நடிக்கும் அந்த இளைஞர்கள் ஊரைச் சுற்றியவாறு கேலி பேசித் திரியும் தங்களது அற்பவாழ்க்கை குறித்து எள்ளளவேனும் குற்றஉணர்வு அடைவதில்லை. மாறாக, தாங்கள் ஏற்கெனவே நல்லவர்கள் எனவும் தங்களைப் போன்ற நல்லவர்கள் அரசியலுக்கு வராமல் இருப்பது மட்டும் நல்லதல்ல என்று அதையும் மேலோட்டமாக பாரில் அமர்ந்து கொண்டு மது அருந்தியவாறு பேசிக் கொள்கிறார்கள்.**

இந்த நண்பர் வட்டத்தின் இளமைத் துடிப்பில் மனதைப் பறி கொடுத்த அந்த வெள்ளைக்காரப் பெண்மணி இவர்கள்தான் தன் படத்தில் நடிப்பதற்குப் பொருத்தமானவர்கள் என்று முடிவு செய்கிறாள். இந்த நண்பர் வட்டத்திற்கு பாரதப் பண்பாடு குறித்து உபதேசம் செய்து சண்டையிடும் அதுல் குல்கர்னி ஒரு தீவிரமான பாரதீய ஜனதா தொண்டர். அவரையும் தன் படத்தில் நடிக்க வைப்பதற்குத் தேர்வு செய்கிறாள். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நண்பர் வட்டத்தினர் பின்னர் ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஆரம்பத்தில் இந்த ஆவணப்படத்தை தமாசாகக் கருதும் நண்பர்கள் அந்த வெள்ளையினப் பெண்ணின் தீவிரமான அக்கறையை உணர்ந்து வசனங்களையெல்லாம் மனப்பாடம் செய்து நடிப்பதில் கவனம் செலுத்துகிறார்கள். நவ ஜவான் பாரத் சபாவின் உறுப்பினர்கள் நெருப்பின் மேல் உறுதிமொழியெடுப்பது, காகோரி ரயில் கொள்ளை, லாலாலஜபதிராய் மீதான தடியடி, அதற்குப் பதிலடியாக ஆங்கிலப் போலீசு அதிகாரியான ஸாண்டர்சைக் கொலை செய்வது, பாராளுமன்றத்தில் பகத்சிங் குண்டு வீசுவது எல்லாம் படமாக்கப்படுகின்றன.

இறுதியில் போராளிகள் தூக்கிலிடப்படும் காட்சிகளைத் திரையில் பார்க்கும் நண்பர்கள் சில கணங்கள் உறைந்து போகிறார்கள். ஒரு மேட்டுக்குடி மது பாரில் அமர்ந்த படி, சீரழிந்து வரும் இன்றைய இந்தியாவைக் காப்பாற்றுவது குறித்து விவாதிக்கிறார்கள். பைலட் மாதவன், படித்தவர்கள் இராணுவத்துக்கும், ஐ.ஏ.எஸ்ஸுக்கும், அரசியலுக்கும் வரவேண்டும் என்கிறார். படவேலைகளுக்கு இடையே ஆட்டமும், பாட்டமுமான அவர்களது கொண்டாட்ட வாழ்க்கையும் தொடருகின்றது.

ஆனால் மிக்-21 விமானத்தில் பறந்த மாதவன் விபத்தில் இறந்து போக நண்பர்களின் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை ஒரு முடிவுக்கு வருகிறது. விமானப்படையில் பல ஆண்டுகளாகப் பணியிலிருக்கும் ரசியாவின் மிக்-21 விமானங்கள் அடிக்கடி விபத்திற்குள்ளாவது குறித்துப் புலனாய்வு செய்த என்.டி.டி.வி தொலைக்காட்சி, தரங்குறைந்த மிக் ரக விமானங்களை வாங்கியதில் ஊழல் இருப்பதாக அறிவிக்கிறது. ஆட்சியிலிருக்கும்




படிப்பகம்

www.padippakam.com

பா.ஜ.க. அமைச்சரவையில் ஊழல் செய்த அந்த மந்திரி விமானம் வாங்கியதில் ஊழல் ஒன்றுமில்லையென வும், விமானம் விபத்திற் குள்ளானதற்கு பைலட்டின் தவறே காரணம் என்றும் அலட்சியமாகக் கூறுகிறார்.

அதிர்ச்சி அடைந்த நண் பர்கள், மாணவர்களைத் திரட்டி இந்தியா கேட் எதிரே (குடியரசுத் தின ஊர் வலம் நடக்கும் இடம்) மெழுகுவர்த்தி ஏந்தி அமை தியாக ஊர்வலம் நடத்தி தங்களது எதிர்ப்பைக் காண் பிக்கிறார்கள். எரிச்சலடை யும் மந்திரி போலீசை விட்டுக் கொடூரமாகத் தடிய டித் தாக்குதலை நடத்துகி றார். பலருக்கு மண்டை உடைகிறது. மாதவனின் வயதான அம்மா கோமா நிலைக்குப் போகிறார். இந்தக் காட்சி லஜபதிராயின் தடியடிக்காட்சிகளுடன் மாற்றி மாற்றிக் காண்பிக்கப்படுகிறது.




ஆத்திரமடைந்த நண்பர்கள் முதன் முதலாக அரட்டைக்குப் பதிலாகக் கோபத்துடன் கூடி விவாதிக்கிறார்கள். தாங்கள் ஏற்று நடித்த புரட்சியாளர்க ளின் வசனங்களை இப்போது நிஜத் தில் பேசுகிறார்கள். இங்கும் ஆசாத் தும், பகத்சிங்கும், பிஸ்மில்லும் மாறி மாறி வந்து பேசுகிறார்கள். எது நிழல் எது நிஜம் என்ற பேதம் தெரியாதபடி விவாதம் நடைபெறுகிறது. இறுதியில் மந்திரியைக் கொல்வது என்று முடிவெ டுக்கிறார்கள்.

ஆவணப்படத்தில் இடம் பெறும் சான்டர்ஸ் கொலைக்காட்சியைப் போலவே அதே சூழலில், அதே உத்தி யோடு மந்திரி கொலை செய்யப்படுகி றார். தொலைக்காட்சியில் பரபரப்புச் செய்தியாக இடம் பெறும் இந்தச் சம்ப வத்திற்குக் காரணம் யார் என்று தெரி யாத சூழ்நிலையில் ஐ.எஸ்.ஐ. சதியாக இருக்குமோ என்று அரசியல் உலகில் பேசப்படுகிறது. தங்களது கொலைக் கான நியாயம் இதன் மூலம் மறைக்கப் படுவது கண்டு குமுறும் நண்பர்கள் அதை உலகிற்குச் சொல்லுவதென முடி வெடுக்கிறார்கள். ஒருநாள் அதிகாலை யில் ஆல் இந்தியா ரேடியோவைக் கைப்பற்றி நேரடி ஒலிபரப்பில் தங்கள் தரப்பு நியாயத்தைத் தெரிவிக்கிறார் கள். தொலைபேசியில் வாழ்த்துக்களு டன் வரும் கேள்விகளுக்குப் பதிலளிக் கிறார்கள். தொலைக்காட்சிகளிலும் இந்தச் சம்பவம் தலைப்புச் செய்தியா கக் காட்டப்படுகிறது.

இவர்களைப் பயங்கரவாதிகளாகக் கருதும் அரசு அதிரடிப்படையை வானொலி நிலையத்திற்கு அனுப்புகி றது. நண்பர்கள் அனைவரும் துப்பாக் கிக் குண்டுகளால் சல்லடையாகத் துளைக்கப்பட்டுக் கொல்லப்படுகிறார் கள். ஆவணப்படத்தில் தாங்கள் தூக்கி லிடப்படும் காட்சிகளை நினைத்த வாறே சிரித்துக்கொண்டே சாகிறார் கள். என்.டி.டி.வியின் காமராக்கள் வழி யாக இந்தியா முழுவதும் இளைஞர்க ளும், மாணவர்களும் அரசின் நடவடிக் கையைக் கண்டிப்பதோடு படித்தவர் கள் அரசியலுக்கு வரவேண்டும் என் பதை உணர்ச்சிப் பெருக்கோடு பேசுகி றார்கள். திரையரங்கை விட்டு வெளி யேறும் ரசிகர்கள், வரலாற்றிலிருந்து பகத்சிங்கும், ஆசாத்தும் தங்களுக்குப் பிடித்த விதத்தில் உயிர்த்தெழுந்து வரு வதை கைதட்டியவாறே எண்ணி மகிழ்ந்தவாறு மனதில் பாரத்துடன் வெளியேறுகிறார்கள்.

நகர்ப்புற - அதிலும் மாநகரப் பார் வையாளர்களைக் குறிவைத்து சுமார் 30 கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப் பட்டிருக்கும் இப்படம் 600 பிரதிகள் எடுக்கப்பட்டு உலகெங்கும் வெளியி டப்பட்டு முதல் வாரத்திலேயே தயா ரிப்புச் செலவை வசூலித்து விட்டதாம். இந்தப் படத்தின் வெற்றிக்குக் காரணம் என்ன? மாறுபட்ட திரைக்கதை என்ப தாலும் இருக்கலாம். அந்த மாறுபாடு என்ன, பார்வையாளர்கள் எதில் ஒன்றி னார்கள், இப்படத்தின் உணர்ச்சி தோற் றுவிக்கும் அரசியல் என்ன என்பதைப் பரிசீலிப்பதற்கு முன் சில கொசுறு விசயங்களைப் பார்த்து விடலாம்.

அந்த வெள்ளைக் காரப் பெண் தன் சமகால அரசியல் உணர்வுக்கு உண் மையாக இருக்கும் பட்சத் தில் ஆவணப்படம் எடுக்க அமெரிக்காவும், பிரிட்ட னும் ஆக்கிரமித்திருக்கும் இராக்கிற்குத்தான் சென்றி ருக்க வேண்டும். சரி போகட்டும், இந்தியா விற்கு வந்தவள் அந்த நண் பர் வட்டத்துடன் ஆடிப் பாடிப் பழகுபவள் மறந்தும் கூட இராக் மீதான ஆக்கிர மிப்பு குறித்துப் பேச வில்லை.

இதற்கும் இந்தப் படத்திற்கும் என்ன சம்பந் தம் என்று கேட்கலாம். இருக்கிறது. படத்திற்கு ஸ்பான்சரே கொக்கோ கோலாதான். படத்தில் நண்பர்கள் சாப் பிட்டவாறே அரட்டையடிக்கும் பஞ் சாப் தாபா காட்சிகள் முழுக்க கோக் விளம்பரங்கள்தான். நடிகர் ஆமிர்கா னும் கோக்கின் முக்கியமான விளம்பர நட்சத்திரமாவார். படம் வெளிவந்த தினங்களில் கோக் தனது பாட்டில்க ளில் ரங் தே பஸந்தி ஸ்டிக்கர் ஒட்டியே விநியோகித்திருக்கிறது. பிளாச்சிமடா விலும், கங்கைகொண்டானிலும் போராடும் மக்களை ஒடுக்க தனி சாம் ராச்சியமே நடத்திவரும் கோக் இங்கே ஹீரோக்களின் மனம் கவர்ந்த பான மாக இருக்கிறது. 21-ஆம் நூற்றாண் டின் இந்திய தேசபக்தியில் கோக்கும் ஒரு அங்கம் என்பது உலகமயமாக்கம் தோற்றுவித்திருக்கும் ஒரு கள்ள உறவு போலும்.

அடுத்து மிக்-21 விமானம் எனும் ரசியவிமானம் வாங்கியதில் ஊழல் என்று வருகிறது. இதுவே எப்-16 எனும் தரங்குறைந்த அமெரிக்க விமா னம் வாங்கியதில் ஊழல் என்று எடுத்தி ருக்க முடியுமா? அல்லது உண்மை யான இராணுவ ஊழல்களான போஃபர்ஸ் பீரங்கி, கார்கில் சவப் பெட்டி ஊழல், ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் ஊழல் போன்றவற்றை வைத்து எடுத்திருக்க முடியுமா?

அப்படி எடுத்திருந்தால் அமெரிக்க அடிமைத்தனத்திலும், இந்த ஊழல்களி லும் ஊறித்திளைத்திருக்கும் தற்போ தைய காங்கிரசு அரசு, ஆர்.கே.செல்வ மணியின் *குற்றப்பத்திரிகையை* நல்ல டக்கம் செய்த்து போல இந்தப்

www.padippakam.com

படத்தைப் புதைத்திருக்கும். எனவே, ஊழல் பற்றிப் பேசுவதாக இருந்தாலும் ஆளுபவர்களின் மனம் நோகாமல் பேசவேண்டும் என்ற விதியை படம் செவ்வனே பின்பற்றியிருக்கிறது.

மகிழ்ச்சியாக வாழும் அந்த நண்பர் வட்டத்தில் சோகத்தைக் கொண்டு வரும் ஒரு ஊழல் மந்திரியை எப்படிப் போட்டுத் தள்ளுவது என்பதை வித்தியாசமாகச் சொல்லவேண்டும் என்று யோசித்திருக்கும் இந்தப் படத்தின் படைப்பாளிகள் அதற்காக மட்டுமே பகத்சிங், ஆசாத் வரலாற்றை வம்படியாய் இழுத்து வந்திருக்கிறார்கள். ஏற்கெனவே பகத்சிங்கிற்கு பொட்டு வைத்தும், ஆசாத்துக்குப் பூணூல் போட்டும் இந்து மதவெறியர்கள் செய்யும் அநீதி ஒருபுறம். மறுபுறம் பாராளுமன்றப் பூசை செய்யும் போலி கம்யூனிஸ்ட்டுகள் தங்களால் கனவிலும் செய்யமுடியாத சாகசங்களைச் செய்திருக்கும் பகத்சிங்கை ஆக்ஷன் ஹீரோவாக அணிகளுக்குச் சித்தரிக்கும் அயோக்கியத்தனம். இப்போது இந்தப் படமும் தனது பங்குக்கு பகத்சிங்கை இம்சை செய்கிறது.

ஆங்கிலேயருக்கு எதிரான இந்திய மக்களின் வீரமிக்க போராட்டங்களை பலமுறை காட்டிக் கொடுத்தும் கருவறுத்தும் வந்தது காந்தி - காங்கிரசு துரோகக் கும்பல். இந்தத் துரோக வரலாற்றுக்கெதிரான குறியீடுதான் பகத்சிங். தனது சிறைக்குறிப்புக்களில் இந்தியாவில் மலர வேண்டிய சோசலிச ஆட்சி குறித்தும், அதற்கு மக்களை அணிதிரட்டிச் செய்யவேண்டிய புரட்சிப் பணி குறித்தும், பரிசீலனை செய்து கனவு காணும் இந்த வரலாற்று நாயகனை பொய்யான சித்தரிப்புக்களிலிருந்து மீட்டெடுக்க வேண்டிய கடமை நமக்கிருக்கிறது. இந்தப் படத்தில் கேளிக்கைகள் செய்வதிலும், மந்திரியைக் கொல்வதிலும் ஈடுபடும் மேட்டுக்குடி இளைஞர்களின் சாகச உணர்வை ஒளிவட்டம் போட்டுக் காண்பிப்பதற்காக பகத்சிங்கும் ஏனைய போராளிகளும் இழிவு படுத்தப்பட்டிருக்கின்றனர்.

ஆவணப்படம் எடுக்க வந்த அந்தப் பெண் நல்ல நடிகர்கள் வேண்டுமென்றால் புதுதில்லி தேசிய நாடகப் பயிற்சிப் பள்ளிக்குச் சென்றிருந்தால் விசயம் முடிந்திருக்கும். ஆனால் அதில் கதை இருந்திருக்காது. ரசிகர்களும் படத்தில் ஒன்றியிருக்க முடியாது.

பீர் - கோக்கைக் குடித்துக் கொண்டு அந்தரத்தில் சாகசம் செய்யும் இந்த இளைஞர்கள், கும்மிருட்டிலும் ஜீப்பையும் பைக்கையும் அதிவேகமாய் ஓட்டும் இந்த இளைஞர்கள், எப்போதும் ஆட்டமும் பாட்டமும் அரட்டையுமாய் இருக்கும் இந்த இளைஞர்கள், ஒருவருக்கொருவர் உயிருக்குயிராய் நேசிக்கும் இந்த இளைஞர்களின் கூட்டத்தை படம் ஆரம்பித்த சில மணித்துளிகளிலேயே ரசிகர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்; அங்கீகரிக்கின்றனர்; அந்தக் குழுவில் சேர விரும்புகின்றனர்; அல்லது சேர்ந்து விட்டனர். இத்தகைய துடிப்பான இளைஞர் குழாமில்தான் பார்வையாளர்கள் தங்களைக் காண்கின்றனரே ஒழிய பகத்சிங் முதலான போராளிகளில் அல்ல. இந்த நண்பர் வட்டத்திற்குள் ஆவணப்படத்தின் மூலம் வந்து போவதால்தான் அந்தப் புரட்சி வீரர்களுக்குரிய சிறப்பை ரசிகர்கள் அளிக்கின்றனர்.



**ஜெசிகா லால்: நிஜமாக விரும்பும் நிழல்**

**எம்.ஜி.ஆர். படங்களில் கூட நாயகன் வில்லனை அழிப்பதற்கு பல்வேறு காரணங்கள், நியாயங்கள், சம்பவங்கள் சொல்லப்பட்டு கடைசியில்தான் அநீதி ஒழிந்து நீதி வெற்றி பெறும். மேட்டுக்குடி வர்க்கத்திற்கு அந்தப் பொறுமை இருப்பதில்லை. அதனால் தான் அதற்கு ஜனநாயகம் பிடிப்பதில்லை. பாசிசமும், சர்வாதிகாரமும் மேட்டுக்குடி வர்க்கத்திற்குப் பொருந்தி வருகிற அரசியல் கோட்பாடுகள்.**

தகவல் புரட்சி நடைபெறும் மாநகரங்களில் ஐந்து இலக்கச் சம்பளம் வாங்கும் மேட்டுக்குடி நடுத்தரவர்க்கம் சனி, ஞாயிறு வார விடுமுறைகளில் இப்படித்தான் வாழ்கிறது அல்லது வாழ விரும்புகிறது. சுற்றிலும் சுயநலம் சூழ வாழ்ந்து கொண்டே இன்னும் மேலே செல்வதையே இலட்சியமாகக் கொண்டு நகரும் நிஜ வாழ்க்கையானது திரையில் தன்னை இவ்வாறு அறிந்துணர்வதில் வியப்பில்லை. இந்த வாழ்க்கையைத்தான் சமூகப் பொறுப்புள்ள வாழ்க்கையாக அந்த வர்க்கம் கருதிக் கொள்கிறது.

சுதந்திரப் போராட்ட வீரர்களின் உரைகளைப் பேசி நடிக்கும் அந்த இளைஞர்கள் ஊரைச் சுற்றியவாறு கேலி பேசித் திரியும் தங்களது அற்ப வாழ்க்கை குறித்து எள்ளளவேனும் குற்ற உணர்வு அடைவதில்லை. மாறாக, தாங்கள் ஏற்கெனவே நல்லவர்கள் எனவும் தங்களைப் போன்ற நல்லவர்கள் அரசியலுக்கு வராமல் இருப்பது மட்டும் நல்லதல்ல என்று அதையும் மேலோட்டமாக பாரில் அமர்ந்து கொண்டு மது அருந்தியவாறு பேசிக் கொள்கிறார்கள். கோப்பையில் இருக்கும் மது தீர்வதற்குள் மாதவன் இறந்துவிட உடனே மந்திரியைக் கொன்று தியாகியாகிறார்கள்.

அந்த மந்திரிகூட மக்களிடம் செல்வாக்குப் பெற்று அரசியலில் பல படிகளைத் தாண்டி மந்திரியாகி அப்புறம் தான் ஊழல் செய்ய முடியும். ஆனால் இந்த மேட்டுக்குடி இளைஞர்களுக்கு இந்தப் படிநிலைகள் ஏதும் இல்லை. ஒரே அடியில் தலைவர்களாகி விடுகிறார்கள். இந்தப் படத்திற்குள் ஒளிந்து கொண்டிருக்கும் அரசியல் இதுதான். எள்ளளவும் சமூகப் பொறுப்பற்று வாழும் மேட்டுக்குடி வர்க்கம் சமூகத்துக்குப் பொறுப்பான அரியணையில் தன்னை அமரவைத்து முடிசூட்டாததினால்தான் சமூகம் சீரழிவதாகக் கருதிக் கொள்கிறது.

இந்தக் கருத்துக்களை *முதல்வன்*, *அந்நியன்* படங்கள் முதல் ஹிந்துப் பத்திரிக்கைக்கு வாசகர் கடிதம் எழுதும் ஓய்வு பெற்ற பார்ப்பன மேல்சாதி அரசு அதிகாரிகள் வரை எங்கும் பார்க்கலாம். எம்.ஜி.ஆர். படங்களில் கூட நாயகன் வில்லனை அழிப்பதற்கு பல்வேறு காரணங்கள், நியாயங்கள், சம்பவங்கள் சொல்லப்பட்டு கடைசியில்தான் அநீதி ஒழிந்து நீதி வெற்றி பெறும். மேட்டுக்குடி வர்க்கத்திற்கு



படிப்பகம்

www.padippakam.com

அந்தப் பொறுமை இருப்பதில்லை. அதனால்தான் அதற்கு ஜனநாயகம் பிடிப்பதில்லை. பாசிசமும், சர்வாதிகாரமும் மேட்டுக்குடி வர்க்கத்திற்குப் பொருந்திவருகிற அரசியல் கோட்பாடுகள். எடுத்துக்காட்டு வேண்டுமென்றால் அருண்ஷோரி முதல் துக்ளக் சோ வரை பல அறிவாளிகளைக் கூறலாம். படத்தில் தங்கள் வட்டத்தின் மகிழ்ச்சி குலைந்துபோன ஒரே காரணத்திற்காக மட்டும் உடனே துப்பாக்கி தூக்குகிறார்கள். இல்லையேல் அந்தக் கைகளில் பீர் பாட்டில் மட்டும் இருந்திருக்கும்.

தற்போது தேசியப் பத்திரிக்கைகளில் அடிபடும் ஜெசிகாலால் விவகாரத்தைப் பாருங்கள். மனுசர்மா - ஹரியானா காங்கிரசு மந்திரியின் மகன், விகாஷ் யாதவ் - உ.பி. தாதா டி.பி. யாதவின் மகன், அமர்தீப் சிங், அலோக் கன்னா இருவரும் கோகோ கோலாவில் மானேஜர்கள்; இந்த நண்பர் வட்டம் 1999-இல் ஒரு நள்ளிரவில் மதுவருந்த டாமரின்ட் கோர்ட் எனும் பாருக்கு செல்கிறார்கள். மது பரிமாறும் ஜெசிகா லால் நேரமாகிவிட்டது என்று மறுக்கிறாள். வார்த்தைகள் தடிக்கின்றன. உடனே மனுசர்மா தனது ரிவால்வரால் ஜெசிகாவைச் சுட்டுக் கொல்கிறான்.

சுமார் 100 பேர் முன்னிலையில் நடந்த இந்தப் படுகொலைக்கான வழக்கு ஆறு ஆண்டுகளாய் நடந்து தற்போது குற்றவாளிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த நண்பர் வட்டத்திற்கும் படத்தில் வரும் அமீர்கானின் நண்பர் வட்டத்திற்கும் என்ன வேறுபாடு? ஒருவேளை இவர்கள் அந்த பாருக்குச் சென்று மது மறுக்கப்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? துப்பாக்கி இல்லாமல் போயிருந்தால் வெறும் கைகலப்பில் முடிந்திருக்கும். மனுசர்மாவைக் காப்பாற்ற பெரும் முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் மட்டுமின்றி சம்பவத்தின் போது உடன் சென்ற நண்பர்களும் பெரும் பிரயத்தனம் செய்திருக்கிறார்கள். இங்கும் நண்பர்கள் ஒருவருக்கொருவர் நேசிக்கத்தானே செய்கிறார்கள். இந்த நட்பு வட்டங்களின் மகிழ்ச்சிகளில் ஒன்றில் மந்திரி குறுக்கிடுகிறான், மற்றொன்றில் மது பரிமாறும் பெண் குறுக்கிடுகிறாள், அவ்வளவுதான் வேறுபாடு.

படத்தில் புரட்சிகரமான டி.வி.யாக வரும் பிரணாய் ராயின் என்.டி.டி.வி. நிஜத்திலும் அப்படிக் காட்டிக் கொள்ள முயலுகிறது. ஜெசிகாவுக்கு ஆதரவாக பலரும் மெழுகுவர்த்தி ஏந்தி இந்தியா கேட்டில் அமைதியாக எதிர்ப்பைக் காண்பிக்கிறார்கள். 2 இலட்சம் பேர் என்.டி.டி.விக்கு எஸ்.எம்.எஸ். அனுப்பினார்களாம். அதை எடுத்துக் கொண்டு பிரணாய் ராய் அப்துல் கலாமைப் பார்த்து நீதி வேண்டுமென கோரிக்கை வைத்தாராம். இதை அந்த டி.வி. ஏதோ மாபெரும் புரட்சி நடவடிக்கையாக சித்தரித்து நேரடியாக ஒளி பரப்புகிறது.



அமீர்கானின் நண்பர் வட்டத்துக்கும் மனுசர்மாவின் நண்பர் வட்டத்துக்கும் என்ன வேறுபாடு?

இதே பிரணாய் ராய் லாவோசில் நடந்த பொருளாதார மாநாட்டில் அனில் அம்பானி உள்ளிட்ட முதலாளிகளோடு ''உலக முதலாளிகளே இந்தியாவிற்குள் முதலீடு செய்ய வாருங்கள்'' என்று டான்ஸ் ஆடியவர். பில் கேட்ஸ் இந்தியாவிற்கு வந்த போது பரம்பொருளைக் கண்ட பரவசத்துடன் பேட்டி எடுத்தவர். புஷ்ஷுக்கு மன்மோகன் சிங் விருந்து அளித்தபோது கலந்து கொள்ள வாய்ப்பு பெற்றவர். இப்படிப் பன்னாட்டு முதலாளிகளுக்கு அடிமையாக இருக்கும் ஒரு ஜந்து தன்னை ஒரு போராளியாகக் காட்டிக் கொள்வதை என்னவென்று அழைப்பது?

ஜெசிகாவிற்கு நீதி கிடைக்கவில்லை என்று பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு பேசுவதிலும் ஒரு நடுத்தர வர்க்க அரசியல் இருக்கிறது. ஜெசிகா லால் ஒரு பெண், அதிலும் ஒரு விளம்பர மாடல். இந்தப் பெண் கொலை செய்யப்பட்ட சோகத்தை மாநகரத்து நடுத்தர வர்க்கத்தின் சோகமாக மாற்றுவதில் ஊடக முதலாளிகளுக்குப் பெரிய பலன் இருக்கிறது. ஜெசிகாவிற்குப் பதில் மதுக்கோப்பை கழுவும் ஒரு பையன் கொலை செய்யப்பட்டிருந்தால் அது இந்த அளவுக்குப் பேசப்பட்டிருக்காது.

இந்தப் பத்தாண்டுகளில் பம்பாய்க் கலவரம், குஜராத் கலவரம், மேலவளவுப் படுகொலை, ரன்பீர்சேனா அட்டூழியங்கள் என்று நீதி கிடைக்காத சம்பவங்கள் எத்தனை இருக்கின்றன? அதற்கெல்லாம் என்.டி.டி.வி இயக்கம் எடுக்கவில்லை. குடியரசுத் தலைவரைப் பார்க்கவில்லை. படத்திற்கு கோக் போல ஸ்பான்சர் செய்திருக்கும் அந்த டிவி., திரையில் வரும் காட்சிகளைப் போல நிஜத்தில் காட்டிக் கொள்வதற்கு ஜெசிகாவின் வழக்கு அதற்கு ஒரு வாய்ப்பு வழங்கியிருக்கிறது. கூடவே இரண்டு இலட்சம் எஸ்.எம்.எஸ். செய்திகள் அனுப்பிய அந்த நடுத்தர வர்க்கமும் தன்னை மாபெரும் சமூகப் போராளியாகக் கருதிக் கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இந்தக் கோழைகள் எவரும் குறைந்தபட்சம் மனுசர்மாவைத் தூக்கில் போடவேண்டும் என்று கூடக் கேட்கவில்லை.

ஜெசிகா லாலுக்கு நீதி வேண்டும் என்பது மட்டும்தான் அவர்களது கோரிக்கை. பொல்லாத நீதி! ஆக இந்தப் படம் ஏன் வெற்றி பெற்றது, பார்வையாளர்கள் எதில் ஒன்றினார்கள் என்பதை ஜெசிகாவின் வழக்கு என்ற உண்மை எடுப்பாக விளக்கி விடுவதால், நாம் தனியாக விளக்குவதற்கு ஒன்றுமில்லை.

• இளநம்பி

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு...

**இந்த இதழுடன் (மார்ச், ஏப்ரல் '06) முடியும் சந்தா எண்கள்:**

**127, 134, 148, 243, 247, 276, 372, 577, 615, 675, 686, 713, 742, 872, 1126, 1199, 1359.**

**அடுத்த இதழுடன் முடியும் சந்தா எண்கள்:**

**129, 155, 163, 289, 290, 300, 475, 655, 667, 669, 703, 717, 749, 898, 899, 900, 902, 904, 907, 913, 915, 917, 942, 943, 944, 948, 953, 954, 956, 958, 962, 963, 965, 966, 967, 968, 969, 970, 972, 974, 979, 980, 981, 987, 992, 993, 995, 996, 997, 1001, 1201.**

*குறிப்பு:* 25 தேதிக்கு முன்பே சந்தா செலுத்தி விடவும். M.O. அனுப்பும்போது தவறாமல் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். புதிய சந்தா செலுத்துவோர் 'புதிய சந்தா' என எழுதி தங்களது முழு முகவரியை பின்கோடு உள்ளிட்டுத் தெளிவாக அடிக்கட்டையில் குறிப்பிடவும். வெளிநாட்டு வாசகர்கள் மின்னஞ்சல் முகவரியைத் தெரிவிக்கவும்.



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை:

# 'அருள்மிகு' ஜாதிகாத்த மாரியம்மன்

"என்னடா பசங்கல்லாம் தெருப் பக்கம் விடுவிடுன்னு ஓடுறானுவ. சாமி கௌம்பிடுச்சா?"

"இல்லியே. மாரியம்மன் கோயிலுட்ட வேட்டு சத்தத்தையும் காணோம், பூசாரியும் கத்தக் காணோம்."

"பசங்க கூட்டமாகப் போறத பாத்தா சந்தேகமா இருக்கு, ஒருவேள கொறவன் கொறத்தி செட்டு போயிருக்குமோ!". தங்கையன் குழப்பத்துக்கு மருந்து போல வாயில் இன்னும் கொஞ்சம் புகையிலையை அமுக்கினான்.

"ஏன் சுப்பய்யா, சாமி கௌம்பிடுச்சா?"

"இன்னும் பூசாரியே கௌம்புல, நீ வேற. உச்சவ நாளு சும்மாவா! மணி ஆறு, ஏழு வரைக்கும் அர்ச்சனைய காமிச்சு காமிச்சு தச்சனைய முடிச்சு போட்டு இன்னக்கி எம்புளிச்சம்பழத்த பூசாரி அறுத்து போடுறதுக்குள்ள அவன் அவன் என்ன கதெ கட்டி நிக்கப் போறானுவளோ? இந்த வருசமாவது சண்ட வம்பு இல்லாம சாமி தெரு சுத்தி வரணும்னு நாலு ஊரு சனமும் வேண்டிக்கிட்டு கெடக்கு. தங்கையா கொஞ்சம் வெத்தல கொடேன்."

"ஓர்ருவா வெத்தலக்கி ஒம்போது பேரு கௌம்பி வாங்கய்யா. சாமியும் கௌம்புலங்கிற, பின்ன ஏன்ய்யா தெருப்பக்கம் கூட்டமாக ஓடுறானுவ."

"ஓ, அதக்கேக்குறியா, மார்மான் கோயிலுக்கு எவுத்தாப்ல மெத்தவூடு இருக்கு பாரு, அவுரு மவன், அமெரிக்காவுலருந்து வந்துருக்கார்யா. அவுரு, இந்தக் கையில வச்சுட்டு படம்புடிப்பாங்க பாரு, அத கண்ணுக்கிட்ட வச்சிட்டு ஊரையே படம் புடிக்கிறார்யா. நம்ம டீக்கட கலியனகூட டீ ஆத்துறப்ப புடிச்சார்யா. அப்புடியே சினிமாப் படம்போல தெரிதுங்கறேன். அர ட்ராயர போட்டுக்கிட்டு வயப்பக்கம் படம் புடிக்க போறாரு போல. இந்தப் பயலுவளும் சாமி தூக்குறத வுட்டுட்டு அந்தாளு பின்னால சாமி வந்தமாரி ஓடுறானுவங்கிறேன்!"

"ஊதாங்கொழ மாதிரி இத்துணூண்டு இருக்குது. அது என்னமாப் புடிக்குது. போயி ஆட்டக் கட்டிப் போட்டு வர்றேன்." சுப்பய்யனின் வெறும் ஒடம்பில் கொசு வெத்தலப் பாக்கு போடுவது போல குதப்ப ஆரம்பிக்க மாரடித்துக் கொண்டதுபோல 'நச்'சென்று கொசுவை அடிக்க நெஞ்சில் அடித்துக் கொண்ட சுப்பய்யன் "ஆத்தாளகட்ட! நடவுக்கு ஆள் சொன்ன மாரி சாயங்காலம் ஆனா கரெக்டா வருதுங்கறேன். எல்லாம் எரும மாட்டு கொசுவா இருக்குது." முனகிக் கொண்டே நகர்ந்து போனான்.

"யோவ் இந்தப் பசங்கல்லாம் எங்கய்யா போனானுவ, இரண்டு கழி வெட்டணும், தீக்குழிபக்கம் கயிறு கட்டணும், ஒரு வேலயும் ஆவுல, சாமி தூக்குற நேரத்துல இவனுவ பாட்டும் படம்புடிக்கிறவரு பின்னாடி ஓடிட்டானுவ. டேய் மாரியப்பா போய் சாடாப் பயலுவளையும் சாமி பெறப்பாடு ஆவனும்னு சொல்லி இழுத்துட்டு வாடா. யோவ் பூசாரி! எல்லா பூவயும் சாத்தி அலங்காரம் பண்ணு. இந்த வருசம் மாரியம்மா அலங்காரத்துல ஊரே தகதகங்கணும்." நாட்டாமைக்காரர் தேங்காப்பூத்துண்டை உதறி தோளில் போட்டபடி சொல்லிவிட்டு டீக்கடைப் பக்கம் போனார்.

**"பாத்துய்யா. பூசாரி பழக்க வழக்கம் சரியல்ல, சேரித்தெரு ஆளுங்க எல்லாத்தையும் கொண்டாந்து கோயில் திண்ணையில ஏத்துறாருன்னு ஒரே கம்ப்ளயின்டா இருக்கு. உனக்கு ஏன்யா இந்த வேல? பழக்க வழக்கத்த கோயிலுக்கு வெளியில வச்சுக்க, நாங்க ஒன்னும் தடுக்கல."**

அமெரிக்க கேமராவுக்குப் பின்னே இளவட்டமெல்லாம் ஓடிப் போய்விட்டதால், அருள்மிகு கீழ்மாத்தூர் மாரியம்மன், பவர் கம்மியானது போல் எரியும் குண்டு பல்புக்குக் கீழே, தூக்குபவர்களை எதிர்பார்த்து மங்கலாகக் குந்தியிருந்தது.

•••

சுந்தரமூர்த்தி வீட்டின் முன்பு சுப்பய்யாவும், தங்கையனும் குடும்பத்துடன் நின்று கொண்டிருந்தனர். "தே புள்ளய கொஞ்சிக்கிட்டு... அவுங்க வர்ராங்க, கிசுகிசுன்னு பேசாம இரு." வேகமாக மனைவியைக் கடிந்து கொண்ட சுப்பய்யன் சுந்தரமூர்த்தி வாசல் பக்கம் வந்தவுடன் "ஒண்ணுமில்லய்யா... தம்பி அமெரிக்காவுலேந்து வந்துருக்குன்னு சொன்னாங்க. பாத்துட்டுப் போவலாம்னு..." வார்த்தையை முடிக்காமல் ஓசையின்றிப் புன்னகைத்தான்.

பதிலுக்கு சுந்தரமூர்த்தியின் வாயிலிருந்து முதலில் எச்சில் வந்தது. பிறகுதான் வார்த்தை. வெற்றிலை பாக்கை அலட்சியமாகத் துப்பிவிட்டு "தம்பி அசந்து தூங்குறான், இப்ப முடியாது அப்புறம் வாங்களேன். இதுக்கா படை தெரண்டு வந்தீங்க, என்ன தங்கையா உன் ஆடு பூரா நம்ம வயப்பக்கம் வருதுன்னு கேள்விப்பட்டேன்."

"அட, அப்புடியெல்லாம் இல்லீங்க. மத்தியான சோறுகூட இல்லாம இவ ஆட்டோட கெடந்து காயிறா."

"ஆமாங்க. அதெல்லாம் உட்ருவமா? வேண்டாத சனங்க சும்மா கௌப்பிவுடும். வரப்புல போறப்ப வர்றப்பவெல்லாம் அய்யா வூட்டு வயல கண்ணுபோல பாத்துக்கறோம். நல்லா சொல்லுது சனங்க!"

"சரி, சரி,. பொண்டுவ புள்ளைங்க ஏன் நின்னுகிட்டு கெடக்குறீங்க, போய் சோலிய பாருங்க." சுந்தரமூர்த்தியின் முகபாவம் அறிந்து கண்ணை இடுக்கிக் காட்டி பெண்களைப் போகச் செய்தனர்.

"அப்புறம் என்ன சுப்பய்யா ஊர்ல சேதி? நம்ம குழந்தசாமி கருப்பூரு பக்கம் ஏக்கரா கணக்குல நெலம் ஒப்புக் கொள்ளப் போறதா கேள்விப்பட்டேன். ஏதுய்யா அவனுக்கு இவ்ளோ வசதி, அவன் புள்ளகூட எங்கயோ திருப்பூர்லயோ, கோயமுத்தூர்லயோ வேல செய்றதால கேள்விப்பட்டேன்."

www.padippakam.com

''அத ஏன் கேக்குறீங்க. சும்மா அங்க இங்க சுத்தி வேலை பாத்துகிட்டு கெடந்தான் அவன் புள்ள குமாரு. ஒரு வருசமாச்சு, திடீர்னு ஏம்புள்ள அமரிக்காவுல வேலைல இருக்குன்னு சொல்றான். மாசமாசம் பந்தனூரு பேங்குக்கு அது என்னவோ செக்கோ சக்கோ வருதுங்குறாங்க. அமெரிக்காவுல வேலைன்னா சும்மாவா?''

''என்னது அமெரிக்காவுல வேலைல இருக்கானா?'' கேட்ட மாத்திரத்தில் மூட்டை நெல்லை தலையில் கொட்டியது போல திணறிப் போனார் சுந்தரமூர்த்தி. பதட்டத்தைத் தணித்துக் கொள்ள கையிலிருந்த சீவல் பொட்டலத்தை வெடுக்கெனக் கிழித்து பிடி சீவலை வாயில் போட்டுக் குதப்பிக் கொண்டு உள்ளங்கையை தொடையில் தட்டி கால்களை வேகமாக ஆட்டினார்.

''ஆமாங்க! அமெரிக்காவுல பெரிய வேலைல இருப்பான் போலிருக்கு. தெருவுலயே பெரிய மெத்த ஊடா கட்னும்னு கூட புள்ள சொன்னதா கொழந்தசாமி சொல்லிட்ருந்தான். ஆயிக்காரிக்கு பணமனுப்பி நகை செஞ்சு போட்ருக்கான். தரணி பக்கம் புதுசா தென்னந்தோப்பு வாங்கிப் போட்ருக்கான். நல்ல வேலைல இருப்பான் போலருக்குங்க. நம்ம தம்பியப் போல.''

உஷ்ணம் தலைக்கேறியது போல சுந்தரமூர்த்தி வெடுக்கென எழுந்து வேகமாகப் போய் எச்சிலைத் துப்ப, சுப்பயனுக்கும் தங்கையனுக்கும் ஆட்டம் கண்டு போனது.


''என்னடா தம்பியப் போல? தம்பி படிப்பென்ன, வேலை என்னான்னு தெரியுமா ஒனக்கு?'' தங்கையனுக்கு வெடவெடத்து குதிகால் வேர்க்க ஆரம்பித்து விட்டது.

''என்னமோ கம்ப்யூட்டரோ, ஏதோன்னு தம்பி சொல்ல கேட்ருக்கேன். நம்ப மண்டக்கி ஏறுமா அது! தம்பி என்னா படிப்பு, டவுன்ல போயி படிச்சது, பெங்களூர்ல படிச்சது, அவன் குமாரு சும்மா சுத்திக்கிட்டு கெடந்தானுங்க. யாரையாவது காக்கா புடிச்சு அமெரிக்கா போயிருப்பான்போல'' சுந்தரமூர்த்தியின் வேகத்திற்கு ஈடு கொடுக்கும்படி தங்கையன் தயங்கித் தயங்கி சமாளித்தான்.

''பெரிய அமெரிக்காவாம், சம்பாரிக்கிறானாம், ஒனக்கு ஊரத் தெரியுமா, உலகத்தத் தெரியுமா? அமெரிக்காவுல கக்கூசு கழுவுறவன் கூடத்தான் இருபத்தஞ்சாயிரம் ரூபா சம்பாதிப்பான். எங்கயாவது வீட்டு வேல, அது இதுன்னு புடிச்சு புகுந்துருப்பான்.''

மேற்கொண்டு வாயைத் திறக்காமல் தலையை அழுத்தமாக ஆட்டிக் கொண்டான் சுப்பய்யன்.

ஒரு மாதிரி நிதானத்துக்கு வந்த சுந்தரமூர்த்தி கழனி குடித்த மாடுபோல நாக்கை நீட்டி மடித்து உதடுமுழுக்க தடவிக் கொண்டே ''இருக்கட்டும், இருக்கட்டும், மனுசன்னா அப்படித்தான், கெடந்தமாதிரியே இருக்கக் கூடாது. படிப்படியா மேல வரணும், உங்கள



www.padippakam.com

மாதிரியா பத்து ரூவா அதிகங் கெடச்சா ரூட்ட மாத்துறதும், ஆசைப்பட்டு ஆட்ட மாட்ட வாங்குறதும் அப்புறம் வழி இல்லேன்னா, அய்யா அஞ்சு குடு, பத்த குடுன்னு வந்து நிக்கறதும்.''

சுந்தரமூர்த்தி வேறு விதமாகப் பேச சுப்பய்யன் குழம்பிப் போய் தங்கய்ய னைப் பார்த்தான். சற்று தளர்ந்து இருந்த தங்கய்யன் மீண்டும் குழம்பிப் போனவனாய் கைகட்டுவதுபோல விலாவைச் சொறிந்து கொண்டு தலையைச் சுற்றியதுபோல பாவணை செய்து பேசுவதை நிறுத்திக் கொண் டான். சுப்பய்யனும் வார்த்தை கொடுக் காமல் எச்சரிக்கையாய் தலையாட்டுவ தில் சேர்ந்து கொண்டான்.

''சரி, குழந்தசாமியப் பாத்தா என்ன வந்து பாக்க சொல்லுங்க, என்ன? மறந் துராத. இந்தாப் பத்துரூவா, ஆளுக்கு அஞ்சி எடுத்துக்குங்க.'' இடுப்பில் கட் டியிருந்த வாரிலிருந்து சலவை நோட் டாய் பத்து ரூபாய்த் தாளை நீட்ட, இரண்டு கையையும் குவித்துப் பணி வாய் வாங்கி இரண்டு கண்ணிலும் ஒற் றிக் கொண்டான் சுப்பய்யா!

''ஒண்ணும் அவசரமில்ல, வேலை யெல்லாம் முடிச்சுட்டு குழந்தசாமிய வரச்சொல்லு. நிலம் நீச்சுங்கறான், வீடுங்கறான், பாவம் பையன் அனுப் புற காச கண்ட மண்லயும் போட்டு பாழாக்கிடப் போறான். வரச்சொல்லு, பாத்து செஞ்சுடுறேன்'' சரிங்க என்று நடையை கட்டினர்.

''பெரிய மனுஷரு, பெரிய மனுஷ ருதான். இந்த கொழந்தசாமி நல்லது கெட்டதுக்கு அய்யாவ கலந்துகிட்டா என்ன? பணத்தப் பாத்தோன்னே ஏழூரு திமிருங்கரேன்!'' முனகிக் கொண்டே போனார்கள்.

•••

**தி**ண்ணையிலிருந்து மாரியம்மன் கோயிலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார் சுந்தரமூர்த்தி. கோயில் அடிபம்பில் வாளியை வைத்து தண்ணீர் அடித்துக் கொண்டி ருந்த பூசாரி எதேச்சையாய் சுந்தரமூர்த் தியைப் பார்த்துவிட ''வர்றேன், வர்றேன், சேதி இருக்கு'' ஜாடை காண் பித்துவிட்டு நெருங்கி வந்தார்.

''திருவிழாவுக்கு முன்னால தெனம் தெனம் வந்த, இப்ப மடி கனத்துப் போச்சுல்ல. என்ன ஏய்யா தேடப் போற?''

''அய்யய்ய, அட என்னங்க நீங்க, மாரியம்மனுக்கு காப்ப பிரிக்கறதுக் குள்ள கணக்கு வழக்கு, மண்டகப்ப டின்னு ஆளுக்காளு என்னப் பிரிச்சி எடுத்துக்குடுவாங்க போலிருக்கு. அந்தாண்ட இந்தாண்ட நகர முடியல.''

''பாத்துய்யா. பூசாரி பழக்க வழக் கம் சரியல்ல, சேரித்தெரு ஆளுங்க எல் லாத்தையும் கொண்டாந்து கோயில் திண்ணையில ஏத்துறாருன்னு ஒரே கம்ப்ளயின்டா இருக்கு. நான்தான் பாத் துக்கலாம்யான்னு சொல்லி நாட்டாமை யையும் ஊர்க்காரங்களையும் அனுப்பி வச்சேன். உனக்கு ஏன்யா இந்த வேல? பழக்க வழக்கத்த கோயிலுக்கு வெளியில வச்சுக்க. நாங்க ஒன்னும் தடுக்கல.''

''அப்புடியெல்லாம் ஒன்னுமில் லீங்க. சொன்னா கேக்குற மாரி ஊரு இல்ல. ஏற்கெனவே நீங்க ஐடியா பண்ணி, அடிபம்ப கோயிலுக்கு வெளி யில் வச்சமாதிரி திண்ணைக்கும் ஒரு கேட்டை போட்டு வுட்ருங்க. பேருக்கு பேராவும் இருக்கும், ஊருக்கு ஊரா வும் இருக்கும்.''

> ***''அதுக்காக அவன் பின்னாடி போக முடியுங்களா, இப்ப நீங்க இருக்கிங்கன்னா உங்க அப்பா காலத்துலேர்ந்து நிலம், கோயில்னு பரிபாலனம் பண்றீங்க. தம்பீங்கல்லாம் அமெரிக்கா போய் சம்பாரிச்சாலும் ஊரு வரமுறைய காவந்து பண்ணி கிட்டு இங்கே இருக்கிறீங்க. திடீர்னு அவன் புள்ள அமெரிக்கா போய் சம்பாரிச்சா எல்லாம் ஒண்ணாயிடுமா?''***

''சரி, அது கெடக்கட்டும், அந்த கொழந்தசாமி மவன்....''

சுந்தரமூர்த்தி முடிப்பதற்குள் ளேயே பூசாரி முந்திக் கொண்டு ''ஆமாங்க, ஆமாங்க, அத ஒங்ககிட்ட சொல்ல மறந்துட்டேன். அவன் புள்ள அமெரிக்காவுல ஒரு ஆளாயி அவன் வூட்ல கலர் டிவி என்ன? வயல்ல போரு கொட்டா என்ன? என்ன மந்தி ரம் பண்ணானோ, மாயம் பண் ணானோ, அந்த மாரியாத்தாளுக்குத் தான் வெளிச்சம். ஏதோ புதுசா வீடு கட்ட தளவரிச போடணும். அதுக்கு மாரியம்மன் உத்தரவு கேக்கணும்னு சொல்லிக்கிட்டிருந்தான். ஆள காணோம். யாரு மதிக்கிறா அவன் மதிக்க.''

''ஏன், நீந்தான் உத்தரவு கொடேன். அவன் மெத்தவீடு கட்டுவான், அப்பு றம் அங்க ஒரு கோயில் கட்டுவான். காசு கெடய்க்கும்னு நீயும் தான் போயேன்'' எரிச்சலைக் கொட்டித் தீர்த் தார் சுந்தரமூர்த்தி.

''அதுக்காக அவன் பின்னாடி போக முடியுங்களா, இப்ப நீங்க இருக் கீங்கன்னா உங்க அப்பா காலத்து லேர்ந்து நிலம், கோயில்னு பரிபால னம் பண்றீங்க. தம்பீங்கல்லாம் அமெ ரிக்கா போய் சம்பாரிச்சாலும் ஊரு வர முறைய காவந்து பண்ணிகிட்டு இங்கே இருக்கிறீங்க. திடீர்னு அவன் புள்ள அமெரிக்கா போய் சம்பாரிச்சா எல் லாம் ஒண்ணாயிடுமா? தெருவுக்குள் ளேயே இவன் யாருக்கும் அஞ்சு காசு இழக்கிறதில்லயாம். அக்கம்பக்கம் லாம் ஒரே கிரீசலா இருக்குன்னு கேள் விப்பட்டேன்.''

''கேள்விப்பட்டது இருக்கட் டும்யா, புள்ள பேச்சக்கேட்டு ஊர் லேயே ஒரு பங்களா கட்டிக்கிட்டு தனியா பரிபாலனம் பண்ண ஆரம்பிச் சான்னு வச்சுக்க. ஊரே எங்களுதும்பா னுக. அப்பறம் மாரியம்மன தூக்கி அவ னுக கையில கொடுத்துட்டுப் நீயும் நானும் கொறவன் கொறத்திக்குப் பின் னாடி நிக்கவேண்டியதுதான். எனக்கு ஒண்ணுமில்ல. இப்பயே எம்புள் ளைங்க 'எதுக்கு கிராமத்துல கெடந்து கிட்டு, ஒன்னு அமெரிக்கா வாங்க, இல்ல, மெட்ராஸ்ல மகாபலிபுரம் ரோட்ல பங்களா கட்டிக்கிட்டு இருங்க'ங்குது. நான்தான் பொறந்த ஊரவுட்டு போவக் கூடாதுன்னு இங் கேயே கெடக்குறேன்.''

''ஆ....மா நாளைக்கே நடக்கப் போவுது. நீங்க ஏன் கெடந்து மனசப் போட்டு கசக்கிக்கிட்டு. இவ்வளவு காலம் மணியாட்றேன். எனக்கு ராகம் புரியாது? எத எங்க வைக்கணும்னு எல் லாம் மாரியாத்தாளுக்குத் தெரியும். நாளைக்கு கோயிலுக்கு வருவான். பாத்துக்கலாம்.''

''நான் கூட கொழந்தசாமிய பாக்க வரச்சொல்லயிருந்தேன். அங்க வந் தான்னா கோயில்லியே ஆள நிப்பாட் டிக்கிட்டு எனக்கு ஆள் வுடு. நேர்ல பாத்துக்குவோம்.''

•••

**''வா** கொழந்தசாமி, என்ன தட்டு தாம்பலம்னு பலமா இருக்கு.'' பூசாரி



படிப்பகம்

www.padippakam.com

பூச்சரத்தை நிலைப்படியில் தேய்த்து அறுத்துக் கொண்டே விசாரித்தார். குழந்தைசாமி மனைவி சின்னப் பொண்ணுடனும், கொழுந்தியாளுடனும் கோயில் வாசலில் நின்றிருந்தார். ''அதான் சொன்னேனுங்களே பூசாரி அய்யா, பையன் வர்ற சித்திரையிலேயே வீட்டக் கட்டுங்க'ன்னு மாயாவரத்துல உள்ள பெரண்டு மூலமா பிளான வரைஞ்சி அனுப்பிட்டான். மார்மாங்கோயில்ல உத்தரவு வாங்கிட்டு மளமளன்னு வேலைய ஆரம்பிக்கலாம்னு பாக்குறேன். ஊர்லயும் விவரமான ஆளுங்ககிட்ட யோசனை கேட்டு செய்யினுட்டான். அதான் பொட்லம் போட்டுப் பார்த்து உத்தரவு வாங்கலாம்னு வந்தேன்.''

''எல்லாம் நம்பக் கையியலா இருக்கு. அந்தப் பாவாடைக்காரி கையில இருக்கு. நேத்திக்கிக் கூட பாரு, எம்புள்ளைக்கி சரியான காய்ச்சல். மாரியம்மா கையில பத்துப் பைசா இல்லயே, ஏற்கனவே கடன வாங்கி வீட்டுக்கு ஓலை வுட்டாச்சி. யாருக்கிட்டப் போயி நிக்கறதுன்னு யோசனை பண்ணிகிட்டு நிக்கிறேன். திடீர்னு நம்ம செருகுடி ராமமூர்த்தி வந்து பண்ணை ஊட்டுக்கு ஒரு அர்ச்சன பண்ணிட்டு வச்சுக்க இருபது ரூவான்னு குடுத்துட்டுப் போறாரு. யாரு நெனச்சா, பணம் கெடைக்கும்னு. தோ கெவுலி கூட சொல்லுது. வுட்டேன், வுட்டேன். சரி... சரி... அர்ச்சனையா, தட்டக் குடு, மவம் பேருக்குத்தானே'' கேட்டுக் கொண்டே பூசாரி உள்ளே போனார்.

விட்டத்திலிருந்த பல்லி தன் மேல் ஏதோ பழி விழுந்ததுபோல நெளிந்து வளைந்து பயந்து ஓடியது. மாரியம்மனுக்கு அர்ச்சனை செய்துவிட்டு இரண்டு பொட்டலத்தை குலுக்கிப் போட்ட பூசாரி திண்ணையில் நின்று கொண்டிருந்த சிறுமியைப் பார்த்து, ''தே மருதாயி வா, சாமிய வேண்டிக் கிட்டு ஒரு பொட்டலத்த எடுத்துக் குடு'' என்றார்.

திடீரென அழைத்ததால் லேசான பயத்துடன் போன மருதாயி மாறி மாறி பொட்டலத்தைப் பார்த்து நிற்க ''கஞ்சி வாங்கறதுன்னா குறுக்கப் பூந்து பத்து வாளிய நீட்டு, பொட்லத்த எடுன்னா முழிச்சுக்கிட்டு நிக்குற.'' பூசாரி போட்ட சத்தத்தில் வெடுக்கென்று ஒரு பொட்டலத்தை எடுத்தாள் மருதாயி. குழந்தைசாமியும் அவன் மனைவியும் கொக்கு போல கழுத்தைத் தூக்கி ஆவலுடன் எட்டிப் பார்த்தனர். பொட்டலத்தைப் பிரித்துக் கொண்டே, பூசாரி, ''டேய் சுப்ரமணி, போய் சொன்னதை செய்'' என்று தெருவில் நின்ற மகனுக்கு குரல் கொடுத்தார். பொட்டலத்தைப் பார்த்தவர் ஒரு நிமிடம் கண்களை மூடி புருவத்தைப் பிசைந்தபடி ''கொழந்தசாமி, அம்மா இன்னும் நாள் பாக்குறா போல இருக்கு. பாரு துன்னுத்துப் பொட்டலம். அது அதுக்கு நேரம் வரணும்ல.''

கூட இருந்த குழந்தசாமியின் மனைவி ''ஆமாம் ஆமாம் இதெல்லாம் அவசரப்படுற காரியமில்ல. நம்ம நினைக்கிறோம். அவ மனசில என்ன நெனச்சிருக்காளோ. நாங்க கிழிக்கிற கோட்ட பையன் தாண்டமாட்டான். பொறுத்து செய்வோம்'' பயபக்தியோடு கன்னத்தில் போட்டுக் கொண்டு பேசினாள்.

> **ஏதோ நீ இங்க பொறந்த, வாழ்ந்த, இருந்த, ஒன் தலைமுறை போயிடுச்சு. உன் புள்ள படிச்சு பெரியாளாயி அமெரிக்காவும் போயிட்டான். அவன் தலைமுறைக்கு இது இன்னமே ஒத்து வருமா? ஏன் இங்கேயே பூந்துகிட்டு. காலனிக்குள்ளே கெடந்துகிட்டு. பேசாமா குத்தாலம் ரோட்டுப் பக்கமா எடத்தை வாங்கிட்டு பங்களா மாறி விட்ட கட்டிட்டு ஒரு மதிப்பா மரியாதையா முன்னேறுவியா.**

''தே, சுந்தரமூர்த்தி அய்யா வர்றாரு பாரு'' என்று மனைவியிடம் கிசுகிசுத்தார் குழந்தைசாமி. ''அய்யா நல்லாயிருக்கீங்களா. நான் பாத்தே நாளாகுது, பையன் விசயமா பொட்டலம் போட்டு பாக்க வந்தோம். கடகடவென விசாரணைக் கைதிபோல கொட்டினார்.

''ஆங், மாரியம்மனுக்கு மிஞ்சிதான் மத்ததெல்லாம். பையனுக்கு என்ன விசயம்?''

''அதான் குமாரு அமெரிக்காவுல இருக்கானுங்களே. அவன் வர்ற சித்திரையிலேயே மெத்த ஊடு ஒன்னு கட்டுங்குறான். தெருவுலேயே ஒரு மனைக்கட்டு கெடக்கு. அது விசயமாத்தான் சாமிகிட்ட உத்தரவு வாங்கலாம்னு வந்தேன். பாத்தா இப்ப நமக்கு நேரம் பொருந்தி வல்லேன்னு தெரியுது. சுப்பய்யன் கூட அய்யா வரச் சொன்னீங்கன்னு சொன்னான். மரத்துரையில மவ வூட்டுக்கு போயிட்டேன். வரமுடியல. அய்யாகிட்டயும் இது விசயமா யோசனை கேக்கலாம்னு தான் இருந்தேன்.''

''கொழந்தசாமி உங்க ஆளுங்களுக்கு தெரியாத யோசனையில்ல. உம் புள்ள அமெரிக்காவுல இருக்கற விசயமே எனக்குத் தெரியாது. தெரிஞ்சா அமெரிக்காவுல இருக்குற நம்ம தம்பிய வுட்டே ஏதாவது ஹெல்ப் பண்ணியிருப்பேன், அது கெடக்கட்டும். எங்கயாவது நல்லாயிருந்தா சரி.'' வெடுக்கென முகத்தை திரும்பி மாரியம்மனிடம் பலமாக வேண்ட ஆரம்பித்தார்.

''அய்யா அப்படி நெனக்காதீங்க, தம்பி கூட கடுதாசி எழுதுனா ஒங்கள எல்லாம் விசாரிக்கும். ஒரு வருசமா - மவ கல்யாணம், இவருக்கு ஆபரேசன்னு ஊருலேயே இருக்குறதுல்ல, அதாங்க.'' குழந்தைசாமியின் மனைவி பணிவுடன் ஒதுங்கி நின்று பேசினாள். ஆமோதிப்பது போல குழந்தைசாமியும் தலையாட்டியபடி ''ஐயா, எங்காளுக கெடக்கட்டும், நாங்க நல்லாருக்கறதப் பாத்து பக்கத்துல பொருமல் ஜாஸ்தி. பையனா, தெருவுலேயே மெத்தவூடு கட்லாம்ங்குறான். சாமியா பொறுத்திருங்குது. நீங்களே சொல்லுங்க. ஒங்களுக்குத் தெரியாத ஓசனையில்ல, என் நேரம், நல்லவேள அய்யா கோவில் பக்கம் வந்தீங்க.''

இதுதான் நேரமென்று காத்திருந்த சுந்தரமூர்த்தி, ''குழந்தசாமி நீ சொல்றதும் சரிதான். உன் தெருக்கார ஆளுங்க நீ ஓல மாத்துனதுக்கே மேலகீழ பாத்தாங்க. மெத்த வீடு கட்டுனேன்னு வச்சுக்க, அவனுங்க மூஞ்சி செத்தவீடு மாதிரி ஆயிடும். அவுங்கன்னு இல்லய்யா. ஒண்ணு தெரிஞ்சுக்க. நான் நல்லாருக்கறத பாத்து என் சொந்தக்காரனுவங்க வயிறு எரியறாங்க. ஒனக்கு இருக்காதா? இன்னொன்னு சொல்றேன். ஏதோ நீ இங்க பொறந்த, வாழ்ந்த, இருந்த, ஒன் தலைமுறை போயிடுச்சு. உன் புள்ள படிச்சு பெரியாளாயி அமெரிக்காவும் போயிட்டான். அவன் தலைமுறைக்கு இது இன்னமே ஒத்து வருமா? ஏன் இங்கேயே பூந்துகிட்டு. காலனிக்குள்ளே கெடந்துகிட்டு. பேசாமா குத்தாலம் ரோட்டுப் பக்கமா எடத்தை வாங்கிட்டு பங்களா மாறி வீட்ட கட்டிட்டு ஒரு மதிப்பா மரியாதையா முன்னேறுவியா, படிச்ச புள்ளைக்கி இது தெரியாதா? நீயாவது எடுத்துச் சொல்லி டவுனு பக்கம் போய் ஜாலியா இருப்பீங்களா, ஏன்ய்யா, இந்த பொச்சரிப்புல பூந்துக்கிட்டு?''

www.padippakam.com

பூசாரியும் சேர்ந்துகொண்டான். "ஆமாம் கொழந்தசாமி குத்தாலம் ரோட்டு மேல மளமளன்னு பிளாட்டு போயிட்டுருக்கு. அய்யாவுக்கு தெரிஞ் சவுருதான் அவரு. சொன்னேன்னு வச் சுக்க அய்யாவே ஒடனே முடிச்சுக் குடுப்பாரு."

வேகமாக சுந்தரமூர்த்தி "யோவ், யோவ் நீ பாட்டுக்குய சொல்லிட்டுப் போற. கொழந்தசாமிக்கு மாயரத்து லேயே ஆளுருக்கு. நம்ப என்ன?" என்று வெளுத்தாற்போல பேச, "தே, நீ பாட்டுக்கும் சும்மா நிக்குற? அது மாய ரத்துல தம்பி பெரண்டுங்க. நீங்க பாத்து நல்ல எடமா முடிச்சுக் குடுங்க. நல்ல ஓசனையா படுது. தம்பிக்கும் வந்து போனா வசதியா இருக்கும்" குழந்தை சாமி மனைவி வேண்டினாள்.

கோயிலுக்குள் பூசாரியின் மகன் மணியடிக்க, "பாரு மணி கூட அடிக் குது. நல்ல சகுனம், தேடிப்போன தெய் வம் கூடி வந்தமாரி! ஒந்நேரம் அய்யா வும் வந்தாரு. மாரியம்மா, எல்லாம் நல்லா நடக்கணும்" கண்ணை மூடி வேகமாகப் பேசிய பூசாரி குழந்தசாமி கையில் துன்னூறைப் போட்டான். சுந்த ரமூர்த்தியை வேண்டிக் கொள்வது போல பார்த்த குழந்தசாமி "அய்யா, நாளைக்கி உங்கள வந்து பாக்கட் டுங்களா? செக்கு புக்கு வீட்லதான் இருக்கு. நைட்டு பையனுக்கு ஒரு போன போட்டுட்டு காலைல வேலைய முடிச்சுடுலாம்."

கேட்டுக் கொண்டிருந்த பூசாரி திடீ ரென சாமி வந்ததுபோல "நைட்டு என்னா நைட்டு, போயி ஒடனே போன போட்டு கேப்பியா, காலைல அவுங்க ளுக்கு பல ஜோலி இருக்கும். அவுங் களே வர்ரேங்கறப்ப நீ வேற லேட் பண் ணிகிட்டு" என்று வேகப்படுத்தினான்.

"சரிதாங்க பேரன் இந்நேரம் காலேஜ் விட்டு வந்திருப்பான். தம் பிக்கி போன போட்டு விசயத்த சொல் லிட்டு ஒடனே வர்றேங்க. தே அய்யா கிட்ட சொல்லிட்டு சீக்கிரம் கௌம்பு." மூவரும் வேகமாக விடைபெற்றுக் கொண்டனர். "நேரம் முட்டுனா சாமி சந்துலயும் வரும்பாங்க. அய்யா வந் தாரு பாரு" குழந்தசாமி பழக்கப்பட்ட வழியில் பேசிக் கொண்டே விரைந் தார்.

"கொழந்தசாமி, பையனுக்கு புரி யும்படி வெவரமா எடுத்து சொல்லு. பூசாரி மந்திரச் சொல் மாதிரி திரும்பத் திரும்பக் கத்தினான்.

•••

இரண்டு மணி நேரம் கடந்தது. திண்ணையில் அமர்ந்திருந்த சுந்தர மூர்த்திக்குத் தவிப்புக் கூடிக் கொண்டே போனது. "அவன் மவன் இருக்கானே, அப்பா பேச்சை மீறமாட்டான். அதவுட கொழந்தசாமி மாரியம்மன் உத்தரவ மீற மாட்டான். நல்லதுக்குத்தானே சொல்றோம். வீணாப்போவவா சொல் றோம்" பூசாரி மாறி மாறிப் புலம்பிக் கொண்டிருந்தான்.

"தோ கொழந்தசாமி, பூசாரி வெடுக் கென எழுந்திருக்க சுந்தரமூர்த்தி பதட் டத்தை மறைத்துக் கொண்டு ஒரு வரட் டுப் புன்னகையுடன் வா குழந்தசாமி, என்ன முடிவு பண்ணுன?"

"முடிவு என்னங்க முடிவு, நீங்க சொல்றப்ப. பணத்த என்ன கீழ கொட் டவா சொல்றீங்க. எடம் மதிப்பும் கூடுது. புள்ளையும் நாளைக்கி டவுனு பக்கம் இருந்த மாரி இருக்கும். என் னடா யோசிக்கிறேன்னு ஒரு போடு போட்டேன் பாருங்க. சரி ஒங்க யோச னைப்படி செய்ங்கப்பான்ட்டான். அப்ப நாளைக்கி போயி முடிச்சுட லாம்ங்க. சரிங்களா."

"என்னா? அண்டையா, அசலா உனக்காக வர்றேன், காலைல சீக்கிரமா வந்துரு. ஊரக் கூட்டாத. நீ மட்டும் வா" என்று மெனக்கெட்டு வருவதுபோல பாவனை செய்தார் சுந்தரமூர்த்தி.

"மாடமேய வுட்ருந்தேன். அவுத்து கொட்டாயில கட்டணும். நீங்க சொன்ன மாதிரி காதும் காதும் வச்சமா திரி முடிச்சுரலாம். பூசாரி அய்யா, அப்ப வரட்டுங்களா, ரொம்ப மெனக் கெட்டீங்க. சந்தோசங்க" கையெடுத்து நன்றியுடன் கும்பிட்டுவிட்டு குழந்த சாமி நகர்ந்தார்.


சுந்தரமூர்த்தியை ஒருவிதப் புன்ன கையுடன் பார்த்த பூசாரி, "அப்பவே சொன்னன்ல. அவன் யோசிக்கலன்னா லும் அவன் மண்டைல பூந்து நம்ம சொல்படி யோசிக்கணும்னு வேண்டிக் கிட்டு ஆத்தாவுக்கு மண்ட வாங்கி வச் சேன்ல. நடக்காம போவுமா."

"மாரியம்மனுக்கே நீ காப்பு போடற ஆளாச்சே!"

"மண்டையா, எப்படி இதெல்லாம் சத்தம் போடாம பண்ற?" சுந்தரமூர்த்தி கேட்க வெடுக்கென் பூசாரி "நானா?" என்று நமட்டுச் சிரிப்பு சிரிக்க வெடித் துக் கிளம்பிய சுந்தரமூர்த்தியின் சிரிப் பில் பக்கத்தில் மேய்ந்து கொண்டிருந்த கோழி தனது குஞ்சுகளைக் காப்பாற்றி யபடி ஓடியது.

• துரை. சண்முகம்


இப்போது விற்பனையில்...




**சுந்தர ராமசாமி:**
**இலக்கிய மேட்டிமைத்தனத்தினுள் ஒளிந்திருக்கும் அற்பவாத இதயம்**

**நினைவின் குட்டை கனவு நதி**

இந்நூல் சுந்தர ராமசாமியைப் பற்றியது மட்டுமல்ல; "எவ்விதச் சித்தாந்தக் கலர் கண்ணாடியும் இன்றி அழகியல் பார்வை மற்றும் படைப்பு அனுபவத்தின் வழியாகத்தான் உண்மையைத் தரிசிக்க முடியும்" என்று கூறும் ஜெயமோகன் உள்ளிட்ட எல்லா சு.ரா.க்களுக்குமானது. இலக்கிய உன்னதமென்று இவர்களால் பீற்றிக் கொள்ளப்படுபவை அனைத்தும் உண்மையில் அற்ப வாதத்தின் வெவ்வேறு அவதாரங் களே என்று நிறுவுகிறது இந்நூல்.

• •

புதிய கலாச்சாரம் வெளியீடு
விலை: ரூ. 60/-

• •

**நூல் கிடைக்குமிடங்கள்:**

புதிய கலாச்சாரம்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை, அசோக்நகர்,
சென்னை - 83, ✆: 044-23718706

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை, சென்னை - 2.
✆: 044-28412367

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

அரசியல் கூர்மையும், அதையே கதையாக, கலையாக, திரைப்படமாக எடுத்தியம்பும் ஆற்றலும் வேண்டும். இது மிகக் கடினமான பணி. இன்றையச் சூழலில் ஒரு நபர் தமிழ்வழிக் கல்விப் பள்ளியை இலட்சிய நோக்கோடு ஆரம்பித்து, இறுதியில் வேறு வழியின்றி அந்தப் பள்ளியை இழுத்து மூடுகிறார் என்ற ஒரு வரிச் செய்தியில் கூட உலகமயம் குறித்து அற்புதமான ஒரு கதை இருக்கிறது.

அறிவு வளர்ச்சிக்கும் தாய்மொழி வழிக் கல்விக்கும் உள்ள உறவு, பெற்றோர்களிடம் நிலவும் பொருளற்ற ஆங்கில மோகம், இன்றைய நடைமுறைத் தமிழ் தமிங்கிலமாக மாறியிருக்கும் அவலம், இந்திய வெப்பநிலைக்குப் பொருத்தமற்ற டை, ஷூ நடை உடை பாவனைகள், உள்ளத்தால் ஆங்கிலேயராக மாற்றும் மெக்காலே கல்வி முறை, ரெயின் ரெயின் கோ அவே என்று மழையை விரட்டும் நமது வாழ்க்கை முறைக்கு அந்நியமான ஆங்கில மழலைப்பாடல்கள், தாமிரபரணி தெரியாது - தேம்ஸ் நதி தெரியும், பகத்சிங் தெரியாது - ஸ்பைடர் மேன் தெரியும், வ.உ.சி. தெரியாது, - ஜார்ஜ் புஷ் தெரியும், சிவகாசி குழந்தைத் தொழிலாளர்கள் உலகம் தெரியாது - வால்ட் டிஸ்னியின் டிஸ்னி லேண்ட் தெரியும், கோக், பெப்சி தெரியும் - நீரா காரமும் மோரும் கம்பங்கூழும் தெரியாது. தெருவில் மானாவாரியாக முளைத்திருக்கும் செடி கொடிகளின் ஐந்து பெயர்கள் கூடத் தெரியாது. கட் அவுட் முதல் நோட்டுப் புத்தகத்தின் அட்டை வரை துருத்தி நிற்கும் சினிமா நாயகர்களின் உருவம் மனப்பாடமாய் தெரியும், தன்னைச் சுற்றியிருக்கும் உண்மையான சமூக வாழ்வும், தமிழகமும், இந்தியாவும் தெரியாது - தொலைக்காட்சிகள் வடிவமைத்திருக்கும் பொய்யான இந்தியா மட்டும் தெரியும்...

இப்படி பள்ளிக்கு உள்ளேயும் வெளியேயும் சிறார்களின் உலகத்தைத் தீர்மானிக்கும் இன்றையப் பண்பாட்டுச் சூழல், பள்ளிகளின் அங்கீகாரத்தைத் தீர்மானிக்கும் அரசுக் கல்வித் துறையின் ஊழல், சுயநிதிக் கல்வி என்ற பெயரில் இலாபகரமாக வணிகம் செய்யும் அரசியல்வாதிகள் - முதலாளிகள், ரிகார்டு டான்சாக மாறிவரும் பள்ளி ஆண்டு விழாக்கள்... இப்படி இந்தக் கதையில் மட்டுமே சொல்வதற்கு எவ்வளவோ இருக்கிறது. இது போல ஒரு விவசாயியின் வாழ்க்கை குறித்தும், கிராமத்தை விட்டு நகரத்தை நோக்கி ஓடி உதிரிப்பாட்டாளியாகச் சிதைந்து போகும் அவன் வாழ்க்கை அவலம் குறித்தும் உலகமயமாக்கத்தின் பின்னணியில் நல்ல கதைகளைச் சொல்ல முடியும்.

ஏன், இயக்குநர் எடுத்திருக்கும் இந்த கேபிள் டிவி இளைஞனின் கதை கூட உலகமயமாக்கத்தின் அநீதியை பண்பாட்டு ரீதியில் ஆழமாக உணர வைப்பதற்குச் சாத்தியமுள்ள நல்ல கதைதான். படத்தின் முதல் பாதியில் அந்த இளைஞனின் வேலையினூடாக தொலைக்காட்சியில் மூழ்கியிருக்கும் மக்களின் வாழ்க்கையை நகைக்கத்தக்க விதத்தில் உணர்த்திவிட்டு மறுபாதியில் அந்த இளைஞன் உண்மையான மக்களுக்குத் தேவையான நிகழ்ச்சிகளை எடுக்க முயல்வதாகவும் யாருக்கும் பயனற்ற கோமாளியாக ஆரம்பிக்கும் அவன் வாழ்க்கை மெல்ல மெல்லப் பரிணமித்து சமூகப் பொறுப்புள்ள வாழ்க்கையாக மாறுவதாகவும் சித்தரிக்க முடியும்.

**நாம் மக்களிடம் உருவாக்க விரும்பும் கண்ணோட்டம் அல்லது சொல்ல விரும்பும் செய்தி, திரைக்கதை என்ற வாகனத்தில் ஏற்றப்படும் சுமையாக மாறிவிடக் கூடாது. அந்தக் கதையானது குறிப்பிட்ட பிரச்சினையில் மக்கள் கொண்டிருக்கும் புரிதலையும் கண்ணோட்டத்தையும் கவனமாகக் கணக்கில் கொள்ளவேண்டும்.**

கொடியங்குளம் கலவரம், குமரி மாவட்ட இந்துமதவெறியர்களின் கலவரம், தாமிரவருணி கோக் ஆக்கிரமிப்பு, அரசியல்வாதிகள் - சினிமா நட்சத்திரங்களுடன் உண்மையான பேட்டி என்று ஆரம்பிப்பதாக வைத்துக் கொள்வோம். இதிலிருந்து அரசியல், சமூகம், மீடியா, சாதி, மதம், ஸ்பான்சர் வழிமுறைகள் போன்றவற்றின் பின்புலத்தை அவன் புரிந்து கொள்வான். அவை மக்கள் நலனிலிருந்து முரண்படுவதையும் உணர்வான். இத்தகைய முயற்சிகளிலிருந்து உண்மையை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் அவனது நோக்கம் நிச்சயம் தோற்றுத்தான் போகும்; ஆனால் படம் பார்ப்பவர்களிடம் உலகமயம் உருவாக்கிவரும் நச்சுப்பண்பாட்டுச் சூழலை அதற்குரிய அரசியல் வார்த்தைகள் இல்லாமல் வாழ்க்கையின் மூலமே உணர வைத்துச் சிந்திக்க வைக்கும் நோக்கத்தில் நாம் வெற்றியடைய இயலும்.

நாம் மக்களிடம் உருவாக்க விரும்பும் கண்ணோட்டம் அல்லது சொல்ல விரும்பும் செய்தி, திரைக்கதை என்ற வாகனத்தில் ஏற்றப்படும் சுமையாக மாறிவிடக் கூடாது. ஒருவேளை திரைக்கதையுடன் இயைந்த முறையில் நமது கருத்து சொல்லப்படுவதாக இருந்தாலும் கூட, அந்தக் கதையானது குறிப்பிட்ட பிரச்சினையில் மக்கள் கொண்டிருக்கும் புரிதலையும் கண்ணோட்டத்தையும் கவனமாகக் கணக்கில் கொள்ள வேண்டும். இல்லையேல், இந்தப் படத்தின் கதாநாயகன் சொல்வதைப் போல, "அவ என்னமோ சீரியலா சொல்றாடா, நமக்குத்தான் ஒண்ணும் புரியல" என்ற நிலை பார்வையாளர்களுக்கும் ஏற்பட்டுவிடும்.

இது இத்திரைப்படத்திற்குச் சொல்லப்படும் விமரிசனம் மட்டுமல்ல, சமூக மாற்றம் குறித்த உண்மையான அக்கறை கொண்ட படைப்பாளிகள் ஒவ்வொருவரும் கவனத்தில் கொள்ள வேண்டிய விசயம். தனது அரசியல் சமூக உணர்வில் நேர்மையைக் கொண்டிருக்கும் இயக்குநர் இந்த விமரிசனங்களைப் பரிசிலிப்பார் என்று உறுதியாக நம்புகிறோம்.

அடிப்படையில் தான் ஒரு புரட்சிக்காரன் என்றும் வணிகச் சினிமாவின் நிர்ப்பந்தங்கள் காரணமாகத்தான் சில சமரசங்கள் செய்ய நேர்ந்து விடுகிறது என்றும் தங்களை நியாயப்படுத்திக் கொண்டிருக்கும் போலிகள் நிறைந்த தமிழ்த் திரையுலகில், தான் சொல்ல விரும்பிய அரசியல் கருத்தை வணிக சமரசங்களுக்கு இடம் கொடுக்காமல் சொல்ல முனைந்திருக்கும் இயக்குநரின் நேர்மை பாராட்டத்தக்கது.

இந்தத் திரைப்படம் ஓடிக் கொண்டிருக்கும் சென்னைத் திரையரங்கு ஒன்றில் நாயகனாக நடித்திருக்கும் ஜெய்சக்தி எனும் அறிமுக நடிகருக்கு அதற்குள் அகில இந்திய ரசிகர் மன்றம் துவக்கப்பட்ட சுவரொட்டிகள் நிறைய ஒட்டப்பட்டிருந்தன. சினிமாவின் அரசியல் இவ்வளவு மலிவாக இருக்கும் போது மக்களுக்கான அரசியலை வணிகச் சினிமாவின் வழியே சொல்ல முடியுமா என்ற கேள்வியையும் இயக்குநர் பரிசீலிக்க வேண்டும்.

• அஜித்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்டர்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.
புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புக்கள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)

REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87

Regd. No: TN / CCN / 84 / '06-'08

www.padippakam.com










"உலக மேலாதிக்கப் போர்வெறியன் புஷ்ஷைத் தூக்கிலிடுவோம்"
என்ற முழக்கத்தின் கீழ் ம.க.இ.க, வி.வி.மு, பு.மா.இ.மு, பு.ஜ.தொ.மு
அமைப்புகளின் சார்பில் தமிழகமெங்கும் கண்டன ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் நடைபெற்றன.
தமிழகத்தின் முச்சந்திகளிலெல்லாம் தூக்கிலிடப்பட்டன புஷ் உருவப்பொம்மைகள்!

படிப்பகம்